Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 261

ஞாயிற்றுக்கிழமை
14 ஒகஸ்ட் 2022

ஆடி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16+08

விலை: 60/=



"சோழியன் குடுமி சும்மா ஆடேலை எண்டு பிரதமரே சொல்லிப் போட்டாரே..."

போலி உறுதி மூலம்

## காணி விற்பனை மோசடி; பாதிக்கப்பட்டோர் முறையிடுக

### வடக்கு ஆளுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக. 14
வட மாகாணத்திலுள்ள தமது காணிகளை மோசடியாக ஆக்கிரமிக்கப்பட்ட அல்லது போலியான உறுதிப்பத்திரங்களால் ஏமாற்றப்பட்ட காணிஉரிமையாளர்கள் தமது விவரங்களை யாழ்ப்பாணத்தில் உள்ள வட 15

## 46 தமிழ் அரசியல் கைதிகளுக்கு விரைவில் விடிவு கிடைக்குமாம்

### நீதி அமைச்சர் உறுதியளித்தாரென சொல்கிறார் விக்னேஸ்வரன் எம்.பி.

கொழும்பு, ஒக. 14
சிறு குற்றங்களுக்காக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 46 தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் 15

# புலம்பெயர் தமிழர்களின் உதவிகளை எதிர்பார்த்தே தடையை நீக்குகிறோம்

### விளக்கம் கொடுக்கிறார் பிரதமர்



**கொழும்பு, ஒகஸ்ட் 14**

**புலம்பெயர் தமிழர்களையும் அவர்களது அமைப்புக்களையும் தடைப்பட்டியலில் வைத்துக்கொண்டு, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அவர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது. எனவே அவர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக முதற்கட்டமாக சில அமைப்புக்கள் மீதான தடைகளை நீக்கியுள்ளோம் - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.** 15

## கட்டுப்பாடுகளுடனேயே சீனக் கப்பலுக்கு அனுமதி

### இந்திய உறவில் விரிசல் இல்லை உருட்டுகிறார் பிரதமர் தினேஷ்

கொழும்பு, ஒக. 14
சீனக்கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குள் பிரவேசிப்பதால் இலங்கை - இந்திய உறவில் விரிசல் 15

## முட்டை, இறைச்சி விலை ஏற்றம்

கொழும்பு, ஒக. 14
முட்டை ஒன்றின் விலை 10 ரூபாவாலும் 1 கிலோ கோழி இறைச்சியின் விலை 100 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது என இலங்கை 15

## 3 புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தடையை நீக்கியது இலங்கை அரசு

### 4 அமைப்புக்கள், 388 தனிநபர்கள் மீதான தடை இன்னமும் தொடர்கிறது

கொழும்பு, ஒக. 14
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசாங்கம் 3 புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர் அமைப்புக்கள் மீதான தடையை நீக்கியுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இருப்பினும் இது தொடர்பான 15

## ரஷ்யாவிலிருந்து வந்தது மசகு எண்ணெய்க் கப்பல்

கொழும்பு, ஒக. 14
ஒரு லட்சம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் தாங்கிய கப்பல் நேற்று இரவு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. மசகு எண்ணெய் இன்று தரையிறக்கப்படவுள்ளது.
அத்துடன். ரஷ்யாவில் இருந்து 1 லட்சத்து 20 ஆயிரம் மெற் 15

## நாடு முழுவதும் இனி 5 நாள்களும் பாடசாலை

கொழும்பு, ஒக. 14
நாளை திங்கட்கிழமையிலிருந்து வாரத்தின் 5 நாள்களும் சகல பாடசாலைகளும் இயங்கும் என்று கல்வி 15

## அரச பணியாளர்களுக்கும் இனி 5 நாள்களும் வேலை?

### ஆராய்கிறது அரசாங்கம்

கொழும்பு, ஒக. 14
அரச பணியாளர்களை முன்னரைப்போன்று வாரத்தில் 5 நாள்களும் பணிக்கு அழைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. எரிபொருள் தட்டுப்பாட்டால் ஏற்பட்ட நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு. அரச பணியாளர்களைப் பணிக்கு அழைப்பது கட்டுப்படுத்தப்பட்டது. 15

## 'கியூஆர்' குறியீட்டு முறைமையை பின்பற்றாவிடின் நடவடிக்கை

### அமைச்சர் காஞ்சன எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 14
'கியூஆர்' குறியீட்டுநடைமுறைக்கு உட்படாமல் எரிபொருளை விநியோகிக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காலிமுகத்திடல் போராட்டம் தோற்றுப்போய்விடவில்லை!

## சரத் பொன்சேகா கூறுகின்றார்



**கொழும்பு, ஓக.14**
**காலிமுகத்திடலில் மேற்கொள்ளப்பட்ட போராட்டம் தோற்கவில்லை என்று தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா, போராட்டம் வேறுவடிவில் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளதாவது:
தற்போது போராட்டம் தோற்றுவிட்டது என்று பலரும் மனப்பால் குடிக்கின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தேடித்தேடிக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.
ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளர்கள் போராட்டம் தோற்றுவிட்டது, பொருளாதார நெருக்கடி தீர்ந்துவிட்டது என்று கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள்.
ஆனால் இளைஞர்களின் போராட்டம் காரணமாகத்தான் நாட்டில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.
நாளைய சந்ததிக்குத் தேவையான மாற்றங்கள் தொடர்பாகச் சிந்திக்கப்படுகின்றது. போராட்டம் தோற்றுப்போகவில்லை. அது வேறு வடிவில் முன்னெடுக்கப்படும்- என்றார். (எ-இ)



# ரெட்டாவுக்கு வந்த 5 மில்லியன் ரூபா!

## விசாரணை நடத்துமாறு அவரே கோரிக்கை

கொழும்பு, ஓக.14
இனந்தெரியாதவர்கள் தனது வங்கிக்கணக்கில் 50 லட்சம் ரூபாவை வைப்பிலிட்டுள்ளனர் என்று காலிமுகத்திடல் போராட்டத்தின் பிரதான செயற்பாட்டாளர்களில் ஒருவரான ரெட்டா எனப்படும் ரதிது சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட வங்கியில் முறைப்பாடு செய்யப்படும் என்றும், எதிர்காலத்தில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பில் சமூக வலைத்தளத்தில் அவர் பதிவிட்டுள்ள பதிவொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
போராட்டத்துக்காக தனிப்பட்ட பணத்தைச் செலவழித்தேன், தனிப்பட்ட முறையில் எதையும் பெறவில்லை. திடீரென எனது கணக்குக்கு எவ்வித அறிவிப்புமின்றி 50 லட்சம் ரூபா வைப்பிடப்பட்டுள்ளது. நான் அதை எடுத்துச் செலவு செய்த பின்னர் போராட்டம் மூலம் நிதி மோசடிக்குள் அகப்படுவேன் என்றும், டயஸ்போரா வலையில் சிக்கிவிடுவேன் எனவும் அதை வைப்பிட்டவர் திட்டமிட்டிருப்பார்.
நான் தகுதிபெற்ற கணக்காளராவேன். நான் பணத்துக்கு வளைந்து கொடுக்கக்கூடியவன் அல்லன் என உங்களுக்கு தெரியும். இதுவரையில் போராட்டத்தில் தனிப்பட்ட இலாபம் எதுவும் பெறவில்லை. எமது கைகள் 100 சதவீதம் சுத்தமாக இருந்தமையாலேயே எம்மை அடக்குவதற்கு இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் சேறு பூசும் பரப்புரைகள் தொடர்பாக அலட்சியமாக இருக்கமுடிந்தது.
தற்போது திடீரென எனது கணக்கில் 5 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டமை தொடர்பில் வங்கியில் ஏற்கனவே முறைப்பாடு செய்துள்ளேன்-என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# மன்னிப்பு ஆவணத்தில் ரஞ்சன் கையொப்பம்

கொழும்பு, ஓக. 14
ஜனாதிபதியின் மன்னிப்பு தொடர்பான ஆவணங்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நேற்றுக் கையொப்பமிட்டுள்ளார். சட்டத்தரணி தினேஷ் விதானபத்திரன இதனை உறுதிப்படுத்தியுள்ளார். ரஞ்சன் ராமநாயக்க தற்போது நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார்.
அவரை பொதுமன்னிப்பில் விடுதலை செய்வதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச இது தொடர்பில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றார். (ம-14,இ)

# காலிமுகத்திடல் போராட்டம் ஓய்ந்தாலும் வீரியத்தைக் குறைத்து மதிப்பிடலாகாது!!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 14
காலிமுகத்திடலிலிருந்து போராட்டக்காரர்கள் வெளியேறியதன் காரணமாக அவர்களது அஹிம்சைப் போராட்டத்தின் வீரியத்தைக் குறைத்து மதிப்பிடலாகாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்துள்ளார்.
கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது நாட்டின் வரலாற்றைப் பொறுத்த மட்டில் பல்வேறு காலப்பகுதிகளில் இடம்பெற்ற போராட்டங்களும் அவற்றின் விளைவாக உயிரிழப்புக்களும் பதிவாகியிருக்கின்ற போதிலும், அந்தப் போராட்டங்கள் நாட்டின் வரலாற்றை மாற்றியமைத்துள்ளன.
கடந்த ஏப்ரல் மாதம் நாட்டு மக்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த போராட்டம் ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேறுவதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றது. எனவே இத்தகைய அஹிம்சைப் போராட்டத்தின் பலத்தைக் குறைத்து மதிப்பிடவோ அல்லது மறந்துவிடவோ முடியாது.
நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டதுடன், அவரது முறையற்ற தீர்மானங்கள் மற்றும் சீரற்ற நிர்வாகம் என்பன நாடு தற்போதைய நெருக்கடிநிலைக்குத் தள்ளப்படுவதற்கான முக்கியமான காரணமாக அமைந்துள்ளது- என்றார். (ச-இ)

# பெரமுனவின் தவிசாளராக இனிமேல் மஹிந்த?

## பீரிஸ் விரைவில் நீக்கம்




பொதுஜன பெரமுன கட்சியின் தவிசாளர் பதவியில் இருந்து ஜீ.எல். பீரிஸை நீக்கி அந்தப் பதவிக்கு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளது. கட்சியின் மறுசீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் இரண்டாம் திகதி புதிய தலைவர்களை நியமிப்பதற்கான கலந்துரையாடல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந்த நிலையில், கட்சியின் தேசிய அமைப்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளது. எனினும், இதுதொடர்பான விவாதங்கள் நடைபெற்று வருவதால் எதிர்காலத்தில் இந்த நிலைப்பாடுகள் மாறலாம் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கட்சியின் ஸ்தாபகரான பசில் ராஜபக்ச மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச ஆகியோர் எந்தவொரு பதவியையும் ஏற்கப்போவதில்லை எனத் தீர்மானித்துள்ளனர் என்றும் தெரிய வருகின்றது. (ம)

# 4.3 வீதமானோர் வேலையிழப்பு!

கொழும்பு, ஓக. 14
நாட்டில் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 4.3 வீதமானோர் வேலையிழந்துள்ளனர் என்று சனத்தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
புள்ளிவிவரத் திணைக்களத்தின் தரவுகளின்படி, இந்த ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டில் 3 லட்சத்து 73 ஆயிரத்து 272 தனிநபர்கள் வேலையிழந்துள்ளனர்.
இது பொருளாதார ரீதியாக இயங்கும் மக்கள் தொகையில் 4.3 வீதமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14,இ)

## வங்கிகளூடான
# வெளிநாட்டுப் பணவருகை அரைவாசியாகக் குறைந்தது

கொழும்பு, ஓக. 14
இந்த வருடத்தின் ஜனவரி முதல் ஜூலைவரையான காலப்பகுதியை, கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டிலிருந்து வரும் பணத்தொகை அரைவாசியாகக் குறைந்துள்ளது.
கடந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூலை வரை வெளிநாட்டுத் தொழிலாளர்களின் மொத்தப் பண வருகை 3 ஆயிரத்து 777.6 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்ததுடன், இது இந்த ஆண்டு ஆயிரத்து 889.4 மில்லியன் அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளது.
இதேவேளை மத்திய வங்கியின் கூற்றுப்படி, இந்த ஆண்டின் ஜூலை மாதம் தொழிலாளர்கள் அனுப்பும் பணம் 297.5 மில்லியன் அமெரிக்க டொலராகவும், ஜூன் மாதம் 274 மில்லியன் அமெரிக்க டொலராகவும், மே மாதத்தில் 304 மில்லியன் அமெரிக்க டொலராகவும் பதிவாகியுள்ளது. (ம-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## சர்வதேச அரசியல் நெருக்கடியை உருவாக்க சில தரப்பினர் முயற்சி

### காவிந்த ஜயவர்தன எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 14

சர்வேதச ரீதியில் அரசியல் நெருக்கடியை உருவாக்க சில தரப்பினர் முயற்சித்து வருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன கவலை தெரிவித்துள் ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடு தற்போது பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், உலக வல்லரசுகளுடன் இராஜதந்திர மோதலில் ஈடுபடமுடியாது.

பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு இந்தியா ஆதரவளிப்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் ஒப்புக்கொண்டார்.

எனவே இந்து சமுத்திரத்தில் இலங்கையின் மூலோபாய நிலைப்பாடு காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி மற்றும் சர்வதேச அரசியல் குறித்து அதிகாரிகள் கவனத்திற்கொள்ளவேண்டும் - என்றார். (ம-14.இ)

# தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய அரசியல் தீர்மானம் தேவை

### ரணில் அரசாங்கத்துக்கு சாள்ஸ் எம்.பி. வலியுறுத்து



**கொழும்பு, ஓக. 14**

**'தமிழ் மக்களின் மனங்களை வெல்லக்கூடிய அரசியல் தீர்மானங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்க வேண்டும்' - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் எம்மைச் சந்திக்க அழைப்பு விடுத்தார். அதில் நாம் பங்குகொண்டோம். அந்தச் சந்திப்பில் வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியிடம் நாம் தெளிவுபடுத்தியிருந்தோம். அவருக்கு அந்த விடயங்கள் புதிய விடயங்கள் அல்ல. இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி எம்மிடம் உறுதியளித்தார்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி கூடிய கவனம் செலுத்தவேண்டும். எமது தமிழ் மக்களின் மனங்களை வெல்லக்கூடிய சில அரசியல் தீர்மானங்களை எடுக்க வேண்டிய கட்டாயம் தற்போதுள்ள அரசுக்கும் ஜனாதிபதிக்கும் ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழ் மக்களின் மனங்களை வெல்லக்கூடிய அரசியல் தீர்மானங்களை ஜனாதிபதி எடுக்கவேண்டும். உலக வல்லரசு நாடுகளுடைய அதிகாரப் போட்டித்தளமாக இலங்கையின் அமைவிடம் அமைந்துள்ளது. இதனால் உலக வல்லரசுகளின் சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது' - என்றார்.

(ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் கோண்டாவிலில் சர்வதேச கிரிக்கெட் மைதானம்

## யாழ். மாநகரசபை பரிசீலனை

**யாழ்ப்பாணம், ஓக. 14**

**யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான கோண்டாவிலில் உள்ள 11 ஏக்கர் காணியில் (தண்ணீர் விநியோகக் கிணறு அமைந்துள்ள காணியில்) சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கு அனுமதி வழங்குவது தொடர்பில் யாழ். மாநகரசபை பரிசீலிக்கவுள்ளது.**

யாழ். மாநகரசபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது, யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால், கோண்டாவிலில் உள்ள மாநகரசபையின் தண்ணீர் விநியோகக் கிணறு அமைந்துள்ள காணி சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்கப் பொருத்தமானது என இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையோ நன்கொடையாளர்களோ முன்வந்தால் அதற்கான அனுமதியை வழங்கலாமா இல்லையா என சபையில் கோரப்பட்டது.

இதுதொடர்பில் ஆராய காலஅவகாசம் தேவை என மாநகரசபை உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டதை அடுத்துசபை அமர்வுபிற்போடப்பட்டது.

வடமாகாணத்தில் சர்வதேச தரத்துடனான கிரிக்கெட் மைதானமொன்றை அமைப்பதற்கு கடந்த சில வருடங்களாகவே முன்னெடுப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. இலங்கைக் கிரிக்கெட் சபை மண்டைதீவுப் பகுதியை இதற்காகப் பரிசீலித்து பின்னர் அது கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-14,20)

# கடையில் பணம் திருடியவர் ஹெரோய்னுடன் கைதானார்


## இளவாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 14

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளவாலை சென்.யூட் பகுதியில் உள்ள கடையொன்றில் நூதனமான முறையில் ஐம்பதாயிரம் ரூபா பணத்தை திருடிய நபர், நேற்றுமுன்தினம் மாலை ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:- இளவாலை சென்.யூட் பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் கடையொன்றுக்குச் சென்ற 25 வயதான இளைஞரொருவர் பொருள் வாங்குவதுபோல பாசாங்கு செய்து, கடையில் வைக்கப்பட்டிருந்த 50 ஆயிரம் ரூபாவை திருடிச் சென்றுள்ளார்.

கடையின் உரிமையாளர் இது தொடர்பில் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். இதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து, குறித்த சந்தேக நபர் நேற்றுமுன்தினம் மாலையே கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 120 மில்லிகிராம் ஹெரோய்னும் மீட்கப்பட்டுள்ளது. அவரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-125)



# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 14

கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளது என்று பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

எனவே நுளம்பு ஒழிப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றாத அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-14,இ)

# இளங்கலைஞர், 'யாழ் ரத்னா' விருதுகளுக்கு விண்ணப்பிக்குக

யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையால் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைகள் கருதி, வருடா வருடம் வழங்கப்படுகின்ற விருதாகிய இளங்கலைஞர் விருது, யாழ் ரத்னா விருது என்பவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விருதுகளுக்கு கவிதை, சிறுகதை, நாவல், நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், குறும்படத்துறை, இசை நாடகம், வாத்தியக்கலை (தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம் போன்றன) கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்து நடை), கிராமியக்கலைகள் (கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி போன்ற கலைகள்), இசைக்கலை (வாய்ப்பாட்டு, பண்ணிசை, இசையமைப்பு) ஒப்பனைக்கலை (நாடகங்கள், கூத்துக்கள், நடனக்கலைத்துறைகளுக்கானவை) வாத்தியங்கள் உருவாக்கம் ஆகிய துறைகளில் யாழ்ப்பாணப் பிரதேச செயலகப்பிரிவில் கலைப்பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதற்கமைய இளங்கலைஞர் விருதுக்கு 18 - 40 வயதுக்குட்பட்ட ஏற்கனவே இளம் கலைஞருக்கான கலைத்துறைச் சான்றிதழ் மற்றும் இளங்கலைஞர் விருது பெற்றுக்கொள்ளாத யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களும் யாழ் ரத்னா விருதுக்கு 60 வயது பூர்த்தியடைந்த யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட இதுவரை இந்த விருதைப் பெற்றுக்கொள்ளாதவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையை சான்றுப்படுத்தும் ஆவணப்பிரதிகளுடன் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாண பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார். (ம-4)

# கைவிடப்பட்ட களஞ்சியத்தை மீண்டும் பயன்படுத்த முடிவு!

கொழும்பு, ஓக. 14

பொலனறுவை மற்றும் வெலிகந்தை பிரதேசங்களில் கைவிடப்பட்டுள்ள எண்ணெய்க் களஞ்சியங்களை மீண்டும் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து மற்றும் தகவல், ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன அதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

பொலனறுவை ரயில் நிலையம், வெலிகந்தை ரயில் நிலையப் பகுதிகளில் அமைச்சர் பந்துல குணவர்த்தன கண்காணிப்புப் பயணம் ஒன்றை நேற்றுமுன்தினம் முன்னெடுத்தார்.

அங்கு கைவிடப்பட்டிருந்த இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எண்ணெய்க் களஞ்சிய தாங்கிகள் தொடர்பாக அவர் கவனம் செலுத்தியதுடன், அவற்றை மீளச் சீரமைத்து பயன்பாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போதைக்கு புதர்கள் மற்றும் காட்டுக்குள் கைவிடப்பட்டுள்ள இந்தத் தாங்கிகளில் பொலனறுவைக்கு அருகே மூன்று லட்சம் லீற்றர் எரிபொருள் மற்றும் வெலிகந்தைக்கு அருகே இரண்டு லட்சத்து எழுபதாயிரம் லீற்றர் எரிபொருள் சேமித்து வைக்கமுடியும் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. (எ-இ)

# நியாயமற்ற விலையுயர்வு: நிறுவனங்களுக்கு விசாரணை

கொழும்பு, ஓக. 14

நியாயமற்ற முறையில் விலையை அதிகரித்த, கட்டுமான மற்றும் மூலப்பொருள்கள் உற்பத்தி நிறுவனங்கள் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளன என்று வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக சீமெந்து, கம்பிகள், மணல் மற்றும் ஏனைய கட்டுமானப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. விதிமுறைகள் ஏதுமின்றி விலைவாசியை தாறுமாறாக உயர்த்தியுள்ள கட்டுமான நிறுவனங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நியாயமற்ற முறையில் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்தால் விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# பொருளாதார ஈடுபாட்டுக்கு மத்தியவங்கி தனிக்குழு

கொழும்பு, ஓக. 14

இலங்கை மத்தியவங்கி பொருளாதாரத்தின் முக்கியமான ஆர்வலர்களுடன் தனது ஈடுபாட்டை விரிவுபடுத்தும் நோக்குடன் 17 பேர் கொண்ட ஆர்வலர் ஈடுபாட்டுக் குழுவை நியமித்துள்ளது.

முன்னர் செயற்பட்ட இலங்கை மத்தியவங்கியின் நாணயக் கொள்கை ஆலோசனைக் குழு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு ஆலோசனைக் குழு என்பவற்றை மாற்றீடு செய்து இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்கு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறையின் பொருளியல் பேராசிரியர் சிறிமால் அபேரத்ன தலைமை வகிக்கின்றார். அத்துடன் தனியார்துறை மற்றும் கல்வித்துறை சேர்ந்த நிபுணத்துவமிக்க 17 பேர் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-14,இ)

# தனியான எரிபொருள் இறக்குமதி: திருத்தச்சட்டம் வர்த்தமானியில்!

கொழும்பு, ஓக. 14

எரிபொருள் விசேட ஏற்பாடுகள் திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

எரிசக்தி அமைச்சரின் பணிப்புரைக்கமைய, கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், எரிபொருள் விசேட ஏற்பாடுகள் சட்டத் திருத்தத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

பொருளாதாரத்தில் குறிப்பிட்ட துறைகள் தங்களுக்குத் தேவையான எரிபொருளைத் தனித்தனியாக இறக்குமதிசெய்து பயன்படுத்திக் கொள்ளும் வகையில் எரிபொருள் விசேட ஏற்பாடுகள் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, எரிபொருள் இறக்குமதிக்கு முறையாக அடையாளம் காணப்பட்ட துறைகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது. (ம-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## போராட்டக்களம் பதவிக்கல்ல!

“இனவாதமற்ற சமூகத்தை உருவாக்க வேண்டுமாயின் குறைந்தபட்சம் பிரதமர் பதவிக்கேனும் தமிழர்கள் அல்லது முஸ்லிம்களை நியமிக்கவேண்டும். ஆனால், அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் ஏற்படாமை கவலைக்குரியது'' என்று நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்துள்ளார் அமைச்சர் ரமேஷ் பத்திரண. பெரமுனவின் எம்.பி.யும் டலஸ் அணியைச் சேர்ந்தவருமான டிலான் பெரேராவும் இதே சாரப்படலான கருத்தை வலியுறுத்தியுள்ளார். அவர், அத்துடன் நின்றுவிடாமல், ஒருபடி மேலேசென்று 'சபாநாயகர் பதவி முஸ்லிம் ஒருவருக்குக் கொடுக்கப்பட வேண்டும்' என்றும் குரல் கொடுத்துள்ளார்.

இனவாதச் சாக்கடையில் இருந்து வெளியே வரவேண்டுமாயின், நாட்டில் நிலைபேறான அபிவிருத்திகள் ஏற்படவேண்டுமாயின், இவ்வாறான மாற்றங்கள் தேவைதான். இனவாதத்தாலும் அதன் விளைவான குருதிச் சகதியிலும் தோய்ந்தெழுந்தவர்கள் என்ற ரீதியில் இப்படியான மனமாற்றம் பெரும்பான்மையினத்தவரிடையே ஏற்பட்டுவிடாதா என்று தமிழர்களும் காத்திருக்கின்றனர்தான். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால், கொடிய யுத்தத்தை முன்னெடுத்த – சர்வதேசத்தால் இனப்படுகொலையாளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள ராஜபக்சக்களுக்கு வலிந்து முட்டுக்கொடுத்தவர்களும் ராஜபக்சக்களைப் பலப்படுத்தியவர்களுமான பெரமுனவினரிடத்தில், வெறும் மூன்றே வாரங்களுக்குள் ஏற்பட்டுள்ள இந்தத் திடீர் மாற்றம் மகிழ்ச்சிக்குப் பதிலாக சந்தேகங்களையே எழுப்புகின்றது.


காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தக் கோரியும், அவர்களுக்கு நீதியை வலியுறுத்தியும் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் போராட்டம் நேற்றுமுன்தினம் இரண்டாயிரமாவது நாளை நிறைவு செய்திருக்கின்றது. இரண்டாயிரம் நாள்கள் தொடர்ச்சியாகவும் சுழற்சி முறையிலும் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் சர்வதேசக் கவனக்குவிப்பை கடந்த சில தினங்களாக கனதியாகவே பெற்றிருக்கும். அதேபோல், இந்தப் போராட்டத்தின் தாற்பரியம் நாடாளுமன்றத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களின் கவனவீர்ப்பு நடவடிக்கை மூலம் எதிரொலித்தது. இப்படியொரு பின்னணியில்தான் பெரமுனவினர் இன நல்லிணக்கத்தைப்பற்றி முன்னெப்போதும் இல்லாத வகையில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரிய மக்கள் போராட்டத்துக்கு ரணில் அரசாங்கம் என்ன பதிலை வழங்கியிருக்கின்றது? என்ன பதிலை வழங்கப்போகின்றது? என்ற கேள்விகளுக்கான பதில்களை, செப்ரெம்பர் 12ஆம் நாள் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் ஆராயவுள்ளது. இந்த நிலையில், அந்தப் பேரவை நிச்சயம் இலங்கை நாடாளுமன்றத்தின் சமீபத்திய நகர்வுகள் தொடர்பில் கழுகுப்பார்வையைக் கொண்டிருக்கும். ஆதலால், ரணில் அரசாங்கத்துக்கு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையைத் திருப்திப்படுத்தவும், எதிர்கால நம்பிக்கையொன்றைக் கொடுக்கவேண்டியதுமான தவிர்க்க முடியாத தேவை தற்போது இருக்கவே செய்கின்றது. அந்தத் தேவையின் பாற்பட்ட முன்னெடுப்புகளே நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எதிரொலித்த திடீர் நல்லிணக்க அறிவிப்புகளன்றி வேறில்லை.

எல்லாவற்றுக்கும் மேல், இரண்டாயிரம் நாள்களாக தமது வயோதிபத்தையும் பொருட்படுத்தாமல், கொட்டும் மழைக்குள்ளும் சுட்டெரிக்கும் வெயிலிலும் போராட்டக்களத்தில் 121 உயிர்களைப் பறிகொடுத்து இடம்பெறும் இந்த மக்கள் போராட்டம், வெறுமனே பிரதமர்பதவிக்கோ அல்லது சபாநாயகர்பதவிக்காகவோ அல்ல. 'காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது?' என்பதே கேள்வி. கேள்வி எதுவோ பதிலும் அதற்குத்தான் தேவை. இந்த அடிப்படைப் புரிதலை பெரமுனவினர் முதலில் ஏற்படுத்திக்கொள்ளட்டும். அதன் பின்னர் அவர்கள் இனநல்லிணக்கம் பற்றி நீலிக்கண்ணீரைத் தாராளமாக வடிக்கலாம்.

**நாளொரு நல்வார்த்தை**

“எனக்கு நிறைய பிரச்சினைகள் உண்டு, ஆனால் என் உதட்டுக்கு அதெல்லாம் தெரியாது. அது சிரித்துக்கொண்டுதான் இருக்கும்” - **சார்லி சப்ளின்**




# காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடிய 121 உறவுகள் உயிரிழப்பு!

## இதுவொரு அரச படுகொலை என்று வினோ எம்.பி. சபையில் முழக்கம்

**கொழும்பு, ஓக. 14**

**காணாமற்போன தமது உறவுகளைத் தேடிப் போராடிய உறவுகளில் 121 பேர் இதுவரையில் மரணித்துள்ளனர். இது சாதாரண மரணமல்ல. இதுவும் அரசின் ஒரு படுகொலைதான். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராத லிங்கம் குற்றஞ்சாட்டினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதியின் சிம்மாசன உரை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமது காணாமற்போன உறவுகளுக்காக 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி அந்த மக்கள் வீதிகளில் தொடங்கிய போராட்டமானது இன்று இரண்டாயிரம் நாள்களைக் கடந்து 121 பெற்றோரை,உறவுகளை இழந்து முன்னெடுக்கப்படுகின்றது. அந்தப் போராட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் இந்தச் சபையில் முழுமையான ஆதரவைத் தெரிவிக்கின்றோம்.

உயிரிழந்த 121 பேரும் போராட்டக்களத்தில் இருந்தவர்கள். அவர்கள் நோய்வாய்ப்பட்டு மரணித்துள்ளனர். இந்த மரணங்களைச் சாதாரணமாக விட்டுவிட முடியாது. இந்த மரணங்களும் இந்த அரசினுடைய படுகொலைப் பட்டியலில் வரவேண்டிய விடயம். 121 உறவுகளும் மரணிக்கவில்லை. கொல்லப்பட்டார்கள். அவர்களை வீதிகளில் இறங்கிப் போராட வைத்து இந்த அரசு கொன்றுள்ளது. இதற்கு அரசு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்" - என்றார். (ம-22)




நாளை
15.09.2022
திங்கட்கிழமை
ஆடி 30
சுபநேரம் : 12.05 - 01.35
ராகுகாலம்: 07.35 - 09.05
புனித கன்னிமரியாள் விண்ணேற்புப் பெருவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்



## குணசிங்கம் செந்தில்வேல்

**தோற்றம் : 27.12.1971** **மறைவு: 12.08.2022**

பத்திரகாளி கோயிலை பிறப்பிடமாகவும், அச்சுக்கூடம் வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குணசிங்கம் செந்தில்வேல் கடந்த (12.08.2022) வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஆனந்தபவானியின் அன்புக் கணவரும், அமரர் குணசிங்கம் மற்றும் கமலாதேவியின் அன்பு மகனும், நடராஜா பக்தர் அன்னலட்சுமியின் மருமகனும், தேவகி (ஆசிரியை), தயாளன், குணாளன், ஜானகி (லண்டன்), மலர், அபிராமி (லண்டன்) ஆகியோரின் சகோதரனும், ராஜ்மோகன் பக்தர், ராஜயோகி (வசந்தா), அமரர் ஸ்ரீ ராஜபாலன் (ஸ்ரீ), அமரர் குகனேஸ்வரன் (குகன்), அமரர் ஆனந்தராசா (ஆனந்தன் சிற்பம்/ ஒற்றுறுக்கலைஞன்), சுந்தரலட்சுமி (ராசாத்தி), அமரர் ராஜபாலா, அமரர் ஆனந்தகுமார், முருகானந்தர், டேவிட், பார்த்தீபன், உமாமகேஸ்வரி, ரவிந்திரன், தர்மதாஸ் (உதயன்), சொர்ணலட்சுமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அச்சுக்கூடம் லேன், கொக்குவில்.**
**077 6643965 / 077 0077714**

**தகவல்:**
**ராஜ்மோகன்**
**அன்பு மனைவி (பவுண்)**

(CR 37041) (1-6)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 . 03 . 1945 | 24 . 06 . 2022 |

கடந்த 24.06.2022 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

## தங்கமயில் (ராசு) நவமணி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புனிதத் தீர்த்தக்கரையில் கரைக்கப்படும் அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**போக்காலை வீதி,**
**இமையாணன் மேற்கு,**
**உடுப்பிட்டி.**

(CS 20383) (3/6)

**குடும்பத்தினர்**

# 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

## மங்கையர்க்கரசி ராஜாராம்

(முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் - விஞ்ஞானம், முன்னாள் விரிவுரையாளர் - தேசிய கல்வி நிறுவகம் - மகரகம, தொண்டமானாறு வெளிக்கள நிலைய உப தலைவர், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினர், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட சபையின் முன்னாள் உறுப்பினர், முன்னாள் தலைவர் - வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் )

மலர்வு
21.01.1943

உதிர்வு
05.08.2014

திதி:- தசமி (07.08.2022)

அன்பு, நேர்மை, இறைபக்தி, கடமையுணர்வு எமது குடும்ப முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட எனது அன்புத் துணைவியின் எட்டாம் ஆண்டு நினைவு தினமாகிய கடந்த (07.08.2022) ஞாயிற்றுக்கிழமை ஆடிவளர்பிறை தசமி திதியில் நினைவு கூர்ந்து எல்லாம் வல்ல கௌரி அம்பாள் சமேத திருக்கேதீஸ்வர பெருமானதும் சாவகச்சேரி கற்குழி அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் பெருமானதும் பாதாரவிந்தங்களை அடைய மனதாரப் பிரார்த்திக்கும்....

**இல.06, கற்குழி,**
**முதலாம் ஒழுங்கை,**
**தபாலக வீதி ஊடாக சாவகச்சேரி.**
**021 227 1493, 077 723 8528**

**இ.ராஜாராம்**
**(பாசமிகு கணவர் - சமாதான நீதிவான்)**
**அன்புத் தம்பிமார், அன்புத் தங்கை,**
**மைத்துனி, மைத்துனர் மற்றும் மருமக்கள்.**

(தவிர்க்க முடியாத காரணத்தால் கடந்த (07.08.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று பிசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

(cr.37033) (3.6)

# தேசிய சோல்ற் லிமிட்டெட் வேலைவாய்ப்புகள்

தேசிய சோல்ற் லிமிட்டெட் என்பது கைத்தொழில் அமைச்சின் அதிகாரத்தின் கீழ்செயற்படும் ஒரு அரச உடைமைக் கம்பனியாகும். ஆணையிறவு உப்பளத்தில் பணியாற்றுவதற்காக நிரந்தர அடிப்படையிலான பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| வகையறா | பதவி | சம்பள குறியீடு | அளவு | நிலையம் |
|---|---|---|---|---|
| 01 | மெக்கானிக் | PL -03 | 01 | ஆணையிறவு உப்பளம் |
| 02 | இலெக்ரீஷியன் | PL -03 | 01 | ஆணையிறவு உப்பளம் |

**தேவையான தகைமைகள்:**

**<u>வெளிவாரி விண்ணப்பதாரிகள்</u>**

**<u>தொழிற்தகைமை:-</u>**

தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அனுமதிக்கப்பட்ட பொறிமுறை / தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை மட்டம் 4 இற்கு கீழ்ப்படாத ஒரு திறமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் அதற்குச் சமமான தகைமை.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் :**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

வணிகத் தேர்வில் நிரூபிக்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகுதி நிலை இரண்டுக்கு (02) குறையாத திறன்களுடன் தொடர்புடைய துறையில் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை மேற்கொண்டுள்ள ஆரம்ப மட்டம் அரை பயிற்சி பெற்ற (PL 2) அல்லது பயிற்சி பெறாத (PL 1) பணியாளர்கள்.

**சம்பளம் :**

ஆரம்ப மட்டம் பயிற்சி பெற்ற PL 3 -2016: 26,290, 10x270, 10x300, 10x330, 12x350 = 39,490 மற்றும் வாழ்வாதார கொடுப்பனவு ரூ.7800. மற்றும் விசேட கொடுப்பனவாக ரூ.5000 வழங்கப்படும்.

**வயது :**

18 வயதுக்கு குறையாத 45 வயதுக்கு மேற்படாதவர்கள். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லைகள் கிடையாது.

**ஏனையவை:**

**அனைத்து விண்ணப்பதாரிகளும்**

i. இலங்கைப் பிரஜையாகவிருத்தல்
ii. உடல், உள ஆரோக்கியம் மிக்கவர்களாகவும் உரிய பதவிக்குரிய பணிகளை முழுமையாக மேற்கொள்ளக்கூடியவர்களாகவும் இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் பணியாற்றக்கூடியவர்களாகவும் இருத்தல்.
iii. சிறந்த முன்னுதாரணமானவராக காணப்படல்.

சுயவிபரக்கோவையை சான்றிதழ்களின் பிரதிகளுடன் 29.08.2022 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும். பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவர் என்பதை கருத்திற்கொள்ளவும்.

**தலைவர்,**
**தேசிய சோல்ற் லிமிட்டெட்,**
**இல.561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 05.**

(cr.37045) (2.6)

# மரண அறிவித்தல்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 10 - 07 - 1944 | 07 - 08 - 2022 |

## அதிஸ்டலெட்சுமி கருணாகரன்

யாழ். அரியாலை மலர்மகள் வீதியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட அதிஸ்டலெட்சுமி கருணாகரன் அவர்கள் கடந்த (07-08-2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற மயில்வாகனம், கண்மணி தம்பதிகளின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்ற கைலாசபிள்ளை, அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், கருணாகரன் அவர்களின் அன்பு மனைவியும், சுகுணா, ரமேஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம் (ஐக்கிய அமெரிக்கா), சீதாலெட்சுமி மற்றும் குமாரராணி, கமலாதேவி, விஜயலெட்சுமி (இலங்கை), மகாலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மங்கையர்கரசி, வரதாம்பிகை, ஸ்ரீதரன் (லண்டன்), தர்மகுலசிங்கம், பவானி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த (13.08.2022) Frinday 05:00PM - 08:00 PM Directors 231 - 235 Chaplin Rd, Wembley HA0 4UR, United Kingdom இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை (15.08.2022) 9.00 AM - 11.00 AM Home 17, Newton Road, Wembley HAO4EU இல் நடைபெறும் தகனக்கிரியைகள் 15.08.2022 12:00 PM - 1.00Pm Golders Green Crematorium 62 Hoop Ln, London NW 117NL, UK இல் நடைபெறம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**கருணாகரன் (கணவர்) (பிரித்தானியா)**
**+447933 353402**
**சுகுணா (மகள்) - +447949009163**
**ரமேஸ் (மகன்) : +447958924994**

(CS 45945) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணுக்காய் பிரதேசத்தில்

# தண்ணீர், போக்குவரத்து இல்லாமல் மக்கள் அவதி

## சீர்செய்யுமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு ஓக. 14

**முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேசத்துக்குட்பட்ட ஆரோக்கியபுரம் மற்றும் அமைதிபுரம் கிராமங்களில் வாழும் சுமார் 147 குடும்பங்கள் குடிதண்ணீர் மற்றும் போக்குவரத்து வசதியின்றி பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இதுதொடர்பில் அந்தப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்ததாவது:- ஆரோக்கியபுரம் மற்றும் அமைதிபுரம் கிராமங்களில் சுமார் 147 குடும்பங்கள் வசிக்கின்றன. ஆயினும் இரண்டு பொதுக்கிணறுகள் மாத்திரமே குடிதண்ணீருக்கான பயன்பாட்டில் உள்ளன. தற்போதைய வறட்சி காரணமாக அவற்றில் ஒரு கிணற்றின் தண்ணீர் வற்றிப்போயுள்ளது. மற்றைய கிணற்றிலிருந்து நாளாந்தம் குறிப்பிட்ட அளவு தண்ணீரை மாத்திரமே பெறலாம். இதனால் குடிதண்ணீரை நீண்டதூரம் சென்றே எடுத்துவர வேண்டியுள்ளது. அத்துடன் எமது கிராமங்களில் போக்குவரத்து வசதிகளும் இல்லாத நிலை காணப்படுகிறது. எனவே போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. எமது கிராமத்தில் குடிதண்ணீரின்மை, போக்குவரத்து வசதிகளின்மை காட்டு யானைகளின் தொல்லை எனப் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றோம். எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்திலெடுத்து உடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் -என்றனர். (ம-113)



# 749 உழவு இயந்திரங்களுக்கு டீசல் விநியோகம்

சாவகச்சேரி, ஓக. 14

பெரும்போக நெற்பயிர்ச்செய்கையை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சுமார் 749 உழவு இயந்திரங்களுக்கு நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை டீசல் விநியோகிக்கப்பட்டது. அத்துடன் தொடர்ச்சியாக தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள உழவு இயந்திரங்களை வைத்திருக்கும் ஏனையவர்களுக்கும் டீசல் விநியோகிக்கப்படும் என நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையத்தின் உரிமையாளர் சிவராசா தெரிவித்தார். (ம-14-20)

# வீட்டில் எரிபொருள் பதுக்கல் முல்லையில் ஒருவர் கைது!



முல்லைத்தீவு, ஓக. 14

முல்லைத்தீவு செம்மலைப் பகுதியில் வீட்டில் எரிபொருளை பதுக்கி வைத்திருத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வீடுகளில் எரிபொருள் பதுக்கல் இடம்பெறுகின்றது எனக் கிடைத்த தகவலுக்கு அமைய முல்லைத்தீவு பொலிஸாரால் விசேட சுற்றிவளைப்புச் சோதனை நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து 45 லீற்றர் டீசல், 21 லீற்றர் பெற்றோல் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் எரிபொருளை பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில் 50 வயதுடைய ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்தனர். சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-19)

# அதிபர் தாக்கியதில் மாணவனுக்கு காயம்

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் தரம் 5இல் கல்வி கற்றுவரும் 10 வயது மாணவனை பாடசாலை அதிபர் தாக்கியதில் மாணவன் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

கடந்த 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாடசாலைக்குச் சென்ற மாணவன், பாடசாலை இடைவேளை நேரத்தில் அருகிலுள்ள கடைக்குச் சென்று அங்கு உணவுப்பொருள்களை வாங்கி வந்துள்ளான். அதன்போது மாணவனைக் கண்ட அதிபர் அவனை வரவழைத்து உணவுப்பொருள்களை வாங்க எங்கிருந்து பணம் கிடைத்தது? எனக்கேட்டு பிரம்பினால் தாக்கியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. பாடசாலை முடிந்து வீடு சென்ற மாணவனின் உடலில் காணப்பட்ட தழும்புகளைக் கண்டு பெற்றோர் அவனிடம் விசாரித்தபோது பாடசாலையில் நடந்த சம்பவத்தைத் தெரிவித்ததையடுத்து, பெற்றோர் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து அதிபரைக் கைதுசெய்ய காத்தான்குடிப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-14)

மடுப்பெருவிழா சனநெருக்கடி

# எரிபொருளைச் சேமிப்போர் கவனத்துடன் கையாளவும்

## மன்னார் மாவட்டச் செயலர் அறிவுறுத்து

மன்னார், ஓக. 14

மடுமாதா பெருவிழாவுக்கு வெளிமாவட்டங்களிலிருந்து வருகைதருவோர், தாம் சேமித்து வரும் எரிபொருளைப் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும். இதன்மூலம் அசம்பாவிதங்களைத் தவிர்க்க முடியும் என மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மடுப்பெருவிழாவுக்காக பல்லாயிரம் பக்தர்கள் மடுத் திருத்தலத்துக்கு நாளுக்குநாள் வருகை தந்தவண்ணமுள்ளனர். எரிபொருள் நெருக்கடியைக் கருத்திற்கொண்டும், தேவையற்ற அலைச்சலைத் தவிர்க்கும் வகையிலும் அவர்கள் தம்முடன் தமக்குத் தேவையான எரிபொருளையும் எடுத்து வருகின்றனர். அவ்வாறு எரிபொருளைக் கொண்டுவருவோர் அதை மிகமிகக் கவனத்துடன் கையாள வேண்டும். களஞ்சியப்படுத்தலில் உச்சக்கட்ட விழிப்புணர்வைக் கைக்கொள்ளவேண்டும். மீண்டும் கொரோனாத் தொற்றுப் பரவல் தலைதூக்கியுள்ள நிலையில் பெருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்கள் முகக்கவசம் அணிதல் கட்டாயமாகும்.

அத்துடன் இந்தத் திருவிழாவுக்கான சகல ஏற்பாடுகளும் திணைக்களங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது -என்றார். (ச-60)

# பல்வேறு திருட்டுக்கள் நால்வருக்கு மறியல்!

கிளிநொச்சி, ஓக. 14

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சிப் பகுதியில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதாகிய நால்வர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த பகுதியில் மேற்கொண்ட சுற்றுவளைப்பு சோதனையிலேயே இவர்கள் கைதாகியுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புகளின்போது, வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாத பெருமாள் ஆலய திருப்பணி அபிவிருத்தி வேலைக்காக வைக்கப்பட்டிருந்த இரும்புக் கேடர்களைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் இராமநாதபுரம் பகுதியில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பசு மாட்டை திருடிய குற்றச்சாட்டில் ஒருவரும், அதேபகுதியில் தண்ணீர் இறைக்கும் பம்பியைத் திருடிய குற்றச்சாட்டில் மற்றுமொருவரும், வட்டக்கச்சி கல்மடுப் பகுதியில் 4 சைக்கிள்களைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அனைவரையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ச-113)

# மாணவர் துஷ்பிரயோக காணொலி விற்பனை!

## சந்தேகநபருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஓக. 14

காலியிலுள்ள பிரபல ஆண்கள் பாடசாலையொன்றின் மாணவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார், அது தொடர்பான காணொலிகளை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.


உனவடுன, மெதரம்ப சதாரா மகா தேவாலயத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு குற்றப்புலனாய்வுப்பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட மாணவர்கள் 9 முதல் 12 வயதுக்கு உட்பட்டவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் குறித்த மாணவர்களைத் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தி அதனைப் படம்பிடித்து வெளிநாடுகளுக்கு விற்பனை செய்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர் செய்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



இடைக்குறிச்சி கிழக்கு, வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்
## அண்ணாமலை இரத்தினசிங்கம்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் கிரியைகள் இன்று (14.08.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது அத்தருணத்தில் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைததொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:** இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

பிறப்பு 26.04.1963 — இறப்பு 26.07.2021

இடைக்குறிச்சி,
வரணி.

குடும்பத்தினர்

(cs.45954) (2.6)

# மரண அறிவித்தல்

## நமசிவாயம் ஜெகதீஸ்வரன் (ஈசன்)



தோற்றம் 08.08.1964 — மறைவு 04.08.2022

யாழ். சங்கானை அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வசிப்பிட மாகவும், தற்போது பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் ஜெகதீஸ்வரன் அவர்கள் கடந்த (04-08-2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம், பூமணி (கனடா) தம்பதிகளின் அன்பு மகனும், யாழ். பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம், தங்கேஸ்வரி தம்பதி களின் அன்பு மருமகனும், நிர்மலா அவர்களின் அன்புக் கணவரும், அனுஷன் அவர் களின் பாசமிகு தந்தையும், அன்னலஷ்சுமி (செல்வி - கனடா), காலஞ்சென்ற மகேஷ்வரன், ஜெயராணி (கனடா), திருமால் (லண்டன்), கொங்காதரன் (சிவா - லண்டன்), ஜெயதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயநேசன் (கனடா), யோகாமாலினி (பிரான்ஸ்), சுரேஸ் (கனடா), தயாளினி (லண்டன்), குமுதினி (லண்டன்), பாலேஸ்வரன் (லண்டன்), சிவராஜ் - விஜயா (நியூசிலாந்து), மோகன்- திலகா (இலங்கை), அருள் - ரேவதி (இலங்கை), விமலா - சூரி (சுவிஸ்), ராஜன் (இலங்கை), காண்டீபன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆரபி, ஆரிஸ், அஞ்சலன், ஆதிரா, ஆதித்தியா ஆகியோரின் அன்பு மாம னாரும், ராகுல், அஸ்வின் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அபிநாஸ், அக்ஷயா, ஆத்விக் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், அலெக்சனா, நிரோஷ், ரிதுசன், நிந்துஷா ஆகியோரின் அன்பு மாமாவும், அர்ச்சனா, அபிநயா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

**பார்வைக்கு**
Saturday, 13 Aug 2022 4:00 PM - 8:00 PM 445 Kenton Rd, Harrow HA3 0XY, UK

**இறுதிக்கிரியைகள்**
Tuesday, 16 Aug 2022 11:30 AM - 3:00 PM 366A Stag Ln, London NW9 9AA, United Kingdom

**தகனம்**
4:00 PM - 5:00 PM Holders Hill Rd, London NW7 1NB, UK,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

தொடர்புகளுக்க:

| | | |
|---|---|---|
| நிர்மலா | - மனைவி | Mobile : 0044 7405 428 872 |
| உதயநேசன் | - மைத்துனர் | Mobile : 001 416 648 13 94 |
| கொங்கன் (சிவா) | - சகோதரன் | Mobile : 0044 7852 183 561 |
| திருமால் (திரு) | - சகோதரன் | Mobile : 0044 7917 800 774 |
| பாலேஸ் | - மைத்துனர் | Mobile : 0044 7919 371 907 |
| காண்டீபன் | - மைத்துனர் | Mobile : 0094 7708 72182 |

(C) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தர பௌதீகவியல் பிரத்தியேக வகுப்புக்கள் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.
சொ.குணவர்சன் B.Sc
தொடர்புகளுக்கு : 077 5388 670

## மணமகள் தேவை

அமெரிக்காவில் வசிக்கும் 34 வயது 5'8" வைத்தியர் மகனுக்கு மணமகளை தாய் தேடுகின்றார்.

011 581 9779

## தேவை

கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள பிரபல மருந்தகத்திற்கு பயிற்சி மருந்தாளர் (Apprentice Pharmacist) அவசரமாகத் தேவை.

074 102 2255

## காசாளர் தேவை

மர தளபாட தாபனத்திற்கு காசாளர் தேவை A/L வர்த்தகம் படித்த ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**ஆர்க் தளபாட நிலையம்**
35, கொட்டைக்காடு ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு (பஸ் டிப்போ அருகில்)
021 221 9909, 077 300 1763

## நேரலை ஒளிபரப்பு

LIVE TELECAST

உங்கள் விசேட நிகழ்வுகள் அனைத்தையும் நேரலையாக கண்டுமகிழுங்கள்!

செந்தமிழன் STUDIO
077 6405572

## நீரப் பம்பி விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள நீர்ப்பம்பி விற்பனைக்குண்டு.

077 978 9752

## வீடு வாடகைக்கு

நல்லூரில் வீடு வாடகைக்கு உண்டு உத்தி யோகத்தர்கள் விரும்பத்தக்கது. (CS 45944) (3/6)

071 847 4710, 077 797 7924

## வேலைவாய்ப்பு

அலுவலக வேலைகள் (காப்புறுத்தித்துறையில்) அனுபவம் வாய்ந்த பெண்கள்) மற்றும் Accounts வேலைகள் தெரிந்த பெண்கள் Sales Rep (ஆண்) தேவை.

076 674 3807, 077 408 8241

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

நீர்வேலி இராசபாதை, சிறுப்பிட்டி மேற்கில் 21 பரப்பு காணியும் புதிய நடுத்தர வீடும் விற்பனைக்குண்டு.

077 618 0675

## ICT Classes

தரம் 9 முதல் A/L வரையான வகுப்புக்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ பட்டதாரி ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.

074 264 0468

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளநீர் தென்னை, விலும்பி, நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## வாடகைக்குண்டு

மல்லாகத்தில் இயங்கும் பார்மசி ஒன்று சகல பொருட்களுடனும் வாடகைக்கு / குத்தகைக்கு வழங்கப்படும்.

077 582 8826 (CS 20295) (3/6)

## காணி விற்பனைக்கு

யாழ். கல்வியங்காட்டு பகுதியில் அமைந்துள்ள 5 3/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 178 5276

## பணிப்பெண் தேவை

சாவகச்சேரியில் வீட்டில் தங்கியிருந்து வயோதிப் பெண்ணை பராமரிக்கக்கூடிய 45 வயதுக்குட்பட்ட பணிப்பெண் தேவை.

077 769 6771

## வீடு வாடகைக்குத் தேவை

அரச தொழில் புரியும் 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு ஆஸ்பத்திரி வீதி,கச்சேரி, கச்சேரியை அண்டிய பகுதி மற்றும் அரியாலை ஆகியவற்றிலும் மேலும் யாழ்.மாநகர சபையை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.

072 1596 978

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.நகரில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (நாள், கிழமை, மாத வாடகை) மற்றும் மாணவர்கள், வேலை செய்பவர்களுக்கு அறைவாடகைக்கு உண்டு.

077 345 0039, 077 348 0039

## வாடகைக்குண்டு

யாழ்.நகரில் நீராவியடி பிள்ளையாருக்கு அண்மையில் விசாலமான தனி அறை பெண்களுக்கு மட்டும் வாடகைக்குண்டு.

070 414 4877 (CS 20294) (3/6)

## Board of Directors for Jaffna College

"Established in 1872"

### VACANCY FOR THE POST OF PRINCIPAL OF JAFFNA COLLEGE VADDUKODAI

Applications are invited from suitable candidates for the above post. The Applicants must meet the following requirements:

**Ideal candidate will**

- possess a degree from a university recognized by the University Grants Commission with a post graduate qualification. Applicants with high academic achievements including a doctorate in the field of Education or related fields will have an added advantage.
- be a communicant member of a church belonging to the National Christian Council of Sri Lanka
- possess a minimum of ten years of secondary school teaching experience.
- possess the ability, personality and caliber to command the respect of the community.
- possess excellent leadership qualities.
- be physically fit and in good health.

Salary is negotiable. An official residence will be provided
Applications should be sent by registered post along with copies of certificates to reach within one month from the date of this advertisement to the following address:

**The Chairperson**
Selection Committee of the Board of Directors of Jaffna College
No.17, Frances Road, Colombo 06.

## நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவு

# FIBER LASER CUTTER WORK

உங்களுக்கு விரும்பிய டிசைன்களில் Fiber Laser Cutter வேலைகள் செய்து தரப்படும்

- Aluminum
- Copper
- Zinc
- Lead
- Alloy Steel
- Titanium

- Carbon Steel
- Mild Steel
- Stainless Steel
- Brass
- Cast Lorn
- Wrought Lron

எங்களிடம் சகலவிதமான உலோகதகடுகளிலும் மற்றும் உலோக பைப் வகைகளும் Design வெட்டிக்கொடுக்கப்படும்.

ARISSONA (PVT) LTD
ADVERTISING & PUBLICATION
93, Palaly Road, Thirunelvely, Jaffna.
021 222 3222, 076 141 9307
www.arissona.com | info.arisona.com

எமது இணையத்தளம் ஊடாக ஓடர் செய்பவர்களுக்கு 10% விலைக்கழிவு வழங்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 . 08 . 1958

மறைவு 15 . 07 . 2022



அமரர் செல்வராசா குமாரதேவன்

(இளைப்பாறிய நீர்ப்பாசனத்திணைக்களப் பணிப்பாளர்)

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய் பிரகாசித்து
எம்மை விட்டு இறைவனின் பாதத்தை அடைந்த
எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

15.07.2022 இல் இறையடியெய்திய எங்கள்இதயத் தெய்வத் தின் பிரிவுச் செய்தி கேட்டு வெளியூரிலும், உள்ளூரிலும் மற்றும் தொலைபேசி இலத்திரனியல் சாதனங்களின் மூலமும் நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் பல வழிகளில் உதவிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

28A, மக்கெய்சர் வீதி,
உவர்மலை, திருகோணமலை

குடும்பத்தினர்

(CS 45909) (3/6)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின்

# சத்திரசிகிச்சைக்கூடம் பயன்பாட்டுக்கு வரவில்லை

## பல மில்லியன் ரூபாவில் அமைத்தும் பயனில்லை என்று மக்கள் சுட்டிக்காட்டு

**சாவகச்சேரி ஓக. 14**

**சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சத்திரசிகிச்சைக் கூடம் இன்னமும் திறக்கப்படவில்லை. அதற்குரிய மருத்துவ நிபுணர்களும் நியமிக்கப்படவில்லை என பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

குறித்த சத்திரசிகிச்சைக்கூடத்தை அமைப்பதற்காக 2015 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டு, 2016 ஆம் ஆண்டு கட்டடத்துக்கான அடிக்கல் நடப்பட்டது. 2018 ஆம் ஆண்டு சத்திரசிகிச்சைக்கூடம் முழுமையாக நிர்மாணிக்கப் பட்டு மக்களுக்கான மருத்துவ சேவைகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் எந்த முன்னேற்றமும் இருக்கவில்லை. இதையடுத்து 2021 ஆம் ஆண்டு மின்தூக்கிகள் பொருத்தப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் சமயாசார ரீதியாக பால் காய்ச்சப்பட்டது. இதையடுத்து அங்கு வந்திருந்த துறைசார் அதிகாரிகள், இந்த வருடம் மே மாதம் தொடக்கம் சத்திரசிகிச்சைக்கூடம் இயங்கத் தொடங்கும் என்றும், ஜூன் மாதம் மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தனர். ஆனால், இன்னமும் குறித்த சத்திரசிகிச்சைக்கூடம் மக்களின் பயன்பாட்டுக்கு விடப்படவுமில்லை, மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்படவுமில்லை. இந்த நிலையிலேயே குறித்த சத்திரசிகிச்சைக்கூடம் பயன்பாட்டுக்கு வரவேண்டிய அவசியம் தொடர்பில் தென்மராட்சிப் பகுதி மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

குறித்த சத்திரசிகிச்சைக்கூடம் முழுமையாக அமைக்கப்பட்டு மருத்துவப் பணிகளை முன்னெடுக்காத பட்சத்தில், ஏ-9, ஏ-32 வீதிகளில் இடம்பெறும் விபத்துக்களால் பாதிக்கப்படுபவர்களை தொடர்ந்தும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல வேண்டியேற்படும் என்றும் தாமதமாக சிகிச்சைக்குச் சேர்ப்பதால் உயிராபத்தும் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் தென்மராட்சிப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-9)





அனலைதீவு நயினாகுளம் ஸ்ரீஹரிகரபுத்திர ஐயனார் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் இந்தத் தேர்த்திருவிழாவில் பக்திபூர்வமாகக் கலந்துகொண்டனர். (ம-9)

# மூதாட்டியின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 14

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இணுவில் மஞ்சத்தடி கொட்டம்பனை பகுதியில் உள்ள வீடொன்றில் தனிமையில் வசித்து வந்த மூதாட்டி ஒருவர் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெய்வேந்திரம் வசந்தி (வயது-62) என்ற மூதாட்டியே உயிரிழந்தவராவார். அவரது சகோதரர் மதிய உணவை வழங்குவதற்காக மூதாட்டியின் வீட்டுக்குச் சென்றபோது மூதாட்டி உயிரிழந்த நிலையில் இருப்பது அவதானிக்கப்பட்டு கோப்பாய் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-14,20)

# வீடொன்றில் திருட்டு: சந்தேகநபருக்கு மறியல்!

வீடொன்றில் பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் கைதான சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். நயினாதீவு 4 ஆம் வட்டாரப் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் கடந்த புதன்கிழமை அத்துமீறி நுழைந்து நான்கு அலைபேசிகள், இரண்டு லட்சத்து 70 ரூபா பணம் மற்றும் நகைகள் என்பவற்றைத் திருடினார் என்று சந்தேக நபருக்கு எதிராகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முன்னிலைப்படுத்தியபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம-14,23)

# தலைமன்னாரிலிருந்து நேற்று நால்வர் தமிழகத்தில் தஞ்சம்

மன்னார், ஓக. 14

திருகோணமலையைச் சேர்ந்த நால்வர் தலைமன்னாரிலிருந்து தமிழகத்துக்குச் சென்று நேற்று அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாகவே தாம் தமிழகத்துக்கு வந்துள்ளோம் என அவர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர். தலைமன்னாரிலிருந்து நேற்று அதிகாலை படகு மூலம் தனுஷ்கோடியைச் சென்றடைந்த நிலையில் அவர்கள் இந்திய கடலோர காவற்படையினரால் மீட்கப்பட்டு, விசாரணைக்காக மண்டபம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இரு ஆண்கள் மற்றும் இரு பெண்கள் உள்ளிட்ட நால்வரே இவ்வாறு தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர். (ச-இ)

# தென்மராட்சியில் மாணவிகளுக்கு தடுப்பு மருந்து!

சாவகச்சேரி, ஓக. 14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 'தரம் - 6 மற்றும் தரம்- 7 இல் கற்கும் மாணவிகளுக்குத் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது என பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1991ம் ஆண்டு பிறந்த
சூரியன் செவ்வாய் உள்ள மணமகனிற்கு மணமகள் தேவை. கிரகபாவம் 20, நட்சத்திரம் உத்தரம்,
எதிர்பார்ப்பு A/L படித்த சாதாரண பெண்.

**077 629 7796**

---

THE HALO TRUST

450, Thirunagar West,
Kilinochchi, Sri Lanka.
T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## சாரதிகளுக்கான பதவி வெற்றிடம் - 6 வெற்றிடங்கள்

ஹலோ ட்றஸ்ட் ஆனது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 26 நாடுகளில் பணியாற்றி வருகின்றது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்றஸட் எதிர்கால வேலைக்காக சாரதிகளுக்கான விண்ணப்பங்களை கோருகின்றது. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன, மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித் தளத்திற்கு நகர்த்திச் செல்வதும் அங்கு விபத்து நிகழ்ந்தால் அம்புலன்ஸ் சேவை வழங்குவதுமாகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் கனரக வாகனம் (AD) செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வைத்திருக்க வேண்டும். அத்துடன் இரண்டு வருட கால சாரதி அனுபவத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் வசிப்பவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் 21 ஆகஸ்ட் 2022 ஞாயிற்றுக் கிழமைக்கு முன்பதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.

மனித வள முகாமையாளர்
த ஹலோ ட்றஸ்ட் - இலங்கை
450, திருநகர் மேற்கு,
கிளிநொச்சி.
12.08.2022

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05 – 05 – 1937 | 26 – 07 – 2021 |

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி இலட்சுமிப்பிள்ளை நடராசா (தவமணி)

அம்மா, அம்மா, அம்மா என்ற அணையா விளக்கே
ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் அணையாத உறவே
இல்லை என்று சொல்லாது
ஈர்ந்து கொடுத்த எங்கள் குடும்ப குத்து விளக்கே

உறவென்ன உற்றாரென்ன - ஏன்
ஊராரும் வியக்கும் எங்கள் குடும்ப சொத்தே
என்னவென்று சொல்வது உங்களின் சேவையை
ஏங்கித் தவிக்கின்றோம் எங்களின் மாணிக்கத்தை

ஐயா, அம்மா என்றழைத்த எங்கள் தெய்வமே
ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் வார்த்தை சொல்லிடும்
ஓயாமல் உழைத்திட்ட எங்கள் உத்தமியே
ஔவை பாட்டிபோல் அனைவர்க்கும் - அம்மாவாய்
அஃதுடனே வாழ்வாய் இந்த அன்னையர் அவயத்தில்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

விராங்கொடை,
தெல்லிப்பளை.

நினைவுகளுடன் -
குடும்பத்தினர்

(CS) (3/6)

---

## மரண அறிவித்தல்



| தாய் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 08 . 12 . 1979 | 11 . 08 . 2022 |

### திரு.சிவலிங்கம் சக்திகரன்
**(தீபன், டேவிட்)**

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தை பிறப்பிடமாகவும், நெளுக்குளம், வவுனியாவை வசிப்பிட மாகவும் கொண்ட சிவலிங்கம் சக்திகரன் அவர்கள் கடந்த (11.08.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் செல்லம்மாவின் பாசமிகு மகனும், காலஞ் சென்ற புஸ்பநாதன் மற்றும் பாலேஸ்வரியின் பாசமிகு மருமகனும், வாசுகியின் அன்புக் கணவரும், தாருஜன், கனுசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்க ளான சிவகரன், சுதாஸ்கரன் மற்றும் சசிகரன் (குயா), சிறிகரன் (பிரான்ஸ்), பிரபாகரன், சரூபகரன், செல்வகரன் (பிரான்ஸ்), சுரேனுகா (பிரான்ஸ்), சிந்துஜா ஆகியோரின் அன்பிற்கினிய சகோதரரும், செந்தில்ராஜன், பார்த்தீபன் ஆகியோரின் மைத்துனரும், அண்ணிமார், மச்சாள்மார், மச்சான்மாரின் மைத்துனரும், பெறாமக்களின் சித்தப்பாவும், பெரியப்பாவும், மருமக்களின் மாமனாரும், பேரப்பிள்ளைகளின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை, 119/6, சிவபுரம் மன்னார் வீதி, வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் [illegible] இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 2029) 1/6

---

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 . 02 . 1956 | 13 . 08 . 2022 |

### திருமதி தர்மலிங்கம் பவானி

உரும்பிராயை பிறப்பிடமாகவும் வ/புளியங்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் 6ஆம் ஒழுங்கை, வேப்பங்குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவானி தர்மலிங்கம் அவர்கள் நேற்று (13.08.2022) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திரு. க. தர்மலிங்கம் ( ஓய்வு பெற்ற சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், கதிரித்தம்பி தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சுகந்தன் (Ideal first choice Jaffna), சிவகரன் (London), மீனலோஜினி (Germany), ஆகியோரின் அன்புத் தாயாரும், சுஜாதா (ஆசிரியர்), ஜனனி (London), ஜனகன் (Germany) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிருந்திதா, ஐஸ்வர்யா, அஸ்விதா, லினுசன், ஹன்சிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும், ரஞ்சினிதேவி (கனடா), மிதிலாதேவி, பத்மினி, ராஜினி, திருப்பதி, சிவபதி, ரவினி ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், செல்லத்துரை மற்றும் பரிபூரணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

0770889622 0773350094

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1018) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பரிபாலனசபை உறுப்பினர்
திரு.பொ.கருணாகரன் (கருணை)
அவர்களின் அன்புச் சகோதரி
**அமரர் கமலேஸ்வரி (றஞ்சினி) பத்மகுமார்**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
கற்பகவிநாயகரை
பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய்

**பரிபாலனசபை**
**ஒடையம்பதி**
**கற்பகவிநாயகர் ஆலயம்**

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 17 - 10 - 1962



மறைவு 14 - 08 - 2020

அமரர்
## அப்புக்குட்டி சற்குணராசா

"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்"

பண்பின் சிகரமாய் பாசத்தின் - உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டி
வாழ்ந்து எம்மை விட்டுப்பிரிந்து
சென்றுவிட்டாலும்
உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் இருந்த ஒரு போதும் மறைவதில்லை


என்றும் உங்கள் நினைவில்
**குடும்பத்தினர்**
**077 104 3101**

இல. 78, குருசோ வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(CS 30250) (3/6)

# மறைந்தும் மறையா மாண்பினான் எம் அப்பன் ரஞ்சன்

தோற்றம் 19 . 09 . 1963



மறைவு 09 . 08 . 2022

## அமரர் செல்லையா ரஞ்சன்

**(பணியாளர் விசேட தரம் 1 – வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்)**

சரவணை கிழக்கு (சங்கு தறைப்பதி) பள்ளம்புலம் வைரவர் தேவஸ்தானம் வணங்குறப்புனிதம் செய்து தனியனாய் நின்று ஓடி தன்நிலை மறந்து வாடி உடலதன் களைப்பும் காட்டா ஊக்கமாய் பணியில் நின்று புதியதாம் ஆலயத்தை புயலதாய் நின்று ஆக்கி பெருமையாய் பல்லோர் சேர்ந்து பெருங்குட முழுக்குக் காண ஒருவனாய் நின்று கொண்டு ஓய்வது இலாது செய்து அருமையாம் பெருவிழாவும் அழகுற சிறப்புத் தேரும் கருணையாய் வீதி சுற்ற கடவுளாம் வைரவர்தேர் ஒளிர்வுடன் ஓடவீதி ஒப்பிலா அருள் சுரக்க முழுமையாய் நின்றாய் அங்கு. முதல்வனே ஆருகண்டோம் இடையிலே எம்மைவிட்டு இரங்கிநாம் கதறவிட்டு பணியெனக் கண்ணீர் சிந்த பதைத்து நாம் வேக நிற்க எதுவழி கண்டாய் றஞ்சா? எம்துயர் ஆறவில்லை வைரவர் பணிக்காய் வந்தாய் வைரவர் சேவை செய்தாய் அடியவன் சரணம் ஆனாய் அப்பனே அமைதிகொள்வாய்

**சங்குதறை ஞான வைரவர்**
**தேவஸ்தானம் சார்ந்த பொதுமக்களின்**
**சார்பாக க.சதானந்தன்**



போலந்தின் தென்மேற்குப் பகுதியிலுள்ள ஆறொன்றில் பத்துத் தொன் வரையிலான மீன்கள் கொத்துக்கொத்தாக உயிரிழந்த நிலையில் கரை யொதுங்கியுள்ளன. நச்சு திரவங்கள் ஆற்றில் கலந்தமை மற்றும் சூழல் மாசுபாடு காரணமாக இவ்வாறு நிகழ்ந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ச)

## சல்லி கற்கள் விற்பனைக்குண்டு

தரமான 6/9 அத்திவாரக் கற்கள், 3/4 சல்லி கல், சிப்ஸ் டஸ்ட் போன்ற பொருட்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மன்னார், கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களுக்கு கொண்டுவந்து தரப்படும்.

**TVM Transports** கோப்பாய்

**0777 666 620, 0777 666 719**

## வேலைவாய்ப்பு

பெண்கள் மட்டும் Adobe Photoshop and Lightroom தெரிந்த பொறுப்பான பெண் பணியாளர் தேவை.மிக கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிபரக் கோவையை தொடர்பு இலக்கத்தோடு மின்னஞ்சல் செய்யவும்.
(யாழ்.நகரில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.)

gta.dpstudios@gmail.com

## வீடு வாடகைக்குண்டு

யாழ். நக்கா ரோட்டில் இராசாவின் தோட்ட சந்திக்கும். ICRC சந்திக்கும் இடையில் 03 பரப்பு காணியில், 4 படுக்கை அறைகள் 02 குளியலறைகள், சமையலறை மற்றும் வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய விசாலமான வீடு வாடகைக்கு உண்டு.
(அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: **077 247 0590**
**076 535 7084**

(CS 45944) (3/6)

## SHANTHIHAM
Association for Health & Counselling

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சாந்திகம் உளவளத்துணை நிறுவனத்தினால் **Global Affairs Canada/ IMHO Canada** அமைப்புக்களின் நிதியனுசரணையில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள "பால் நிலை சமத்துவ மேம்பாடு" எனும் திட்டத்தில் கீழ்வரும் பதவி நிலைகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இச் செயற்திட்ட பதவி நிலை வெற்றிடங்களுக்குப் பொருத்தமான, தகைமை யுடையோரிடமிருந்து விண்ணப்பங் கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தக் காலம் – 1 வருடம் (புதுப்பிக்கக்கூடியது). தகுதியுள்ளோர் தங்களின் சுயவிபரக்கோவையினை 2022.08.21 ஆம் திகதிக்கு முன்னதாக கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பதவி வெற்றிடங்கள்**

**நிதி அலுவலர் (Finance Officer) – 01**
நிதித் துறையில் இளங்கலைப் பட்டம் அல்லது நிபுணத்துவப் படிப்புக்களில் இடைநிலைத் தகுதி அல்லது நிதித்துறையில் டிப்ளோமாவினைப் பெற்றிருப்பதுடன், இதே போன்ற பணியில் 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும். Quick Book மென்பொருள் பயன்படுத்தத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**கண்காணிப்பு மற்றும் ஆய்வு உத்தியோகத்தர் (M&E Officer) – 01**
சமூகவிஞ்ஞானம் அல்லது முகாமைத்துவம் அல்லது பொருத்தமான ஏதாவது துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பட்டமொன்றைப் பெற்றிருப்பதுடன், மேற்குறித்த துறையில் 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**திட்ட இணைப்பாளர் (Project Coordinator) – 03**
சமூகவிஞ்ஞானம் அல்லது முகாமைத்துவம் அல்லது பொருத்தமான ஏதாவது துறையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பட்டமொன்றைப் பெற்றிருப்பதுடன் 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**உளவளத்துணையாளர் (Counsellor) – 03 (ஆண்/பெண்)**
உளவளத்துணையில் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருப்பதுடன் 05 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**கள உள சமூக அலுவலர்கள் (Field Psychosocial Workers) - 09**
குறைந்தது உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்திகளைப் பெற்றிருப்பதுடன் கள உள சமூகப்பணியில் மற்றும் சமுதாய அபிவிருத்தியில் 02 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**சாரதி (Driver) - 01**
குறைந்தது க.பொ.த சாதாரண தரத்தில் 06 பாடங்களில் சித்திகளைப் பெற்றிருப்பதுடன் சாரதிப்பணியில் 05 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

**அலுவலகப் பணியாளர் (Caretaker) - 01**
குறைந்தது தரம் 10 இல் சித்தியடைந்திருப்பதுடன் 03 வருடங்களுக்குக் குறையாத பணி அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

No.8,8/1, Katpahavinayakar Lane,
Off Kachcheri Nallur Road,
Jaffna.
[illegible]
Email To – hr.shanthiham@gmail.com

# வறண்டது தேம்ஸ்

லண்டன், ஓக. 14

உலகின் மிகப்பழமையான நதி களில் ஒன்றான, இங்கிலாந்தின் தேம்ஸ் நதி, கடும் வெப்பத்தால் வறண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் கடந்த ஜூலை முதல் வரலாறு காணாத வகையில் கடும் வெப்பம் நிலவி வருகின்றது. இதையடுத்தே தேம்ஸ் நதி வறட்சியடைந்துள்ளது. லண்டன் நகரம் முழுதும் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. வறண்ட காலநிலையை எதிர்கொள்ள நாங்கள் முன்பை விட சிறப்பாகத் தயாராக இருக்கிறோம் என்றும் இங்கிலாந்து அறிவித்துள்ளது. (ச)



## தேவை
**பணிப்பெண் தேவை**
077 248 7316

## வீடு வாடகைக்கு
திருநெல்வேலி மருத்துவ பீட சுற்றாடலில் பல்கலைக்கழக ஆண் மாணவர்களுக்கு வீடு வாடகைக்கு உண்டு
077 296 4899

## விற்பனைக்கு
வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான அனைத்து நாற்றுக்கன்றுகளும் விற்பனைக்கு உண்டு.
077 248 6090

## வேலையாள் தேவை
யாழ்.நகரில் உள்ள
கடை ஒன்றிற்கு
பெண் வேலையாள்த் தேவை.
சம்பளம் : 25000-35000
075 498 5400, 077 9370000

## வேலையாள் தேவை
யாழ்.நகரில் உள்ள கடை ஒன்றிற்கு
ஆண் வேலையாள்த் தேவை.
வியாபாரம் தெரிந்தவர் விரும்பத்தக்கது
சம்பளம் : 55,000
077 937 0000, 075 988 1000

## சுத்திகரிப்பாளர் தேவை
யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார்
நிறுவனம் ஒன்றிற்கு துப்புரவு
பணியாளர் தேவை.
(வெளிமாவட்டத்தவர்களுக்கு
தங்குமிட வசதி செய்து
கொடுக்கப்படும்)
070 356 7811

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










ஆசிரிய வெற்றிடங்களுக்கான

## நேர்முகப்பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 14

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரி மற்றும் டிப்ளோமாதாரர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பித்தோருக்கான நேர்முகப் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் வடமாகாண கல்விப்பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் நேற்றுமுன்தினம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

குறித்த ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பித்தவர்களது விண்ணப்பங்களின் அடிப்படையில் நேர்முகத் தேர்வுப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்ப தாரிகளது பெயர், விவரங்கள் கடந்த 8 ஆம் திகதி வடக்கு மாகாண கல்வி அமைச்சினுடைய இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது.

இந்த நிலையில் எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சைகள் அனைத்தும் தவிர்க்க முடியாத காரணத்தால் மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளன. மேலும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் - என்றுள்ளது. (ச)

## சட்டவிரோத மரக்கடத்தல்: ஆறு சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஓக. 14

அனுமதியின்றி பனை மரம் ஏற்றிச்சென்ற ஆறு நபர்களைக் கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்தனர்.



வட்டுக்கோட்டைப்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை சந்தியில் உள்ள கடற்படைக் காவலரண் வழியாக சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த இரு மோட்டார் சைக்கிள்களையும் ஓர் உழவு இயந்திரத்தையும் வழிமறித்து சோதனை மேற்கொண்ட போது அனுமதிப்பத்திரமின்றி பனைமரக்குற்றிகளைக் கடத்திச் சென்றமை தெரியவந்தது. அதனையடுத்து மோட்டார்சைக்கிள்களில் பயணித்த மூவரையும் உழவு இயந்திரத்தில் பயணித்த மூவரையும் கடற்படையினர் கைதுசெய்தனர். சந்தேகநபர்கள் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் பனைமரங்களுடன் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் காரைநகர் மற்றும் அல்லைப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-14.27.125)

யாழ். மாவட்ட

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொழும்புக்கு இடமாற்றம்!



யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய பிரியந்த லியனகே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு வருடத்துக்கு மேல் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அவர், தற்போது கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சைக்காக 80% வரவு தேவையில்லை

**கொழும்பு, ஓக. 14**

**இந்த வருடம் டிசெம்பரில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாண வர்களுக்கு, 80 சதவீதமான வருகையை கருத்திற்கொள்ள வேண்டாம் எனக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.**

இது தொடர்பில், அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள தாக கல்வி அமைச்சு அறிவித்துள் ளது.

அத்துடன் உயர்தரத்தில் சித்திய டைந்த மாணவர்களுக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் படிப்பை அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவ னத்தில் தொடர்வதற்காக 2017ஆம் ஆண்டு முதல் வட்டியில்லா கல்விக் கடன் வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. இந்தக் கடன்திட் டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத் தவும் கல்வி அமைச்சுத் தீர்மானித் துள்ளது. இதேவேளை, 2019/2020 க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்காக விண்ணப்பிப்ப தற்கான கால எல்லையும் எதிர்வரும் 19ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள் ளது. (ம)

## சிறுவர்களிடையே டெங்கு அதிகரிப்பு!

### சுற்றுப்புறங்களை சுத்தமாக பேணுமாறு மருத்துவர் தீபால் பெரேரா அறிவுறுத்து

கொழும்பு, ஓக. 14

கொழும்பிலுள்ள லேடி ரிட்ஜ்வே மருத்துவமனை யில் டெங்கு மற்றும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வரும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என குழந் தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

டெங்குக் காய்ச்சலால் 15 பேர் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். அத் துடன் 11 சிறுவர்கள் டெங்குத் தொற்றுக்குள்ளாகி மருத் துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஆகவே டெங்கு நுளம்பு உற் பத்தியாகக்கூடிய பொருள் களை அப்புறப்படுத்தி வீடு, பாடசாலை உள்ளிட்ட சுற் றுப்புறங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அத்துடன் கொரோனாத் தொற்றிலிருந்து சிறுவர் கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க அடிப்படை சுகாதார வழிகாட்டல்களைப் பின் பற்றுதல் வேண்டும்- என் றார். (ச-இ)



## கொழும்பு மாநகரசபைக் காணியில் பயிர்ச்செய்கை நடவடிக்கை

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற் றும் உணவு நெருக்கடிக்குத் தீர்வாக, கொழும்பு மாநகர சபைக் காணியில் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேயர் ரோசி சேனாநாயக்கவின் பணிப் புரைக்கு அமைவாகவே இந்தப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மாநகரசபை ஊழியர்களால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. (ய)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு விரைவில் ரூ.1,000

### செந்தில் தொண்டமான் உறுதி

கொழும்பு, ஓக. 14

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயி ரம் ரூபா ஊதியம் வழங்குவதை இடை நிறுத்த வேண்டும் என்று கம்பனிகள் தாக்கல்செய்த வழக்கை நீதிமன்றம் நிராகரித்துள்ளதை அடுத்து, ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொடுக்கும் பணி கள் துரிதமாக முன்னெடுக்கப்படும் என்று இ.தொ.காவின் தலைவர் செந் தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தொழிலாளர் காங்கி ரஸின் மறைந்த தலைவர் ஆறு முகன் தொண்டமானால், அந்தக் காலத்துக்கேற்ற வகையில் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் வகையில் நியா யமான சம்பளமாக ஆயிரம் ரூபா கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்



களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சம் பளத் தொகையாகவும் அக்காலத்தில் ஆயிரம் ரூபா இருந்தது. ஆனால், இதை எதிர்த்து கம்பனிகளால் தாக் கல் செய்யப்பட்ட வழக்கு தற்போது நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட் டுள்ளது. இது ஒட்டுமொத்த தோட்டத் தொழிலாளர்களினதும் வெற்றியா கும். தற்போதைய ஆயிரம் ரூபா சம்பளமும் போதுமானதாக இல்லை. எனவே சம்பளத் தொகையை உயர்த்துவதற்கான நட வடிக்கைகளை இ.தொ.கா முன்னெ டுத்துள்ளது.

பெருந்தோட்ட நிறுவனங்களின் முகா மையாளர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவரும் தோட்டத் தொழிலாளர் களின் உழைப்பில் சம்பளத்தையும் சலுகைகளையும் பெற்றுக்கொண்டு, தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயி ரம் ரூபா சம்பளத்தை வழங்க வேண் டாமென வழக்குத் தொடுத்தமை மிக வும் கீழ்த்தரமான செயலாகும்.

பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு வருமானத்தை ஈட்டித்தரும் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் உயரக்கூடாதென எண்ணி கீழ்த்தர மாக செயற்படும் தோட்ட நிர்வாகங்க ளுக்கு நீதிமன்றத் தீர்ப்பின் மூலமாக சரியான பதிலடியை இ.தொ.கா. வழங்கி யுள்ளது - என்றுள்ளது. (ம-14.இ)

## மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஓக. 14

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களி லும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங் களிலும் சில இடங்களில் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதுதொடர்பில் வளி மண்டலவியல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

மத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகா ணங்களில் பல இடங்களில் மாலை அல் லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். அத்துடன் கொழும்பில் இருந்து காலி வரையான கடற்கரைக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் சிறிதளவு மழை பெய் யக்கூடும்.

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையிலும் மாத்த றையிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளி லும் காற்றின் வேகமானது மணித்தியா லத்துக்கு 40-45 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும். ஆகவே இடி யுடன் கூடிய மழையால் ஏற்படக்கூடிய அபாயங்களைக் குறைக்கத் தேவை யான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக் குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது- என்றுள்ளது. (ச-இ)

## மதுபான ஏற்றுமதியை அதிகரிக்கத் தீர்மானம்

கொழும்பு, ஓக. 14

நாட்டில் தயாரிக்கப்படும் மதுபான வகை களின் ஏற்றுமதியை அதிகரிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த வருடம் மதுபான ஏற்றுமதி மூலம் 2 கோடி 50 லட்சம் அமெ ரிக்க டொலர் வருவாயாக பெறப்பட்டது என்று மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் எம்.ஜே.குணசிரி தெரிவித்துள்ளார். அதற்கமைய இந்த ஆண்டில் ஏற்றுமதி மூலம் 5 கோடி அமெரிக்க டொலரை வரு வாயாகப் பெறமுடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் உற்பத்தியாகும் மதுபான வகைகளின் தரக் கட்டுப்பாட்டைப் பேணும் நோக்கில் ஆய்வுகூடம் ஒன்று நிர்மாணிக் கப்படுகின்றது என்றும் மதுவரித் திணைக் களத்தின் ஆணையாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார். (ம-14,இ)

## சீருடை வழங்கல்

கிளிநொச்சி, ஓக. 14

கிளிநொச்சி-அக்கராயன் மகா வித்தியாலய மாணவர்களுக்கு விளையாட்டு சீருடை அண்மையில் வழங்கப்பட்டது.

பிரான்ஸ் பழைய மாணவர் ஒன்றியத்தின் தொடுவானம் அமைப்பின் ஏற்பாட்டில், பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் சுப்பிரமணியம் பிரபாவின் நிதிப்பங்களிப்பில் விளையாட்டு சீருடைகள் வழங்கப்பட்டன. (ஒ-14-13)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீர் இறைக்கும் இயந்திரம் திருடிய சந்தேகத்தில் 2பேர் கைது



யாழ்ப்பாணம், ஓக. 14

அச்சுவேலி - கதிரிப்பாய் பகுதியில் நீர் இறைக்கும் இயந்திரத்தை திருடிய சந்தேகத்தில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட ஒருவர் கதிரிப்பாய் பகுதியைச் சேர்ந்தவர் எனவும் மற்றையவர் அச்சுவேலி வடக்கு பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

60 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் திருடப்பட்டமை தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு அமைவாக விசாரணையை முன்னெடுத்த பொலிஸார், சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர். (ஒ-23)





மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு மாணவர்களுக்கிடையிலான கோலம் போடுதல், மாலை கட்டுதல் போன்ற போட்டிகள் கடந்த வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவின் போது ஆலய மண்டபத்தில் நடைபெற்றன. (ஒ-14-9)

## முட்டை, இறைச்சி...

கோழி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் முட்டை ஒன்றின் புதிய விலை 60 ரூபாவாகவும், 1 கிலோ கோழி இறைச்சியின் புதிய விலை ஆயிரத்து 300 ரூபாவாகவும் இருக்குமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-இ)

## ரஷ்யாவிலிருந்து...

றிக் தொன் மசகு எண்ணெய் தாங்கிய மற்றுமொரு கப்பல் எதிர்வரும் 23 முதல் 29ஆம் திகதிக்குள் நாட்டை வந்தடையவுள்ளது. (அ-ஒ-இ)

## காணி...

மாகாண ஆளுநரின் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்க முடியும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

'வட மாகாணத்தில் உள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்கள் வெளிநாடுகளிலோ அல்லது வேறு எந்தப் பாகத்திலும் இருக்கின்ற நிலையில் அவர்களின் காணிகள் மோசடியான வழியிலோ போலியான உறுதிப் பத்திரங்கள் மூலமோ அபகரிக்கப்பட்டு இருந்தால் அது தொடர்பில் ஆளுநர் செயலகம் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது. ஆகவே பாதிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் உரிமை கோரக் கூடிய ஆதாரங்களுடன் காணிப்பதிவு பற்றிய விவரங்களை பழைய பூங்கா வீதியில் உள்ள ஆளுநர் அலுவலகத்துக்கு அனுப்பும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-27)

## புலம்பெயர்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடியால் வீழ்ச்சியடைந்த எமது நாட்டை மீளக் கட்டியெழுப்ப வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களின் உதவிகளைப் பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். நாடாளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை விளக்கவுரையில் இதனை அவர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். இந்நிலையில், புலம்பெயர் அமைப்புக்கள் மீதும் தனிநபர்கள் மீதும் தடையை வைத்துக்கொண்டு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் உதவிகளை எதிர்பார்க்க முடியாது. இதைக் கருத்திற்கொண்டே முதற்கட்டமாகச் சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதும் தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. தொடர்ந்து தடையில் உள்ள ஏனைய புலம்பெயர் அமைப்புக்கள் குறித்தும் அரசாங்கம் அவதானம் செலுத்தும் - என்றார். (அ-ஒ-5-22)

## கட்டுப்பாடுகளுடனேயே...

ஏற்படும் என்று வெளியாகும் செய்திகளை அடியோடு மறுக்கின்றோம் - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்புச் செய்தியாளர் ஒருவருக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

'இந்தக் கப்பலின் வருகை தொடர்பில் எழுந்த சர்ச்சையான கருத்துக்களையடுத்து இலங்கை அரசாங்கம் இது தொடர்பில் தீவிரமாக ஆராய்ந்தது. கப்பல் வருகைக்குச் சில கட்டுப்பாடுகளையும் விதித்தது. அதற்கு இணங்கியே குறித்த கப்பல் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வருகின்றது. எமக்கு இந்தியாவும் சீனாவும் முக்கியமான நாடுகள். எந்த நாடுகளையும் நாம் பகைக்க முடியாது. இரு நாடுகளும் இலங்கைக்கு உதவிகளை வழங்குகின்றன. எனவே, இரு நாடுகளையும் நாம் அரவணைத்துக் கொண்டே பயணிக்க வேண்டும்' என்றார் தினேஷ் குணவர்த்தன. (அ-ஒ-5-22)

## நாடு...

அமைச்சு அறிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஏற்கனவே இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வரும் நிலையில், நாடு முழுவதும் அதனைச் செயற்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

எரிபொருள் நெருக்கடி காரணமாக பாடசாலை நாள்கள் வாரத்தில் 3 ஆகக் குறைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## 'கியூ ஆர்'....

எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கொலன்னாவை பெற்றோலிய விநியோக முனையத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற எரிபொருள் விநியோகம் தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட விதம் மற்றும் 'கியூஆர்' குறியீட்டைப் பயன்படுத்தி எரிபொருள் வழங்கியதில் கடந்த இரண்டு வாரங்களின் தரவுகள் சரிபார்க்கப்பட்டு, கலந்துரையாடப்பட்டன. (அ-ஒ-இ)

## 46 தமிழ்...

விஜேதாஸ ராஜபக்ச தன்னிடம் உறுதியளித்தாரென தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

46 சிறைக் கைதிகள் தொடர்பாக முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வாவின் அறிக்கைகளுக்காகக் காத்திருப்பதாக நீதியமைச்சர் என்னிடம் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி தெரிவுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நில ஆக்கிரமிப்புக்களை உடனடியாக நிறுத்துதல் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் எங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அவர் இணக்கம் தெரிவித்தார்.

அடுத்த மாதம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை மிகவும் பாரதூரமான ஒன்றாக இருக்கும். ஆகவே, அதற்கமைவாக குறித்த அறிக்கைக்கு முன்னர் நாம் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார் - என்றார். (அ-ஒ-இ)

## 3 புலம்பெயர்...

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இன்னமும் வெளியாகவில்லை.

உலகத் தமிழர் பேரவை , பிரிட்டன் தமிழர் பேரவை, கனடா தமிழ்க் காங்கிரஸ் ஆகிய 3 அமைப்புக்கள் மீதான தடையையும், உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் மீதான தடையையுமே இலங்கை அரசாங்கம் நீக்கியுள்ளது.

இதேவேளை - 2014ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 14 புலம்பெயர் அமைப்புக்களை தடை செய்திருந்தார். அதன் பின்னர் 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் அந்த அமைப்புக்கள் மீதான தடையை நீக்கியிருந்தது.

பின்னர், கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் 7 புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் 389 தனிநபர்கள் மீது தடை விதித்து வர்த்தமானி வெளியிட்டிருந்தது. இந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் ஜெனிவாவில் இடம்பெற்ற 50ஆவது கூட்டத் தொடரில் உரையாற்றிய அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடைகளை நீக்குவது பற்றி அரசாங்கம் ஆராய்வதாகத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## அரச...

ஆயினும், நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி ஓரளவுக்குத் தணிக்கப்பட்டு, பொதுச்சேவைகள் இயங்கி வருவதால், வாரத்தின் ஒவ்வொரு வேலை நாள்களிலும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பொதுமக்கள் வழமை போன்று அரச அலுவலகங்களுக்கு வந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

இதனால், அரச அலுவலகங்களின் பணிகளை வழமை போன்று நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால், காலதாமதத்தைக் குறைக்கும் வகையில், அரச ஊழியர்களை வாரத்தில் ஐந்து நாள்களும் பணிக்கு அழைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியை கருத்திற் கொண்டு கடந்த ஜூலை 24ஆம் திகதி முதல் ஒரு மாத காலத்துக்கு அரச பணியாளர்களைப் பணிக்கு அழைப்பதைக் கட்டுப்படுத்தி சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

இதன்படி, குறித்த கால அவகாசம் முடிவடைந்ததன் பின்னர், நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு வாரத்தின் ஐந்து நாள்களிலும் அரச பணியாளர்களை பணிக்கு அழைப்பது தொடர்பில் விரைவில் தீர்மானிக்கப்படவுள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பலசரக்கு வணிக நிலையத்திற்கு தங்கி நின்று வேலை செய்வதற்கு ஆண் வேலையாட்கள் தேவை.

077 419 5015

## விற்பனைக்கு

- ஆனைக்கோட்டையில் 3 படுக்கையறையுடன் கூடிய வீடு விற்பனைக்கு
- கொடிகாமத்தில் A9 வீதியோரமாக 50 பரப்புக்காணி விற்பனைக்கு.
- காக்கை தீவில் தென்னங்காணி விற்பனைக்கு 39 (வயல் பரப்பு)

Contact Number
Nitharsan Antonrasa
+94 77 222 0243

## மணமகள் தேவை

1981ம் பிறந்த உடுவிலைச் சேர்ந்த சுய தொழில் (வெல்டிங்) புரியும் பூரம், 1ம் பாதம் 14, பாவக்கிரகத்தை உடைய அழகிய மணமகனுக்கு இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அழகிய மணமகள் தேவை.

074 020 6165, 077 029 4176

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரப்பகுதியில் அலுவலகம் நடத்தக்கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு: 077 2543 253

**மின்சாரம் துண்டித்து விட்டதா?**
**மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?**
**இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்**

சகல விதமான மின்சாரப் பொருள்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும்

**J.J GROUP** 021 222 8854
(CS 45719)(3/6) No. 603, K.K.S, Road, Jaffna 077 555 5100

## துரித பொதிகள் சேவை

சகல நாடுகளுக்குமான கடிதங்கள் 3-5 வேலை நாட்களில் ஒப்படைக்கப்படும். (குறிப்பு :- பணியாளர்கள் தேவை)

திருமுருகன் கொம் நெற்
321,K.K.S. Road
Jaffna
077 755 4528

## Student Visa

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

1. Skilled Migration - Canada, Australia
2. Student Visa - Canada, UK, Australia, France, Finland, Sweden, Romania and New Zealand
3. Work and Study program- Canada 4. Minor Education - 5-17 years (Canada)
5. Visitor / Tourist visa - All countries

Visa Consultant
Consultation Free
No 134, Adiyapatham Road, Thirunelvely.
Contact: 077 038 5584

## காணி விற்பனைக்கு

யாழ் நாவற்குழியில் 42 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள். களஞ்சியசாலைகள். மண்டபங்கள். வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029

## காணி வாடகைக்கு

B.A தம்பி ஒழுங்கையில் K.K.S வீதியிலிருந்து சுமார் 400m தூரத்தில் சுற்றி வர மதிலுடன் கூடிய அறுக்கை யுள்ள 1 1/4 பரப்புக்காணி வாடகைக்கு உண்டு. கராஜ். ஓட்டுத் தொழிலகங்கள் முதலியன அமைத்துக்கொள்ளலாம்.

தொடர்பு:
ச.மகிந்தன் 077 820 9424
(CS 28290) (3/6)

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ்.நகர் நவீன சந்தையில் இயங்கிவரும் புடைவை விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை.

071 535 6303, 076 792 2004

## கசிப்புடன் ஒருவர் கைது!

யாழ். ஓக. 14

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உரும்பிராய் மேற்குப் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருப்பதாக கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் 54 வயதான சந்தேகநபரைக் கைதுசெய்தனர். அத்துடன் சந்தேகநபரிடமிருந்து 5 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு கோப்பாய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

அதனையடுத்து சந்தேகநபருக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ம-14,125)

**யாழ்விஷன் இந்துமன்றத்தின் அன்பகம்**
**ஆன்மிக நிலைய தினசரி நிகழ்ச்சி நிரல்**
**மாலை 4.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை**

**திங்கள் :**
தியானம் / ஆன்மிகம் சார்ந்த உரைகள்....
திரு.ப.அச்சுதராஜா
(ஞானாசிரியர் - உலக சமாதான ஆலயம். யாழ்ப்பாணம்)

**செவ்வாய்**
திருமுறைகள் ஓதுதலும், அவற்றின் விளக்கமும்....
திரு.ப.சிவமைந்தன்
(இசைத்துறை விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)

**புதன்**
திருமுறைமகத்துவம்
இன்னிசை விரிவுரையாளர் பேராசிரியர் திருமுறைக் கலாநிதி முனைவர் நா.வி.முருகேசு நவரத்தினம்
(முன்னாள் தலைவர் இசைத்துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

**வியாழன்**
சீரடி சாய்பாபாவின் பஜனைகள்
திரு.ந.பரந்தாமன்
(இசைத்துறை விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)

**வெள்ளி**
கூட்டுப்பிரார்த்தனையுடன் பண்ணிசை...
திரு.ந.பரந்தாமன்
(இசைத்துறை விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)

**சனி**
இலவச மருத்துவ ஆலோசனைகள்
Dr. த.துஷ்யந்தன் (ஆங்கில மருத்துவம்)
Dr. ஜெயதர்சினி (சித்த மருத்துவம்)

**ஞாயிறு**
யோகாசனப் பயிற்சிகள்.....
S. உமாசுதன்
(நிறுவுனர் - யாழ். யோகா உலகம்)

**அன்பகம் ஆன்மிக நிலையம்**
**அம்மன் வீதி, 4ஆம் ஒழுங்கை, கொக்குவில்**
**021 221 0090, 076 772 0059**
(CS45942) (3/6)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 • 12 • 1956



மறைவு 13 • 08 • 2022

## சுந்தரம் பத்மநாதன் (நாதன்)

**(உரிமையாளர் – பிரணகா நகைத்தொழிலகம், விஜயலட்சுமி ஆபரண மாளிகை – ஊர்காவற்றுறை)**

உப்புக்குளம் வீதி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், பூநாறி லேன், கொக்குவில் மேற்கு கொக்குவிலினை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் ஆச்சாரி பத்மநாதன் நேற்று (13.08.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் ஆச்சாரி, பார்வதி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமகிருஷ்ணன் ஆச்சாரி லெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயமதியின் (ஜெயா) அன்புக் கணவரும், பிரணகாவின் (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்), பாசமிகு தந்தையும், ருசீபனின் (குகன் நகைத்தொழிலகம்) அன்பு மாமனாரும், அகிலாண்டேஸ்வரி, காலஞ்சென்ற ஜெயக்குமார், விஜயலட்சுமி, காலஞ்சென்ற நற்குணராஜா ஆகியோரின் அன்பு சகோதரனும், செல்லத்துரை, மகேஸ்வரி, லெட்சுமணன், இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனனும், பவிஸ்னா, திஜித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.08.2022) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
077 500 4696

54/6, பூநாறிலேன்,
கொக்குவில் மேற்கு,கொக்குவில் .
(CS 45943) (3/6)

## விற்பனைக்கு

A4 Sheet விற்பனைக்குண்டு
ஜீவா - 077 755 9717

## வீடு நாள் வாடகைக்கு

வெளிநாடுகளிலிருந்து குடும்பமாக வருவோர் தங்குவதற்கு ஏற்ற சகல வசதிகளையும் கொண்ட வீடு யாழ்நகரில் நாள் வாடகைக்கு உண்டு.

077 633 3000

## பெண் வேலையாள்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் **Lovely Flower Centre** கடைக்கு பெண் வேலையாள்கள் தேவை.

தொடர்பு: 077 400 5023

## மணமகன் தேவை

கௌரவ குடும்பம் 1990 கேட்டை 7 இல் செவ்வாய் பாவம் 25 உயரம் 5'7" B. Com, HNDM) அரச தொழில் D.O

077 899 9308

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.
- மூதுரை

# சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 ஆடி 29 ஞாயிற்றுக்கிழமை (14.08.2022) சிகரம் : 112



# ஜெனிவாவின் அவகாசமே ரணிலுக்கு தேவை!



○ அ.நிக்ஸன்

செப்ரெம்பர் மாதம் கூடவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான பிரேரணை சமர்ப்பிக்கப்படும்போது, பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கைக்குக் கூடுதல் அழுத்தங்கள் முன்வைக்கப்படலாம். ஆனால் ஈழத்தமிழர்களின் அரசியல்தீர்வு மற்றும் சர்வதேசம் கூறுகின்ற போர்க் குற்ற விசாரணை குறித்த விடயங்கள் எதிலும் அந்த அழுத்தங்கள் இருப்பதற்கான வாய்ப்புகள் தெரியவில்லை.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம், ஐரோப்பா மற்றும் இந்தியா போன்ற நாடுகள், இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும், தமக்குரிய புவிசார் அரசியல் நகர்வுகள் எந்த அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே, ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் தீர்மானங்களை முன்வைப்பர் என்பது வெளிப்படை. 2009 மே மாதத்துக்குப் பின்னரான சூழலில்,வடக்கு- கிழக்கு தாயகப் பிரதேசங்களில் இலங்கை இராணுவம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் கண்காணிப்பு நடவடிக்கைகள், சிங்களக் குடியேற்றங்கள் உள்ளிட்ட அத்துமீறல் செயற்பாடுகள் பற்றிய தகவல்களை தமிழ்த்தேசியக் கட்சிகள் தொடர் ஆவணமாகச் சமர்ப்பிக்கவேயில்லை.

ஆங்காங்கே சில குறிப்பேடுகளை ஜெனிவா மனித உரிமைகள் பேரவை பெற்றுக் கொண்டாலும், இலங்கை அரசாங்கம் செயற்படுவது போன்று ஐக்கிய நாடுகள் சபை, ஜெனிவா மனித உரிமைகள் பேரவை போன்ற சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தமிழர் பிரதேசங்களில் நடைபெறுகின்ற ஜனநாயக விரோதச் செயற்பாடுகள், திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் குறிப்பாகப் போரின் பக்க விளைவுகள் போன்ற விவகாரங்கள் குறித்துத் தொடரான விழிப்புணர்வு அறிக்கைகளும் சமர்ப்பிக்கவில்லை, தீர்வுகளும்

## தமிழர்களையும் உள்ளடக்கிய புதிய பொறிமுறை உருவாக்கத் திட்டம்

முன்வைக்கப்படவில்லை . இந்தப் பின்புலத்தில் இலங்கைக்கு வரவுள்ள அழுத்தம் என்பது புவிசார் அரசியலை நோக்கமாகக் கொண்டதாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக இந்தியாவைப் பொறுத்தவரை, ஈழத்தமிழர்கள் விவகாரம் பற்றிப் பேசுவதானால், 13 ஆவது திருத்தச் சட்டத்தோடு நின்றால் போதுமென்ற மனநிலை காணப்படுகின்றது. ஆனால் இராஜதந்திர அழுத்தங்களைக் கொடுத்து, தங்கள் பக்கம் இலங்கையைக் கொண்டுவர இந்தியா கடும் பிரயத்தனம் செய்கின்றது.

இந்தியாவின் இந்த அணுகுமுறைக்கு அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளும் ஐரோப்பிய நாடுகளும் ஒத்துழைப்பு வழங்கும். இந்த எதிர்பார்ப்போடுதான் இந்திய அணுகுமுறையை ஜெனிவாவில் ஈழத்தமிழர்கள் காணக்கூடியதாக இருக்குமே தவிர, வடக்கு-கிழக்கு இணைந்த சுயாட்சித் தீர்வுக்கோ அல்லது ஈழத்தமிழர்கள் எதிர்பார்க்கும் இனஅழிப்பு பற்றிய விசாரணைக்கோ அல்லது சர்வதேசத்தினால் முன்வைக்கப்படும் போர்க் குற்றவிசாரணைகளுக்கோ இந்தியா அழுத்தம் கொடுக்காது என்பது கண்கூடு.

2012 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பான தீர்மானத்தை அமெரிக்கா நிறைவேற்றிய நாள்முதல் இந்த ஆண்டு மார்ச் மாதம் வரை நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் அரசியல் தீர்வுக்காக 13 பற்றியே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதுவும் குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோது இந்தியா சில சமயங்களில் இலங்கைக்கு எதிரான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது வெளியேறியும் இருக்கிறது. ஆகவே இதன் பின்னணியிலே தான் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில், ஈழத்தமிழர் விவகாரத்தில் இலங்கைக்கு எதிராகக் கடும் நிலைப்பாடுகளை இந்தியாவோ அமெரிக்காவோ முன்வைக்குமென எதிர்பார்க்க முடியாது. ஆனால் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரவுள்ள 'யுவான் வாங்-5' என்ற சீன ஆய்வுக் கப்பலின் வருகையை இந்தியா எதிர்ப்பதால், எதிர்காலத்தில் இலங்கைக்கு இந்தியா உதவியளிக்க வாய்ப்பில்லை என்றும், இதனால் ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியா கூடுதல் கவனம் எடுத்து இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கலாம் எனவும் சில கருத்துக்கள் உலவுகின்றன. ஆனாலும் முடிந்தவரை இந்தியா, இலங்கையோடு சேர்ந்து பயணிக்கவே முற்படும். அதாவது இலங்கைக்கு வேண்டிய மேலும் நிதியுதவிகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான உதவிகள், தொழில்நுட்ப உதவிகள் எனப் பல்வேறு வகையான அணுகுமுறைகளைக் கையாண்டு இலங்கை விவகாரத்தை இந்தியா நகர்த்தக்கூடிய சந்தர்ப்பங்களே அதிகம்.

இந்த நிலையிலேதான் மனித உரிமைகள் பேரவையின் பிரதான அதிகாரிகள் குழு ஒன்று செப்ரெம்பர் மாதம் இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ளது. இலங்கை தொடர்பாகக் கடுமையான புதிய தீர்மானங்களை அந்த அதிகாரிகள் குழு முன்வைக்குமென டெய்லிமிரர் ஆங்கில நாளேடு கூறுகின்றது. ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் ஆசிய- பசுபிக் பிரிவுக்கான தலைவர் றொனி முங்கொவன் தலைமையிலான இந்தக்குழுவினர் இலங்கைப் பயணத்தின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் உள்ளிட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் இந்தக் குழுவினர் சந்திக்கவுள்ளனர். இந்தச் சந்திப்பின் பின்னர் இந்தக் குழுவினர் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வில் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளனர். இந்தக் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இலங்கை விவகாரம் தொடர்பான இடைக்கால அறிக்கையை வெளியிடவுள்ளார். இந்த அறிக்கையைத் தயாரிப்பதில் முக்கியமான பிரதிநிதியாக றொனிமுங்கொவன் உள்ளார். கொழும்பில் உள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் றொனிமுங்கொவன் சந்திக்கவுள்ளார். ஆகவே புவிசார் அரசியல் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப இலங்கையின் சமீபகால போக்கில் மாற்றங்களை ஏற்படுத்துவதே இந்தக் குழுவின் இலங்கை வருகையின் பிரதான நோக்கம் என்பதைப் பகிரங்கமாக அறிய முடிகின்றது.

அதவாது கோத்தாபய ராஜபக்ச வெளியேறிய பின்னரான இலங்கை அரசியல் சூழலில், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இந்தியா மற்றும் அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக, ஐரோப்பிய நாடுகளின் தேவைக்கு ஏற்ப செயற்பட வேண்டுமென்ற எதிர்பார்ப்புகள் உள்ளடங்கியிருப்பதைக் காண முடிகின்றது. குறிப்பாக சீனக்கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்தால், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் கடனுதவிகள் மேலும் தாமதமடையும் என்ற எச்சரிக்கை இலங்கைக்கு விடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த எச்சரிக்கையின் பின்னணியிலேயே ஜெனிவாவில் இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு அனுசரணை, இணை அனுசரணை வழங்கிய நாடுகளின் பிரதிநிதிகள், கொழும்பிலும் ஜெனிவாவிலும் சந்தித்து இலங்கையின் சமீபகாலப் போக்குகள் பற்றிய புதிய விடயங்களை அறியும் நோக்கில் சில ஏற்பாடுகளும் இடம்பெறுகின்றன.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் அமர்வு செப்ரெம்பர் 12 ஆம் திகதி ஆரம்பமாகி ஒக்ரோபர் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில், இலங்கை தொடர்பான- ரணில் விக்கிரமசிங்கவின் புதிய நகர்வுகள் பற்றிய-

03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாந்தன்




# ஒன்பதாந் திகதியை கடந்தார் ரணில்?

ஆட்சியாளர்களுக்கு கெட்ட நாள் என்று நம்பப்பட்ட ஓகஸ்ட் ஒன்பதாம் திகதி போராட்டக்காரர்களுக்கே கெட்ட நாளாக முடிந்து விட்டதா? ராஜபக்சக்களைப் போல ரணில் விக்கிரமசிங்க மந்திரம், பில்லி சூனியம், எண் கணிதம் போன்றவற்றில் நம்பிக்கை கொண்டவர் அல்லர். ஆனால் ஆளுங்கட்சி அரசியல்வாதிகளின் வீடுகளை எரித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அவ்வாறு மந்திரம்,மாயம், பில்லி சூனியம்,எண் ஜோதிடம் என்பவற்றில் நம்பிக்கை கொண்ட ஒரு சமூகத்தின் கூட்டு உளவியலுக்குள் இருந்து வருகிறார்கள். அக்கூட்டு உளவியல் காரணமாகத்தான் மே மாதத்தில் இருந்து தொடங்கி ஜுலை மாதம் வரையிலுமான ஒவ்வொரு ஒன்பதாம் திகதியும் அரசியல்வாதிகளுக்குக் கெட்டநாள்களாகக் காணப்பட்டன. எனவே அந்த நம்பிக்கையை முறியடிக்க வேண்டிய தேவை ரணிலுக்கு இருந்தது. அவர் அதை வெற்றிகரமாகச் செய்திருக்கிறார். கடந்த ஒன்பதாந் திகதி ரணில் அகற்றப்படவில்லை, மாறாக கோத்தா கோகம கிராமம் காலிமுகத்திடலில் இருந்து வெளியேறியது.

தொடர்ச்சியான கைது நடவடிக்கைகளால் 'அரகலய' பெருமளவுக்கு செயலிழந்துவிட்டது. இதுவரை எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டார்கள் என்பது போராடும் தரப்புக்கே தெளிவில்லாமல் இருக்கிறது. ஒரு மையத்திலிருந்து தகவல்களைத் திரட்டமுடியாத அளவுக்கு மையம் இல்லாத, தலைமை இல்லாத ஒரு போராட்டமாக அது அமைந்திருந்ததா? யார், யார் கைது செய்யப்படுகிறார்கள் என்பதைத் தொகுத்துக் கூறமுடியாத ஒரு நிலை.

ராஜபக்சக்கள் அகற்றப்படும் வரை போராட்டத்தின் கவசம் போல காணப்பட்ட சட்டத்தரணிகள் அமைப்பு ,ரணில் வந்தபின் போராட்டத்தை ஏறக்குறைய கைவிட்டுவிட்டது.

**ராஜபக்சக்களைப் போல ரணில் விக்கிரமசிங்க மந்திரம், பில்லி சூனியம், எண் கணிதம் போன்றவற்றில் நம்பிக்கை கொண்டவர் அல்லர். ஆனால் ஆளுங்கட்சி அரசியல்வாதிகளின் வீடுகளை எரித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அவ்வாறு மந்திரம்,மாயம், பில்லிசூனியம், எண் ஜோதிடம் என்பவற்றில் நம்பிக்கை கொண்ட ஒரு சமூகத்தின் கூட்டு உளவியலுக்குள் இருந்து வருகிறார்கள்.**

இளம் சட்டத்தரணிகள் சிலர் மட்டும் கைது செய்யப்படுகிறவர்களுக்காக நீதிமன்றங்களில் தோன்றுகிறார்கள். மேலும் ஒன்பதாம் திகதியையொட்டி பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையங்களில் வாக்குமூலம் அளிப்பதற்காக அழைக்கப்பட்டார்கள். வாக்குமூலம் வழங்குவதிலேயே ஒரு நாளின் ஏறக்குறைய அரைவாசி கழிந்துவிட்டது.இவ்வாறு பொலிஸ் நிலையத்தில் மினக்கெடும் பொழுது போராட்டத்தை எப்படி ஒழுங்கமைப்பது?

போராட்டத்தின் பக்கபலமாகக் காணப்பட்ட தொழிற்சங்கங்களையும் ரணில் வெற்றிகரமாகப் பிரித்துக் கையாண்டுவிட்டார். சில கிழமைகளுக்கு முன் அரகலயவில் காணப்பட்ட ஒரு தொழிற்சங்கத் தலைவர் இப்பொழுது அரசாங்கத்தின் பக்கம் வந்துவிட்டார்.

மொத்தத்தில் ரணில் விக்கிரமசிங்க தன்னை நோக்கி வந்த ஒன்பதாம் திகதியை போராட்டக்காரர்களுக்கே தோல்விகரமான ஒரு நாளாக மாற்றிவிட்டாரா? மன்னர்களுக்கு எதிராகத் தொடங்கிய பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக மேலெழுந்த நெப்போலியன், புரட்சியின் கனிகளை சுவீகரித்துக் கொண்டு தன்னைப் பேரரசனாக முடி சூட்டிக்கொண்டார். ஏறக்குறைய ரணில் விக்கிரமசிங்கவும் அப்படித்தான்.அரகலயவின் கனிதான் அவர். அதேசமயம் அரகலயவை முறியடித்தவரும் அவரே. அரகலயக்காரர்கள் அமைப்பு மாற்றத்தைக் கேட்டார்கள். ஆனால் அதே அமைப்பு புதிய ஜனாதிபதியின் கீழ் தன்னை பாதுகாத்துக் கொண்டுவிட்டது. அதே நாடாளுமன்றம்; அதே தாமரை மொட்டுக் கட்சி; அதே பெரும்பான்மை; அதே அமைச்சர்கள்.

2015 ஆம் ஆண்டு மேற்கு நாடுகளும் இந்தியாவும் இணைந்து, பல சந்திப்புகளை நடத்தி, பல்வேறு வகைப்பட்ட முகவர்களைக் கையாண்டு, ராஜபக்ச அணிக்குள் பிளவை ஏற்படுத்தி, ஓர் ஆட்சி மாற்றத்தைச் செய்தன. அந்த ஆட்சி மாற்றத்தின் பங்காளிகளில் ஒருவராகிய மைத்திரி அதனை 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் காட்டிக் கொடுத்தார். இப்பொழுது நான்கு ஆண்டுகளின் பின் கத்தியின்றி, ரத்தமின்றி,தேர்தல் இன்றி ஒரு ஆட்சி மாற்றத்துக்கான நம்பிக்கையூட்டும் தொடக்கமாக மேற்கு நாடுகள் இதைப் பார்க்குமா? தமிழ்மக்களின் நோக்கு நிலையில் இருந்து அரகலய தொடர்பில் விமர்சனங்கள் உண்டு.தமிழ்மக்கள் அந்தப் போராட்டத்தை எதிர்க்கவில்லை.ஆனால், பங்களியாமைதான் தமிழ் மக்களின் பங்களிப்பு என்று கருதத்தக்க ஒரு நிலைமைதான் பெரும்போக்காகக் காணப்பட்டது.

எனினும் அதற்காக அரககலயவின் பெறுமதியைக் குறைத்து மதிப்பிட முடியாது. உலகில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற தன்னெழுச்சியான மக்கள் எழுச்சிகளில் அரகலயவுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. 69 லட்சம் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற ஒரு குடும்பத்தை தோற்கடித்த ஒரு மக்கள் எழுச்சி அது. அதில் ஒரு படைப்புத்திறன் இருந்தது. அரசியல் கலந்துரையாடல் இருந்தது. அறவழிப் போராட்டங்கள் தொடர்பில் கற்றுக்கொள்ள வேண்டிய பல முன்னுதாரணங்கள் அதில் உண்டு. எல்லாவற்றையும் விட முக்கியமாக அரசியலில் மக்கள் பிரதிநிதித்துவத்துக்கு வெளியே மக்கள் அதிகாரத்தை உருவாக்குவதில் அரகலய ஒரு முன்னுதாரணத்தை காட்டியிருக்கிறது.

அரசியலில் மக்கள் அதிகாரத்தை ஒன்றில் தேர்தல் மூலம் பெறலாம். அல்லது துப்பாக்கி முனையில் பெறலாம். இவை இரண்டுக்கும் வெளியே மக்கள் அதிகாரத்தை ஸ்தாபிப்பது என்றால் அதை மக்கள் எழுச்சிகளால்தான் சாதிக்க முடியும்.அரகலய சில மாதங்களுக்காவது அதைச் சாதித்தது.ஆனால் அந்த மக்கள் அதிகாரம் தற்காலிகமானதாகக் காணப்பட்டது. கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக அது கருநிலையிலேயே காணப்பட்டது.அதை ஒரு உடலாக வளர்த்தெடுக்க அரகலயக்காரர்களால் முடியவில்லை. ஏனென்றால் அரகலய என்பது ஒரு கதம்பமான அமைப்பு.தீவிர இடதுசாரிகளில் தொடங்கி தீவிர வலதுசாரிகள்வரை அங்கே காணப்பட்டார்கள். எல்லா மதப் பிரிவினரும் அங்கே காணப்பட்டார்கள்.தன்னார்வலர்கள், படைப்பாளிகள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், போரில் உறுப்புகளை இழந்த முன்னாள் படைவீரர்கள் என்று வெவ்வேறு கொள்கை நிலைப்பாடுகளைக் கொண்டவர்கள் அங்கே ராஜபக்ச என்ற ஒரு பொது எதிரிக்கு எதிராக அணி திரண்டார்கள். அவர்களுக்கு பொது எதிரி இருந்தது.ஆனால் ஒரு பொதுத் தலைமை இருக்கவில்லை. ஒரு பொதுவான சித்தாந்த அடித்தளமும் இருக்கவில்லை.


ஒன்றுக்கொன்று முரணான வெவ்வேறு நம்பிக்கைகளை கொண்டவர்களை ஒரு தலைமையின்கீழ் அணி திரட்டுவதில் அடிப்படையான வரையறைகள் உண்டு. அதனால் அந்தப் போராட்டத்துக்குள் இருந்து துலக்கமான தலைமைகள் மேலெழவில்லை. பதிலாக பேச்சாளர்கள் சிலர் மேலெழுந்தார்கள்.ஒரு கத்தோலிக்க மதகுருவும், பௌத்த பிக்குவும் முன்னிலைக்கு வந்தார்கள். ஆனால் அந்தப் போராட்டத்தின் மெய்யான இயக்குநர்கள் அவர்கள் அல்லர் என்பது இலங்கை அரசாங்கத்தின் புலனாய்வுத்துறைக்குத் தெரியும்.இந்தப் போராட்டத்தின் பின்னணியில் நின்ற பல செயற்பாட்டாளர்கள் முன்னரங்குக்கு வரத் தயங்கினார்கள். அதற்கு பலமான ஒரு காரணம் உண்டு. இலங்கைத் தீவு ஏற்கனவே மூன்று தடவைகள் தன் சொந்த மக்களின் குருதியில் குளித்த ஒரு நாடு.அரசுக்கு எதிரான போராட்டங்களை எப்படிக் குரூரமாக நசுக்கலாம் என்பதற்கு இலங்கைத் தீவு ஒரு கெட்ட முன்னுதாரணம்.

அவ்வாறு தம்மையும் நசுக்கலாம் என்று அஞ்சிய காரணத்தால் அரகலயவின் பின்னணியில் நின்ற செயற்பாட்டாளர்கள் முன்னரங்குக்கு வரத் தயங்கினார்கள். இதனால் அரகலய துலக்கமான தலைமைகளை மக்களுக்கு வெளிக்காட்டவில்லை. மக்களுக்கு எப்பொழுதும் துலக்கமான தலைமைகள் வேண்டும்.அருவமான தலைமைகளின் பின் மக்கள் தொடர்ச்சியாக அணிதிரளமாட்டார்கள். பொது மக்கள் எப்பொழுதும் குறியீடுகள், சின்னங்கள், ஜன வசியம் மிக்க தலைவர்கள் போன்றவற்றின் பின் அணி திரள்வதுண்டு. ஆனால் 69 லட்சம் வாக்குகளைப் பெற்று வென்ற ஒரு குடும்பத்தை தோற்கடித்த அரகலய அவ்வாறு துலக்கமான தலைமைகளை மக்கள் முன் நிறுத்தத் தவறியது.

அது மேலிருந்து கீழ்நோக்கிய பலமான தலைமைத்துவத்தை கொண்டதோர் அமைப்பு அல்ல. பக்கவாட்டாக ஒவ்வொருவரும் மற்றவரோடு பலவீனமான பிணைப்புகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு கட்டமைப்பு. பலமான சித்தாந்த அடித்தளமும் அந்த அடித்தளத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட இறுக்கமான ஒரு மக்கள் இயக்கமும் இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான் ரணில் விக்கிரமசிங்க அரகலயவை முறியடிக்க முடிந்திருக்கிறது.

அது ஒரு தற்காலிக வெற்றியா அல்லது நிரந்தர வெற்றியா என்பது பொருளாதார நெருக்கடியை ரணில்+ தாமரை மொட்டு அரசாங்கம் எப்படிக் கையாளப் போகிறது என்பதில்தான் தங்கியிருக்கிறது. குறிப்பாக ரணிலை மேற்கு நாடுகளும் சர்வதேச நாணய நிதியமும் எவ்வாறு பலப்படுத்தப் போகின்றன என்பதிலும் அது தங்கியிருக்கின்றது.

இலங்கைத்தீவின் நவீன வரலாற்றில் இதற்கு முன்னப்பொழுதும் நிகழ்ந்திராத ஒரு மக்கள் எழுச்சியானது கிட்டத்தட்ட நான்கு மாதங்களின் பின் ஓய்வுக்கு வந்திருக்கிறது. அதிலிருந்து தமிழ் மக்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பல பாடங்கள் உண்டு. ஆயுதப் போராட்டம் அல்லாத வழிகளில் எப்படிப் படைப்புத் திறனோடு போராடலாம் என்ற முன்னுதாரணத்தை அது உலகம் முழுவதற்கும் வழங்கியது. பிரதிநித்துவ ஜனநாயகப்பரப்பில் நாடாளுமன்றத்துக்கு வெளியே எப்படி மக்கள் அதிகாரத்தைத் தாற்காலிகமாகக் கட்டியெழுப்பலாம் என்பதனை அது உலகத்துக்கு நிரூபித்தது.அதேசமயம் பலமான சித்தாந்த அடித்தளமோ,கட்டமைப்போ,தலைமைத்துவமோ இல்லையென்றால் ஒரு போராட்டம் எவ்வாறு பலவீனமடையும் என்பதற்கும் அது ஆகப்பிந்திய ஓர் உதாரணம். அரகலயவின் முடிவு தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின் கடைசிக் கட்டத்தை ஞாபகப்படுத்துகிறதா? கடந்த சுமார் 50 ஆண்டுகாலப் பகுதிக்குள் இலங்கைத்தீவு மூன்று ஆயுதப் போராட்டங்களையும் தன்னெழுச்சியான ஒரு மக்கள் போராட்டத்தையும் தோற்கடித்திருக்கிறது. சிங்கள-பௌத்த அரசியல் பண்பாடு அரை நூற்றாண்டாக வரலாற்றில் இருந்து எதைக் கற்றிருக்கிறது ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவாவின் அவகாசமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்கள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரிடம் கையளிக்கப்படவுள்ளன. இதற்குள் ஈழத்தமிழர் தொடர்பான விடயங்கள் பெரிய அளவில் உள்ளடங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில் இலங்கைக்குப் பயணம் செய்யவுள்ள குழுவின் முக்கியமான அதிகாரியான ரொனிமுங்கொவன் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில், கோத்தாபய ராஜபக்சவை வெளியேற்றும் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் தாக்கப்பட்டமை, அச்சுறுத்தப்பட்டமை மற்றும் கைதுசெய்யப்பட்ட விவகாரங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படும் என்று கூறியுள்ளார். அத்துடன் இலங்கையின் மீள் நல்லிணக்கம் பற்றியே அவர் அதிகமாகவும் பேசியிருக்கிறார். மீள் நல்லிணக்கம் என்பது தனியே ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த விவகாரம் அல்ல. நல்லிணக்கம் என்ற சொல்லாடல் முழு இலங்கைத் தீவுக்கும் உரியதாகும். அதாவது சிங்கள அரசியல் கட்சிகள், தமிழ் , முஸ்லிம் கட்சிகள் மற்றும் ஏனைய சமூகங்கள், சமயங்கள் ஆகியவற்றுக்கு இடையேயான ஒற்றுமை பற்றிய கதைதான் இந்த மீள் நல்லிணக்கம் என்பது.

மேலும் கூறுவதானால் இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் அடிப்படையில் அனைத்துச் சமூகங்களும் இணைந்து வாழும் ஏற்பாடுதான் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை முன்வைத்து வருகின்ற இந்த மீள் நல்லிணக்கம் என்ற சொல்லாடல். இதன் பின்னணியிலேதான் பொறுப்புக்கூறல் தொடர்பான விடயங்களில் மேலும் இரண்டு வருட கால அவகாசத்தைக் கோர ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் திட்டம் ஒன்றை வகுத்து வருகின்றது.

ஜெனிவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்காக, இலங்கையினால் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையைத் தயாரிக்கும் பணிகள் தொடர்பாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தலைமையில் விசேட கலந்துரையாடல்கள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. சென்ற புதன்கிழமை அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தலைமையில், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் உள்ளிட்ட அதிகாரிகள் சுமார் இரண்டு மணிநேரம் ஒன்று கூடி நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் ஆராய்ந்துள்ளனர்.

குறிப்பாக ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக் கோரிக்கைகளை இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்களில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் மற்றும் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள சில அதிகாரங்களுடனும் மட்டுப்படுத்தி , அதனை அரசியல் தீர்வாக ஜெனிவாவில் முன்வைக்கும் ஏற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுவதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன. எதிர்காலத்தில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரை எதிர்கொள்வதற்காக, அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து தமிழர்களையும் உள்ளடக்கிய புதிய பொறிமுறையொன்றைத் தயாரிப்பது தொடர்பாகவும் இதன் போது ஆராயப்பட்டிருக்கின்றது.

சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜய் ராஜரத்னம், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.ஆர். கே.லேனகல, நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர்களான பியூமந்திர பீரிஸ், ஆர்.பீ.எஸ்.சமன்குமாரி, . ரோஹண ஹப்புகஸ்வத்த, அமைதி, நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பான அலுவலகத்தின் தலைவர் ஜே.ஜே.ரத்னசிறி, அதன் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

ஆகவே சீன விவகாரத்தினால் இந்தியா கோபமடைந்திருக்கிறது, அமெரிக்கா ஆத்திரமடைந்திருக்கின்றது என்று தங்களின் சுய ஊகங்களை ஆய்வுகள் போல கூறி, மீண்டும் மீண்டும் ஏமாறுவதைவிட, இதனை எதிர்கொள்வதற்கான மாற்றுத் திட்டங்களே தமிழ்த் தரப்பின் இன்றைய அவசியத் தேவையாகும்.

# விக்கினேஸ்வரன் துரோகியா? தியாகியா?

○ ந.பரமேஸ்வரன்

வடகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் , 'ஜனாதிபதி ரணில் அமைக்கவுள்ள சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து அமைச்சர் பதவியை பெற்றுக்கொள்வதாக இருந்தால் ஜனாதிபதி சில அடிப்படைப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்' என்று ஜனாதிபதி ரணிலிடம் சில கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.




விக்கினேஸ்வரன் அமைச்சர் பதவியை ஏற்கிறாரோ இல்லையோ , ஆனால் அவர் அமைச்சர் பதவியை ஏற்கக்கூடாது என்ற பிரசாரம் தமிழ்த் தேசியம் பேசும் ஊடகங்களில் முன்வைக்கப்பட்டு வருகிறது. அவரது கட்சியைச்சேர்ந்த அருந்தவபாலன், 'விக்கினேஸ்வரன் அமைச்சர் பதவியை ஏற்றால் விக்கி கோ ஹோம் போராட்டத்தை ஆரம்பிக்கும் முதலாவது ஆளாக நானே இருப்பேன்' எனவும் கூறியுள்ளார். அத்துடன் விக்கியர் தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பதாகவும் ஏனைய கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதில்லை என்ற குற்றச்சாட்டையும் அவர் முன்வைத்துள்ளார். (இதே போல் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலும் தமிழ் அரசுக்கட்சியிலும் சுமந்திரன் தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பதாக தொடர்ச்சியாக சுமந்திரன் மீது குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது) தமது இனத்தின் நலன்களை பாதிக்காத வகையில் ஒரு கட்சியின் அதிகாரத்தில் உள்ளவர்களான தலைவரோ, செயலாளர் நாயகமோ தீர்மானங்களை எடுப்பதை பிழை என்று சொல்ல முடியாது. அவ்வாறு அவர்கள் தீர்மானங்களை எடுக்கும் பட்சத்தில் 'மத்திய குழுவை கூட்டவில்லை; மற்றவர்களின் கருத்துக்களை கேட்கவில்லை' எனக் குற்றம் சுமத்துவதும் அபத்தமானது.

இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதல் அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சு பதவிகளை பெற்றுக்கொண்டவர்களை துரோகிகளாக வர்ணிக்கும் கலாசாரம் தமிழர்களிடையே தொடர்ந்து வருகிறது. இது ஆரோக்கியமற்ற போக்கு. சுந்தரலிங்கமும், ஜீ.ஜீ. பொன்னம்பலமும் அமைச்சர் பதவியேற்ற போது துரோகிகள் என வர்ணித்த தமிழ் அரசுக்கட்சி , தமிழ் தெரியாத மேட்டுக்குடி (கறுவாத்தோட்டவாசியான) திருச்செல்வத்தை அமைச்சராக நியமித்தது. திருச்செல்வம் 1969 ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டில் நாங்கள் எல்லாரும் ஒன்றாக இருக்க வேண்டும் என உரையாற்ற வெளிக்கிட்டு 'நாங்கள் எல்லாரும் 'ஒன்றுக்கு' இருக்க வேண்டும்' என உரையாற்றியிருந்தார் . இந்த உரை அப்போது தமிழ்ப் பத்திரி கைகளில் முன்பக்கச் செய்தியாகவும் இடம் பிடித்தி ருந்தது. தமிழ் நாட்டு பத்திரிகைகள் உட்பட.

முஸ்லிம்கள் எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும், அந்த ஆளும் கட்சியுடன் இணைந்து முஸ்லிம்களின் நலன்களைப் பெற்று வருவதுடன் தமிழர்களை ஒடுக்கும் செயற்பாடுகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர். தரப்படுத்தலை இலங்கை அரசாங்கம் கொண்டு வந்ததாக பிரசாரம் செய்யப்பட்டாலும், தரப்படுத்தலை கொண்டு வருவதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் அப்போதைய கல்வி அமைச்சர் பதியுதீன் முகமதே. தரப்படுத்தல்முறை அமுலுக்கு வந்த பின்னரே முஸ்லிம்களும் பொறியியலாளர்களாக வர முடிந்ததாக முஸ்லிம்களே எழுதியுள்ளனர். இதே போல் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தையும் தரமுயர்த்த விடாமல் முஸ்லிம் அரசியல்வாதிகள் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். இதற்கு அவர்கள் அரசாங்கத்துடன் இணைந்திருப்பதே காரணம். முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் அஷ்ரப் ,ஹெலி விபத்தில் கொல்லப்படும் வரை ஜனாதிபதி சந்திரிகாவின் கண்ணுக்குள் விரலை விட்டு ஆட்டிக்கொண்டிருந்தார். இப்போது ரணில் அமைக்கவுள்ள சர்வகட்சி அரசாங்கம் எவ்வளவு காலம் நீடிக்கும் ? ரணிலால் நாட்டை தற்போதைய பொருளாதார சிக்கலில் இருந்து விடுவித்து ஒரு முன்னேற்றப்பாதை யில் கொண்டு செல்ல முடியுமா என்பன கேள்விக்குரிய விடயங்களே. காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தாங்கள் அங்கிருந்து வெளியேறினாலும், தமது போராட்டத்தை கை விடவில்லை என ஊடகங்களுக்கு பேட்டியளித்து வருகின்றனர். மறுபுறத்தில் ரணில் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை கையாண்ட விதம் குறித்து சர்வதேசம் கடும் அதிருப்தியடைந்துள்ளது. இந்த நிலையில் ரணில் அல்லது இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கும் கடனுதவியோ நிதியுதவியோ சர்வதேசத்திடமிருந்து கிடைக்குமா என்பது சந்தேகம் தான். தான் எப்படியாவது ஆட்சியை அமைத்து விட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் ரணில் உறுதியாகவுள்ளார். இதற்காக எந்த எல்லைக்கும் செல்வதற்கு ரணில் தயராகவுள்ளார். ரணில் அமைக்கவுள்ள சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்ளப்போவதில்லையென ஜே.வி.பி ஏற்கனவே தெரிவித்துள்ளது. ஏனைய கட்சிகளின் ஆதரவின்றி தனியே மொட்டின் ஆதரவுடன் ரணிலால் ஆட்சி அமைக்க முடியாது. அமையவுள்ள அரசாங்கம் ஒரு பன்முகத்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டுமென்பதுதான் நிலைப்பாடு, அத்துடன் மனித உரிமைகள் ,ஜனநாயகப் பண்புகள் என்பவற்றை மதிக்கின்ற ஒரு அரசாங்கமாகவும் இருக்க வேண்டும்; இல்லையேல் சர்வதேசத்தினதோ , சர்வதேச நாணய நிதியத்தினதோ உதவி ரணில் அரசுக்கு கிடைக்காது. இந்த நிலையில் பேரங்கள், விட்டுக்கொடுப்புகள் என்பவற்றினூடாகவே ரணிலால் ஆட்சியை முன்னெடுத்துச்செல்ல முடியும். இப்போது அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய ஒரு அரசாங்கமே ஜனாதிபதியைப் பின்னாலிருந்து நகர்த்தப்போகிறது. இப்படியான ஒரு சூழ்நிலையில் தமிழ் தரப்புகளுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டிய அல்லது சில விட்டுக்கொடுப்புகளை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ரணிலுக்கு ஏற்பட்டுள்ளது. இந்தச்சந்தர்ப்பதில் தமிழர் தரப்பு சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். இலங்கை நாடாளுமன்றத்தில் அமைச்சர்களாக பதவி வகித்த தமிழர்களை 'துரோகிகள்' என வர்ணித்த தமிழர்கள், மகேஸ்வரனுக்கோ அவரது பாரியாருக்கோ துரோகிப் பட்டம் சூட்டவில்லை. மகேஸ்வரன் தம்பதியினர் தமிழர்களுக்கு என்ன செய்தார்கள்? என்பதை காரையின் மைந்தர்களிடம் தான் கேட்க வேண்டும். கோத்தாவுடன் இரகசிய ஒப்பந்தம் செய்து கப்பலில் இராணுவத்துக்கு ஆயுதம் அனுப்பி விட்டு , நாடாளுமன்றத்தில் சேர்ட்டை கிழித்து சீன் போட்டதைத்தவிர மகேஸ்வரன் என்ன செய்தார்?

கடற்புலிகளின் தாக்குதல் காரணமாக பலாலிக்கு ஆயுதங்களை எடுத்து வருவது இலங்கை கடற்படைக்கு கடினமாக இருந்தது. அப்போதைய பாதுகாப்பு செயலாளரும் நாட்டை விட்டு தப்பியோடிய ஜனாதிபதியுமான கோத்தாபய, மகேஸ்வரனை அழைத்து 'கடற்படைக்கப்பல்களில் ஆயுதம் கொண்டு வந்தால் புலிகள் தாக்குதல் நடத்துவார்கள்; உங்களுடைய கப்பலில் ஆயுதம் கொண்டு வந்தால் புலிகள் தாக்குதல் நடத்த மாட்டார்கள். எனவே உங்களுடைய கப்பலை ஒரு முறை தாருங்கள்' என கோரிக்கை விடுத்தார். மகேஸ்வரனும் 'நான் கப்பலைத் தந்தால் அது பிரச்சினை . நீங்கள் கப்பலை பலவந்தமாக எடுத்துச்செல்வது போல் எடுத்துச்செல்லுங்கள்' என பதிலளித்தார். மகேஸ்வரனின் கப்பலில் ஆயுதத் தளபாடங்கள் எடுத்துச்செல்லப்பட்டதும் மகேஸ்வரன, 'நீங்கள் (அரசாங்கத்தினர்) பலவந்தமாக எனது கப்பலை கொண்டு சென்று விட்டீர்கள்' என தனது சேர்ட்டை கிழித்து நாடாளுமன்றத்தில் நாடகமாடினார். எவருக்கேனும் சந்தேகமிருப்பின் "Gotta's War"என்ற நூலை எடுத்துப்பார்க்கவும். அப்படிப்பட்ட மகேஸ்வரனுக்கு ஏன் துரோகிப்பட்டம் கொடுக்காமல், தமிழ்த்தரப்பு மௌனமாயிருக்கிறது? விக்கினேஸ்வரன் ,ரணிலிடம் முன்வைத்துள்ள கோரிக்கைகளுள் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்கள் விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான நீதி விசாரணை போன்ற விடயங்களும் அடங்கியுள்ளன . விக்கியரின் இந்தக் கோரிக்கைகளுக்கு ரணில் சாதகமான பதில் அளித்துள்ளதார் எனவும் விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எனவே அமைச்சர் பதவியை ஏற்கப்போகும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மகேஸ்வரனைப்போலலன்றி, அடங்காத்தமிழன் சுந்தரலிங்கத்தைப்போன்று செயற்பட்டால் அமைச்சு பதவியை ஏற்பதில் எதுவித தவறுமில்லை. இலங்கை சுதந்திரமடைந்த போது அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் . டி.எஸ்.சேனநாயக்காவின் முதலாவது அமைச்சரவையில் அமைச்சராக பதவியேற்றார். 1949 ஆம் ஆண்டு மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்த இந்திய= பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச்சட்டம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது , தனது அமைச்சர் பதவியை தூக்கியெறிந்து விட்டு நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறினார் சுந்தரலிங்கம். இதே போல் விக்கியரும் தாராளமாக ரணிலுடன் இணைந்து அமைச்சர் பதவியை பெற்றுக்கொள்ளலாம். ரணில் விக்கியருக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத்தவறினால் உடனே தனது அமைச்சர் பதவியை தூக்கியெறிந்து விட்டு வெளியேற வேண்டும். தமிழ் மக்களின் நலன்களில் அக்கறையுடன் செயற்படும் விக்கியர் எந்தச்சந்தப்பதிலும் சோரம் போக மாட்டார்; சுந்தரலிங்கத்தைப்போன்றே செயற்படுவார் என்றால் அவரை ஒரு தியாகியாக நினைத்து தமிழ் மக்கள் ஆதரவளிக்கவே செய்வர். ஆனால் மாறாக விக்கினேஸ்வரனும் பதவி கிடைத்ததும் , அந்தச் சுகத்தை அனுபவிப்பதற்காக இனநலனை மறந்து செயற்படுவாரானால் வரலாற்றில் இன்னொரு துரோகியாக மாறிவிடவும் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆர்.லயனல்

# பூனையாகிறதா சிங்கம்?

ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கு இன்னும் சில வாரங்களே உள்ள நிலையில், அந்தத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளின் வகிபங்கு என்னவாக இருக்கப்போகின்றது?

வழக்கம்போன்ற சவால் மிகுந்த ஆட்டத்தை மேற்கிந்தியத் தீவுகள் அணியால் வெளிப்படுத்த முடியுமா? அல்லது புள்ளிகளை இதர அணிகளுக்கு வாரி வழங்கும் வள்ளலாக மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்த உலகக்கிண்ணத் தொடரில் இருக்கப்போகின்றதா? என்ற கேள்விகளும் விவாதங்களும் தற்போது வலுவாக எழுந்துள்ளன. மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபைக்கும் அந்த நாட்டின் மூத்த வீரர்களுக்கும் இடையிலான மனக்கசப்புகள், ஊதிய ஒப்பந்தப் பிரச்சினைகள் இன்னமும் முடிந்தபாடில்லை. நீறுபூத்த நெருப்புப்போல் அவ்வப்போது தணிவதும் பின்னர் சட்டெனத் தீப்பற்றி எரிவதுமாக இருந்த இந்தப் பிரச்சினை அண்மைய நாள்களாக கொஞ்சம் கூடுதலாகவே எரிய ஆரம்பித்து ,தற்போது காட்டுத்தீயாக வியாபித்திருக்கின்றது. அந்தக் கட்டற்ற காட்டுத்தீ தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுமா? இந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்படுமா என்பதுதான் இப்போது கிரிக்கெட் ரசிகர்களின் அங்கலாய்ப்பும் எதிர்பார்ப்பும்.

லாரா, சந்தர்போல் போன்ற பெயர்போன வீரர்களின் ஓய்வின் பின்னர் மேற்கிந்தியத் தீவுகள் அணி டெஸ்ட் மற்றும் ஒருநாள் ஆட்டங்களில் சோடைபோனாலும் ரி-20 ஆட்டங்களில் புஜபல பராக்கிரமசாலியாகவே வலம்வந்தது. கிரிக்கெட்டின் முன்னணி விமர்சகரான இயன் சப்பல் மேற்கிந்தியத் தீவுகளின் இந்த நிலையை 'சிங்கமும் பூனையும் சேர்ந்தாற்போல்' என்று விமர்சித்திருந்தார். ஆனால், ஊதிய ஒப்பந்தப் பிரச்சினையாலும் .இதர தன்முனைப்புகளாலும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக விளையாடமாட்டோம் என்று ரசல், பிராவோ, பொலாட் போன்ற முன்னணி வீரர்கள் மறுத்ததை அடுத்து தற்போது மேற்கிந்தியத் தீவுகள் அணி பூனையாகவே மாறிவிட்டது. சிங்கத்துக்கு ஏற்ற எந்த அம்சமும் இப்போது அந்த அணியில் இல்லை.

முன்னெல்லாம் மேற்கிந்தியத் தீவுகள் அணி ரி-20 கிண்ணமொன்றை இழந்தால் அது தலைப்புச் செய்தியாக இருக்கும். ஏனெனில், ரி-20 உலகக்கிண்ணங்களுடன் ரி-20 ஆட்டங்களுக்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த பெருமை அந்த அணியையே சார்ந்திருந்தது. இப்போது மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒற்றைக் கிண்ணத்தை வென்றெடுப்பதுகூட பெரும்பாடு. இந்திய அணி தனது முக்கியமான வீரர்களுக்கு ஓய்வை வழங்கிவிட்டு அண்மையில் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றுவிளையாடியது. அவ்வாறு சென்ற மூன்றாம் நிலை இந்திய அணி நிரந்தரப் பதினொருவர் கொண்ட குழாமாக தீவுகளை எதிர்கொள்ளவில்லை. சுழற்சி முறையில் வீரர்களுக்கு ஓய்வை வழங்கி, மேற்கிந்தியத் தீவுகளை ஓர் அணியாகவேனும் மதிக்காமல் பெரும் கோமாளித்தனங்களைப் புரிந்து கிண்ணத்தை வென்றெடுத்தது இந்திய அணி.

இந்திய அணியின் சுற்றுப்பயணம்தான் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குள் தற்போது இருக்கும் விரிசல் நிலையை மீண்டும் வெளியுலகுக்குக் காட்டியுள்ளது. 'தோல்வியால் வெட்கமடைகின்றோம். அதற்காக மூத்த வீரர்களிடம் யாசகம் எடுக்க நாம் தயாரில்லை' என்று பொரிந்து தள்ளியுள்ளார் தீவுகளின் தலைமைப் பயிற்சியாளர் பில் சிம்மன்ஸ். அவரின் இந்தக் கூற்று அனுபவ வீரர்கள் மீண்டும் மேற்கிந்தியத் தீவுகளுக்காகக் களமிறங்கத் தயாரில்லை என்பதை தெளிவாகவே கட்டியம் செய்கின்றது. மூத்த வீரர்களும் பில் சிம்மன்ஸின் கருத்துக்குப் பதிலடி கொடுத்துள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகள் என்பது ஒரு நாடு அல்ல. ட்ரினிடாட், ஜமைக்கா உள்ளிட்ட பல தீவு நாடுகளின் கிரிக்கெட்டுக்கான ஒன்றிணைவுதான் மேற்கிந்தியத் தீவுகள். இதனால், இதர அணி வீரர்களிடம் உள்ள நாட்டுப்பற்றை மேற்கிந்திய வீரர்களிடம் எதிர்பார்க்க முடியாது. இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் பெரும்காரணம் இதுதான். இந்தத் தன்முனைப்புக்களைக் கைவிட்டு ஓர் உச்சக்கட்டப் புரிந்துணர்வுக்கு மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையும் அதன் மூத்த வீரர்களும் வராவிட்டால், வரும் உலகக்கிண்ணத் தொடர் மேற்கிந்தியதீவுகளுக்கு துர்க்கனவாகவே அமையும். மாறாக 'யாசகம் எடுக்கமாட்டோம்' என்ற தன்முனைப்பு அறிக்கைகளை வழங்கிக் கொண்டிருந்தால் ஒட்டுமொத்த மேற்கிந்தியத் தீவுகளும் உலகக்கிண்ணத் தொடரில் ஒரேயொரு வெற்றிக்காக-ஆப்கானிஸ்தானிடமும்கூட- தவமாய் தவமிருக்க வேண்டியே இருக்கும்.




# சினிமாவுலகில் ஒரு குறிஞ்சி

காதலின் தீவிரத்துக்கு முன் மதம், அரசியல், ஏற்றத் தாழ்வு என எதுவுமே தடையாக முடியாது என்பதே 'சீதா ராமம்' திரைப் படம் சொல்லும் செய்தி.

பாகிஸ்தானில் தனது தாத்தா கொடுத்த கடிதம் ஒன்றை இந்தியாவில் இருக்கும் சீதா மகாலட்சுமி என்பவரிடம் கொடுக்க நாடு தாண்டி வருகிறார், இளம் பெண் அப்ரின். அவரைத் தேடி அலைபவருக்கு சீதா - ராம் காதல் கதை தெரிய வருகிறது. யார் இந்தக் காதல் ஜோடி? அந்தக் கடிதத்தில் என்ன இருக்கிறது? அந்தக் கடிதம் சீதாவிடம் போய்ச் சேர்ந்ததா? என்பதை காதலும் நேசமுமாக நெஞ்சுக்குள் கொண்டு சேர்க்கும் படம்.



புத்திசாலி இராணுவ வீரராகவும், தீவிர காதல் நாயகனாகவும் நடிப்பில் இருவேறு பரிமாணம் காட்டி ஆச்சரியப்படுத்துகிறார் துல்கர் சல்மான். முகவரி இல்லாத அந்த சீதா மகாலட்சுமியின் காதல் கடிதம் வரத் தொடங்கியதில் இருந்தே துல்கரின் நடிப்பும் துடிப்பும் காதலின் புது இலக்கணம்.

ராமனுக்கு காத்திருக்கும் சீதையாக, எதற்காகவும் காதலை விட்டுக் கொடுக்க முடியாத காதலியாக, தொடக்கம் முதலே வசீகரிக்கத் தொடங்கி விடுகிறார் மிருணாள் தாக்கூர். தான் யார் என்பதை காதலனிடம் சொல்ல முடியாத காட்சிகளில் அந்த தவிப்பை நமக்கும் கடத்தி விடுகிற நடிப்புச் சிறப்பிலும் ஜொலிக்கிறார்.

அப்ரினாக வரும் ராஷ்மிகாவும் தேர்ந்த நடிப்பைத் தருகிறார். உயர் ராணுவ அதிகாரிகளாக பிரகாஷ்ராஜ், கௌதம் மேனன், நாயகனின் நண்பனாக சுமந்த் தேர்ந்த நடிப்பில் சிக்ஸர் அடிக்கிறார்கள். நாயகனின் அந்த தங்கை பாத்திரமும் அவள் மீட்புப் படலமும் கதைக்குள் இன்னொரு சுகமான வலி.

காஷ்மீரின் குளிரை நமக்குள் கடத்தி விடுகிறது பி.எஸ்.வினோத்ஸ்ரேயாஸ் கிருஷ்ணா ஒளிப்பதிவு. விஷால் சந்திரசேகரின் பின்னணி இசை கவனிக்க வைக்கிறது.

காதலுக்கு இன்னொரு இலக்கணம் எழுதியிருக்கிறார் இயக்கிய ஹனு ராகவபுடி. அதிலும் இறுதிக்காட்சி உருக்கத்தையும் தாண்டி கம்பீரமாக மனதில் பதிகின்றது. இந்திய சினிமா வரலாற்றில் 'சீதாராமம்' ஒரு குறிஞ்சி மலர்.


[illegible]



# அரிவாள்மனையா, அரிவாள்மனையா ??

மகுடேசுவரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திரும்ப வருவாரா?

"எந்த நாடு தஞ்சம் கொடுத்துதோ தெரியாது. சிங்கப்பூர் போச்சுதோ? தாய்லாந்துக்கு போச்சுதோ? ஆருக்குத் தெரியும்? உவர் ஒரு இடமாய் இராமல் கன இடங்களுக்கு இடம்மாறி போய்தான் திரும்பவும் இஞ்ச வந்திருக்கிறார்"
"போற இடங்களியும் பொரிச்ச மீனில கைவைச்சிருப்பர். அங்க இருக்கிறவை சும்மா விடுங்களே"

சஞ்சீவி சிறுகதை

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

பிரச்சினைகள் முடிந்து. இனி நிம்மதியாக இருக்கலாமெண்டால் முடிகிறதா?
கொரோனா வந்த வேகம் குறைந்து, மரணிப்பவர்கள் தொகை வீழ்ச்சியடைந்தபோது, வீட்டுக்குள் அடங்கி ஒடுங்கியிருந்தவர்கள் வெளி உலகத்தைப் பார்த்து நிம்மதியாக 'முகமூடிகளைக் கழற்றி, சுத்தமான காற்றை சுவாசித்தோம். அன்றாட வாழ்க்கையானது சற்று அமைதியாகிக் கொண்டிருந்த வேளை எல்லாமே தலை குப்புற வீழ்ந்துவிட்டது. நாட்டில் வெளிநாட்டு பொருள்களை வாங்குவதற்கு டொலர் அரசாங்கத்திடம் இல்லாமை பெரிய அபாயகரமான பிரச்சினையை உருவாக்கிவிட்டது. தாங்கள் மிகவும் விரும்பி ஆட்சியில் அமர்த்தியவர்களே - நம்பிக்கையிழந்து- அவர்களை அகற்றப் போராட்டம் வெடித்தது.
"ஆட்சியை விட்டு வெளியே போ"
சரி நாடுதான் .அப்படியெண்டால்... எனது வீட்டு நிலைமை? அதை என்னவென்று சொல்வது?
எனது சிக்கலைத் தீர்க்க யார் முன்வருவார்கள்?
யார் போராட்டம் நடத்துவார்கள்?
பென்சன் எடுத்தாகிவிட்டது. கொரோனாத் தடுப்பூசி மூன்றும் தவறாமல் போட்டாகிவிட்டது. சரி நிம்மதியாக இருக்கலாமெண்டால் முடியவில்லையே?
வழமைபோல் இரவு விளக்குகளை நிப்பாட்டி எல்லாரும் (நான், மனுசி, பிள்ளை) படுக்கைக்கு போகும்போது தான் அந்தச் சத்தம் கேட்டது.
அது மிகவும் பழக்கப்பட்ட குரல். அடிக்கடி எங்கள் காதுகளில் கேட்ட குரல்- அதுவும் அந்த தடிப்பான கரகரப்பான அதிகாரம் பண்ணும் குரல்.
"மி...யா...வ்வ்வ்வ்வ்வ்வ்"
"அரணி பெரிய பூனை வந்திட்டுது. கத்திக் கேக்குது"
"என்ன... வந்திட்டுதோ?"
'பெற்றோல் பவுசரை கண்ட தமிழ் மகன்போல்' மகளின் குரல் பெரிதாக ஒலித்தது.
எல்லோரும் எழுந்துவிட்டோம்.
"வெளியாலதான் கேக்குது... விளக்கைப் போடுங்கோ..."
நான் நினைத்தது சரி. அவரே தான். ஒரு வருஷத்துக்கு முந்தி வீட்டை விட்டு வெளியேறிய பெரிய பூனையார் திரும்ப வந்துள்ளார். அதனைப் பெரிய பூனையென்று சொல்வதற்கான காரணம், மற்றைய பூனைகளை விட அது தோற்றத்தில் பெரிதானதாகவே இருந்தது. நாட்டின் ஜனாதிபதிபோல் . பெரிதாக அதில் வித்தியாசம் தெரியவில்லை. கம்பீரமாக நின்றது.
"இத்தனை நாளும் எங்க நிண்டிருக்கும்?"
"கணக்குப் பண்ணிப் பாத்தால் ஒரு வருசமெல்லே ஆகுது"
"மறக்காமல் வந்திட்டுது"
அது எங்களைக் கண்டவுடன் கால்களுக்கிடையே புகுந்து முதுகை தேய்த்து செல்லமாக " மியாவ்" என்று கத்தியது.
"நான் ஒரு தப்பும் பண்ணவில்லை" என்ற நிலையில் பூனை நின்றது.
"சனியன் இவ்வள்வு நாளும் எங்க போட்டு வந்து நிக்குது?"
"போன இடத்தில என்ன பிரச்சினையோ?"
"இப்ப நாடு இருக்கிற நிலையில வீட்டில ஆக்களுக்கே சாப்பாடு போடுறது கஸ்ரமான விசயம். அதுதான் உவரை துரத்திப் போட்டங்களோ?"
"உதப் பாத்தா கஸ்ரப்பட்டு இருந்தமாதிரி தெரியேல்ல. இருந்த அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துபோட்டு வந்தவர் மாதிரி கிடக்குது.
ஏதோ வில்லங்கம் நடக்கப்போகுது"
"சரி இப்ப நாங்கள் வளர்க்கிற குட்டிப்பூனை என்ன செய்யப்போகுதோ?"
இப்போதுதான் வீட்டில் இருக்கும் எங்கள் குட்டிப்பூனை ஞாபகத்துக்கு வந்தது.
"ஐயோ... ஓமப்பா... பெரிய பூனை கண்டால் எங்கட குட்டிப்பூனையை விடாதப்பா..."
"குட்டிப்பூனையை பாருங்கோ..."
இதுவரை நேரமும்' சீனாவால் தனக்கு வரவிருக்கும் ஆபத்தை உணராத தாய்வானைப் போல் 'உள்ளே குழைச்சுப் போட்ட மீன் சோத்தை சாப்பிட்டு போட்டு படுத்துக் கிடந்த குட்டிப்பூனை..,
பேச்சுக் குரலோடு "மியாவ்" சத்தத்தை கேட்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தது.
நாங்கள் எதற்குப் பயந்தோமோ, அப்படியே அது நடந்தது.
பெரிய பூனை , குட்டிப்பூனையைக் கண்டதும் முதலில் திகைப்படைந்தது. உடம்பை சிலிர்த்தது. குட்டிப்பூனையைப் பார்த்து முறைத்தது.
'எனது பழைய இடம் எனக்கே சொந்தமென்று வந்தால் இங்கே எனது இடத்தில் வேறொருவன் பதவியில் உள்ளான். இது என்ன புதுப் பிரச்சினை?'- இது பெரிய பூனையின் யோசனை.
நாட்டு அரசியல் புரியாத சின்னப் பூனை என்ன நினைத்தது?
"யாரிவன் ?எங்கிருந்து வந்தான்? எனக்கு பெரியப்பா மாதிரி இருக்கிறான். இவர்களுக்கு இவன் புதியவனாகத் தெரியவில்லையே. பழக்கப்பட்டவனாகத் தெரிகிறான். அவர்களோடு ஒட்டியபடி என்னை முறைக்கிறான்... யாராகயிருந்தால் எனக்கென்ன ? எனது இடத்தை விட்டுக் கொடுக்க முடியாது"
உக்ரைன் ஜனாதிபதியை விட குட்டிப்பூனை எதிர்ப்போடு நின்றது. அவ்வளவுதான்,
வீட்டில் ஒரு உலகப் போர் வெடித்தது.
"ஐயோ, ஐயோ... கிரகம் உது ஏன் இப்ப வந்தது? போன மாதிரி போக வேண்டியதுதானே"
எங்கள் அதட்டலை அவையிரண்டும் கண்டுகொள்ளவில்லை. பாய்ந்தன, கடித்தன, உருண்டன.
பின்னர் இரண்டும் வெளியில் காணாமல் போயின. நாங்கள் ஒரு வழியாக படுக்கைக்கு போன பிண்பும் வெளியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள்(அதுதான் மியாவ் , மியாவ் சண்டைச்சத்தங்கள்) கேட்டுக்கொண்டுதான் இருந்தன.
காலையில் பெரிய பூனை கத்துவதும் குட்டிப் பூனை அவலக் குரல் எழுப்பியபடி வெளியே ஓடுவதும், ஆட்டுக் கொட்டிலில் படுத்துக் கிடந்து [illegible] [illegible] நேரங்களில் பயந்து பயந்து வந்து பாதி சாப்பிட்டுவிட்டு வெளியில ஓடுவதும் தொடர்ந்தது. பெரிய பூனையும் ஒரு முடிவோடுதான் வந்திருக்க வேண்டும். வீட்டில் மனைவியும் , மகளும் தடியை எடுத்து "வெளியால போ. வெளியால போ..." என விரட்ட அது அப்பால் ஓடுவதும் , மறுபடி முன்பக்க வாசல் வழியாக கத்தியபடி மீண்டும் வருவதுமாகவிருந்தது.
என்னத்தைச் சொல்ல?
இரவிலும் இதே பிரச்சினைதான்.
"என்னை ஏற்றுக்கொள்ளுங்கோ. நான் விட்டிட்டுப் போனது பிழைதான். என்னை நம்பித்தான் வோட்டுப் போட்டு உள்ள விட்டனீங்கள். நானும் சரிவர என்ர வேலையைச் செய்யேல்ல. உங்கட இருப்பில கையை வைச்சிட்டன். அதால சொல்லாமலே போட்டன். என்னை மன்னியுங்கோ"
அது போகாமல் கத்திக் கொண்டே திரியுது. அதன் கத்தலை அடக்க எனக்காக வேண்டி வச்ச கிறீம் கிறாக்கர் பிஸ்கட் இப்ப நாய்க்கு உணவாகியது.
வெளியே பூனைகள், உள்ளே நாங்கள்.
"நான் அப்பவே சொன்னனான் . உதுகளை வளக்க வேண்டாமெண்டு. ஒழுங்கா நில்லாது. சமைச்ச சாப்பாட்டில வாய வைச்சிடும். எத்தினை பொரிச்ச மீனை தூக்கிக் கொண்டு போயிருக்கும்?ஒரு மாதிரி போட்டுதெண்டு சந்தோசப்பட்டன்...."
"பெரிய பூனை இவ்வளவு நாளும் எங்கையப்பா இருந்திருக்கும்?"
"எந்த நாடு தஞ்சம் கொடுத்துதோ தெரியாது. சிங்கப்பூர் போச்சுதோ? தாய்லாந்துக்கு போச்சுதோ? ஆருக்குத் தெரியும்? உவர் ஒரு இடமாய் இராமல் கன இடங்களுக்கு இடம்மாறி போய்தான் திரும்பவும் இஞ்ச வந்திருக்கிறார்"
"போற இடங்களிலயும் பொரிச்ச மீனில கைவைச்சிருப்பார். அங்க இருக்கிறவை சும்மா விடுங்களே"
"இவரும் மனித உரிமை மீறல்தானே செய்திருக்கிறார்"
"தகப்பனும் மேளும் கதையை நிப்பாட்டுங்கோ. கெதியாய் உவர வெளியால அனுப்புற வழியை பாருங்கோ..."
"எந்த நாட்டுக்கப்பா அனுப்புறது? பாஸ்போர்ட் எடுக்கவெல்லோ வேணும்"
"வாயை மூடுங்கோ.எங்கட குட்டிப்பூனை பாவமெல்லே..."
"பழைய பூனையும் உப்பிடி பாவமாய் இருந்து பிறகு வேலையை காட்டிப் போட்டுது"
"பதவியில இருந்தினால் இப்படித்தான்"
"பெரிய பூனைக்கு பயந்து எங்கட குட்டிப்பூனை வேற இடத்துக்கு போயிடுமோ?"
"அது போகாது. நாங்கள் கவனிக்கிறம்"
வீட்டில் மட்டுமல்ல, நாட்டிலும் போராட்டம் உக்கிரமடைந்தது. மக்களுக்குத் தேவையான எரிபொருள், மின்சாரம், உணவு, மருந்து, அத்தியாவசிய பொருள்கள் கிடைப்பது கஷ்டமெண்டால் மக்கள் என்ன செய்வார்கள்? ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையின் முன் பெருவெள்ளமாக மக்கள் கூட்டம் உள்ளே நுழைய, அலை மோதியது. எப்படியும் உள்ளே நுழைந்து விடுவார்கள் போல் தோன்றியது. தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்தோம்.
"என்ன... நடக்கப் போகுதோ தெரியாது"
"அம்மா... அங்க பாக்கிறத விடுங்கோ... பெரிய பூனை உள்ள வந்திட்டுது..."
"எங்க... எங்க...??"
"உங்க கட்டிலுக்கடியில போட்டுது"
"தடியை எடுங்கோப்பா"
"பிள்ள நீயும் எடு"
"ஓடு...ஓடு... வீட்டை விட்டு வெளியில போ...."
தொலைக்காட்சியில் சத்தம் பலமாகியது.
"கோத்தா கோ ஹோம்"
"கோத்தா கோ ஹோம்"
"வெளியால போ"
"இனி வருவியே இனி வருவியே"
"ஓடு ஓடு"
இங்கே பெரிய பூனைக்கு அடிவிழுந்தது.
மேலும் தாக்குப்பிடிக்க முடியாமல் வெளியில் அது தலைதெறிக்க ஓடியது.
"அப்பா நியூஸ கேளுங்கோ.கோத்தாபாய வெளிநாடு தப்பிப் போட்டாராம்"
'சிலமணிநேரத்தில் எங்கள் குட்டிப்பூனை நடுக்கமில்லாமல் உள்ளே நுழைந்தது.
இரவு மனைவி கேட்டாள்.
"அப்பா போனது திரும்பி வருமா?"
நான் மேலும் கீழும் பார்த்து விட்டுக் கேட்டேன்.
"எது? பூனையா... ஜனாதிபதியா?"

(யாவும் சிந்தனையே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண வரலாறு

○ ந.பரமேஸ்வரன்

## 1505-1948 வரை

எமது விறாந்தையில் வைத்து நான் அவர்களுக்கு கல்வி புகட்டினேன். அவர்கள் விரைவிலேயே தமிழ் நெடுங்கணக்கு 247 எழுத்துக்களையும் பழகி விட்டார்கள். அத்துடன் மற்றவர்களைப்போல் குட்மோர்னிங் (Good Morning) தங்க்யூ ( Thank you) என்று சொல்லவும் பழகிவிட்டனர். ஒரு நாள் நான் அவர்களுக்கு படங்கள் நிறைந்த புத்தகம் (picture book) ஒன்றைக் காட்டினேன். அவர்கள் தங்கள் வாழ்நாளில் ஒரு போதும் படங்கள் அடங்கிய புத்தகத்தை காணவில்லை; மரங்கள்,மிருகங்கள் என்பன தான் இந்தப்படங்களில் உள்ளன என நான் விளக்கினேன். மிருகங்கள்,மரங்கள் அசைவதையோ அல்லது அவற்றின் ஒலிகளையோ நீங்கள் கேட்க முடியாது. இவை வெறும் படங்கள் மட்டுமே என்பதை நான் அவர்களுக்கு விளங்கப்படுத்தினேன். ஒரு நாள் எனது சகோதரி 14 மாணவர்களுக்கு ஆங்கில மொழி மூலமான பைபிள் வகுப்பு எடுத்துக்கொண்டிருந்தார்.இந்த சிறுவர்களிருவரையும் கண்டதும் ஏனைய மாணவர்களின் முகத்தில் அனல் தெரிந்தது. 'ஏன் இப்படி கோபமாகப் பார்க்கிறீர்கள்?' என எனது சகோதரி ஏனைய மாணவர்களைப் பார்த்துக்கேட்டார்.

அதற்கு 'அவர்கள் இவர்கள் குறைந்த சாதிக்காரர்கள்; நாங்கள் ஒரு தடியை எடுத்தால் இவர்கள் ஓடி விடுவார்கள்' என்றனர். 'இது இந்த நாட்டின் சம்பிரதாயம், தண்டனை' என்றும் சொன்னார்கள். எனது சகோதரி அவர்களில் மூத்த சிறுவனின் தலையில் கையை வைத்து, 'கடவுள் உங்களை விட சிறப்பான ஆன்மாவாகத் தான் அவர்களைப் படைத்துள்ளார். உங்களையும் அவர்களையும் காப்பாற்றுவதற்காகவே இயேசு மரணித்தார்' என்றார்.

அடுத்த நாள் உயர் சாதி மாணவர்கள் பாடசாலைக்கு வரவில்லை. எனது சகோதரி குறைந்த சாதிக்காரர்களைத் தொட்டதன் மூலம் தங்களை அவமானப்படுத்தி விட்டதாக அவர்கள் கூறினர். நாங்கள் செய்தது சரி என்பதே எமது நிலைப்பாடு. மறு நாள் உயர்சாதி மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தந்தனர். ஆனால் முகத்தை தொங்க விட்டவாறே வந்தனர்.

கசப்புவும் கட்டைப்பயலும் ஏனைய மாணவர்களை விட எல்லா விடயங்களிலும் சிறந்து விளங்கினர்.மேலும் மூன்று சிறுவர்களையும் இரண்டு சிறுமிகளையும் கசப்புவும் கட்டைப்பயலும் அழைத்து வந்தனர்; அவர்கள் தாங்களும் கல்வி கற்க விரும்புவதாகத் தெரிவித்தனர்.

இவர்கள் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். பொது நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு இவர்களுக்கு அனுமதியில்லை. இந்துக் கோட்பாடுகளின் பிரகாரம் பிறந்த நாள் முதல் இறக்கும் வரை ஏழைகளாகவே இருக்கிறார்கள். பாம்பு, பூச்சியைப்போலவே இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

எப்படி கடவுளுக்கு நன்றி சொல்வதென்று தெரியவில்லை; சில தினங்களுக்கு முன் எமது தேவாலயப் பிரார்த்தனையில் 300 உள்ளூர்க் கிறிஸ்தவர்கள் எதுவித சாதி வேறுபாடுகளுமின்றி பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. கடவுளின் வார்த்தை உண்மையானது விரைவில் கடவுளின் புகழ் உலகெங்கும் பரவும்.

**மானிப்பாயில் எமது பணிகள்**
**மானிப்பாய். டிசம்பர் 16 ,1880.**


நாங்கள் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு ஒரு வருடமும் மூன்று மாதங்களுமாகி விட்டன என்பதையும் மானிப்பாய்க்கு வந்து பத்து வாரங்களாகி விட்டன என்பதையும் என்னால் நம்ப முடியவில்லை. நான் இலங்கைக்கு வந்ததையிட்டு கவலைப்படவில்லை. கடவுள் தான் தனக்கு ஊழியம் செய்யுமாறு என்னை அனுப்பியுள்ளார்.



உங்களுக்கு தெரியும் வடமாகாணத்தில் 3.00,000 பேர் உள்ளனர். இவர்களுக்கு ஆங்கிலத் திருச்சபையில் இரண்டு குடும்பங்களும், வெஸ்லியன் திருச்சபையில் இரண்டு குடும்பங்களும்,எமது சபையில் ஐந்தும் உள்ளன.ஒவ்வொரு திருச்சபைக்கும் 30,000 பேர். மானிப்பாய் பிரிவில் 10,000 பேர் உள்ளனர். இரண்டு தேவாலயங்கள் உள்ளன. ஒன்று நாங்கள் தங்கியுள்ளது , மற்றையது நவாலியில் உள்ளது. நங்கள் எமது உதவியாளர்களுடன் வீடு வீடாகச்சென்று பிரசாரத்திலீடுபடுவதுடன், கூடாரக் கூட்டங்களையும் நடத்தி வருகிறோம். மானிப்பாயில் எட்டு கிறிஸ்தவ அறநெறி பாடசாலைகளை (Sabaath) அமைத்துள்ளோம். இவற்றில் மூன்று பாடசாலைகள் கடந்த இரு மாதங்களுக்குள் அமைக்கப்பட்டவை. இந்த பாடசாலைகளில் 18 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். இப்போது 200 பேர் வரையில் இணைந்துள்ளனர். புது வருடத்துக்கிடையில் 300 பேர் வரையில் இணைந்து கொள்வார்கள்.

மானிப்பாய் பிரதேசத்தில் பத்து பாடசாலைகள் உள்ளன. இவை அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இயங்குகின்றன. இங்கு 31 ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர், பெரும்பாலானோர் கிறிஸ்தவர்கள்.இந்த பாடசாலைகளில் வாரத்தில் ஒரு நாள், ஒரு மணித்தியாலம் பாடசாலை ஆரம்பமானவுடன் நாங்கள் பைபிள் வகுப்பு எடுக்கிறோம்.மத்தியூவின் வேதாகமத்தின் தமிழ் மொழிபெயர்ப்பின் [illegible] பிரதிகளை [illegible]

(பயணங்கள் தொடரும்)



# ஊர்ப்புதினம்

52

> இவரிட்டயிருக்கிற சோதிடப் புத்தகம் முழுக்க முழுக்க இங்கிலீஸிலதான் இருக்கும். எல்லாம் கணித ரீதியிலான பாகைக் கணிப்புகளோட இருக்கும். இவர் கணிஞன், ஆரூடன் எண்ட பெயரில சாதகக் குறிப்புகள் எல்லாம் எழுதிக் குடுக்கிறவர். எழுதினால் எழுதினதுதான். அரக்காது.

பஞ்சுமாமாவின்ர கலியாண் எழுத்து நடக்க நல்லாச் செண்டு போச்சு. நான் நைஸாக் கழண்டு வீட்டை போட்டன். வீட்டுக்காரரெல்லாம் எழுத்து வீட்ட நிண்டினம். எனக்குச் சரி யான அலுப்பாக்கிடந்தாப்போல அப்படியே முன்விறாந்தையில படுத்து நித்திரையாப் போனன். நடுச்சாமமிருக்கும். ஆரோ வந்து என்னை 'டேய்! இராகு! எழும்படா! 'எண்டு தட்டியெழுப்பத் திடுக்கிட்டு முழிச்சன். அரிக்கன் லாம்பை பிடிச்சுக்கொண்டு அம்மா நிக்கிறா. இதுக்குள்ள ஒரு சின்னக்கதை. இதைக்கேக்க உங்களுக்கும் இன்ரறெஸ்றா யிருக்குமெண்டதால சொல்லுறன். முந்தியொரு காலத்தில சர்வதேசக் கடற்பரப்பில வீசின புயலொண்டுக்குக் 'ஹரிக்கேன் (Hurrica ne) எண்டு பெயர் வைச்சவையாம். அந்தப் புயலுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடியதாய் இந்த லாம்பைத் தயாரிச்சவையாம். அதால இந்த லாம்புக்கு 'ஹரிக்கேன் லாம்ப்' (Hurricane lamp) எண்டு பெயராம். எங்கடை சனம் ஒப்பீஸர் எண்டதை 'ஓவசியர்' எண்டு மாத்தின மாதிரி இதையும் 'அரிக்கன் லாம்பு' எண்டு மாத்திப் போட்டுதுகளாம். இந்தளவு தகவலும் எனக்கு இங்கிலீஸ் படிப்பிச்ச கிருஷ்ணபிள்ளை சேர் சொன்னர்.

இதிலை இவரைப் பற்றிக் கொஞ்சம் சொல்லோணும். அவர் என்ரை மனிசிக்கு மாமன்முறை. இவற்றை வீட்டை போய்த் தான் நான் இங்கிலீஸ் படிச்சனான். ஆள் இலங்கை வானிலை அவதான நிலையத்தில தொழில்நுட்பப் பகுதியில வேலை செய்தவர். ஆளொரு சகலகலாவல்லவன். இங்கிலீஸில மட்டுமில்ல தமிழ், சமஸ்கிருதம், சிங்களம் எண்டு எல்லாத்திலயும் வலுவிண்ணன். இதுக்கொரு சின்ன 'எக்ஸாம்பிள்' சொல்லுறன். வடமொழியில 'ஸ', 'ஷ' எண்டு இரண்டு எழுத்திருக்குது. 'ஷ' எண்டது நறுமணத்தைக் குறிக்குமாம். 'ஸ' எண்டது துர்நாற்றத்தைக் குறிக்குமாம். அதால 'புஸ்பம்' எண்டெழுதிறது பொருத்தமில்லையாம் 'புஷ்பம்' எண்டுதான் எழுத வேணுமாம். மற்றது 'சரஸ்வதி' எண்டெழுதிறது பொருத்தமில்லை யாம். 'சரஷ்வதி' எண்டெழுதிறதுதான் பொருத்த மாயிருக்குமாம். 'சற்றடே றிவியூ' எடிட்டர் காமினி நவரட்ணவைப் பற்றி இவர்தான் எனக்குச் சொன்னவர். மற்றது சோதிடத்திலயும் வலுவிண்ணன். மற்றாக்கள் மாதிரியில்லை இவர். இவரிட்டயிருக்கிற சோதிடப் புத்தகம் முழுக்க முழுக்க இங்கிலீஸிலதான் இருக்கும். எல்லாம் கணித ரீதியிலான பாகைக் கணிப்புகளோட இருக்கும். இவர் கணிஞன், ஆரூடன் எண்ட பெயரில சாதகக் குறிப்புகள் எல்லாம் எழுதிக் குடுக்கிறவர். எழுதினால் எழுதினதுதான். அரக்காது. இதுக்கொரு சின்ன உதாரணம் சொல்லுறன்.

இவரின் கடைசி மகன் ராஜ்குமார் எண்டு. நாங்கள் அவரை 'ராஜ் அண்ணா' எண்டு சொல்லுவம். எங்களுக்கு ஓ.எல் வகுப்பில கொமஸ் படிப்பிச்சவர். ஆள் கடும் வளத்தி. ஆறடி உயரம். அதால எங்கட பொடியள் அவரைக் 'கொக்கர்' எண்டு செல்லமாக் கூப்பி டுவாங்கள். ராஜ் அண்ணா கொஞ்சக்காலம் மூத்தனார் கோயிலடி ' திருவீடியோ' நாதன் மாஸ்ரரோடு திரிஞ்சு வீடியோவும் எடுக்கிறவர். பிறகு வவுனியாக் கல்வியியல் கல்லூரி கிடைச்சு ,அங்க போய்ச் செற்றிலாகி வவுனியா வீரபுரம் மாணிக்கவாசக வித்தியாலயத்தில பிரதி அதிபராவும் இருந்தவர். தாஜ்மகால் எண்ட பெயரில வீடியோ சென்ரரும் நடத்தினவர்.

இவரின்ர சாதகத்தை எழுதேக்குள்ள தகப்பன்காரன் அதுதான் எங்கட இங்கிலீஸ்மாஸ்ரர் '2000 ஆம் ஆண்டு சாதகக்காரருக்கு (ராஜ் அண்ணைக்கு) கடுங்கண்டம்.

ஆள் முடியும்' எண்டு எழுதினார். அதேமாதிரியே அந்த வரியம் வவுனியாவில ரெலோவுக்கும் புளொட்டுக்கு மிடையில நடந்த குறொஸ் பயரிங்கில அகப்பட்டு ,ராஜ் அண்ணா செத்திட்டார் எண்டால் பாருங்கோவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் கதை

# மாணத்தி

48

கருணை ரவி

வலைஞர்மடத்துக்கு வந்து சரியாக ஐந்து நாட்கள். மந்துவில் வெளியில் இருந்து பனையளவு உயரத்துக்கு ஹெலிகொப்டர் உயர்ந்தது. பத்துப்பதினைந்து குண்டுகளை ஒரே ஏவலில் வலைஞர்மடத்துக்கு கொட்டியது. கஞ்சிவரிசையில் நின்ற சனங்களுக்கும் தேவாலயத்தைச் சுற்றியும் குண்டுகள் விழுந்தன. எங்கும் புகைக்காடு. கந்தக நெடில். அழுகுரல்கள். தேவாலயத்திலும் பாடசாலையிலும் இருந்தவர்கள் சிதறி ஓடினார்கள். ஷெல் துண்டுகள் தலைகள், நெஞ்சுகள், கால்களை அறுத்துச்சென்றன. விழுந்தவர்கள் மேல் மிதித்து ஓடியவர்களில் பூங்கொடியும் ஒருத்தி. ஒரு மணல் வெளியில் நின்று பூங்கொடி திரும்பிப்பார்த்தாள். வலைஞர்மடம் புகைத்துக் கொண்டிருந்தது.

இயக்கத்தின் எண்ணைக்குதம் எரிவதாகச் சொன்னார்கள். அதைப் பார்த்துக்கொண்டு எருக்கலை நிழலில் இருந்தாள். நிருபன் எருக்கலையைச் சுற்றி சீலையை கட்டிக்கொண்டிருந்தான். வெயில் எரித்துக்கொண்டிருந்தது. குழந்தைகளின் அழுகுரல்களை காற்று கலைப்பதாக இல்லை. ரவைகள் துரத்திக்கொண்டிருந்தன. இனி ஓடுவதற்கு இடமில்லை. ஒவ்வொருவரும் மணலில் கிடங்குகள் வெட்டிக்கொண்டிருந்தார்கள். பதுங்குவதற்கு அல்லது தங்களைப் புதைப்பதற்கு.

கடல் வழமையை விட அலை எழுப்பிக்கொண்டிருந்தது. நுரைகள் கரைகளில் திரண்டு வழிந்தன. ஈரக்கரைகளில் மலம் கழித்துக் கொண்டிருந்தார்கள் ஆண்கள். பெண்கள் பகலில் மலங்கழிப்பதை தவிர்க்கப் பழகிவிட்டார்கள். மலங்கழிப்பவர்களுக்கு மறைவுகள் எதுவுமில்லை. சிலர் மலம் கழிக்க மற்றவர்கள் அவர் அருகால் செல்வார்கள். கால்களுக்குள் மலம் பிசைப்படும். வெட்கம் தின்ற பெருவெளியில் மனிதர்



கள் பெருகியபடியிருந்தார்கள்.

பூங்கொடிக்கு முன்னால் ஒரு வட்டக்கிடங்கில் ஆறு போராளிகள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் காயப்பட்டவர்கள். கைகளிலும் கால்களிலும் தலைகளிலும் வெள்ளைத் துணிகளால் கட்டப்பட்டிருந்தன. கரையில் விடப்பட்ட படகுகளுக்குக் கீழேயும் சனங்கள் இருந்தனர். படகுக்கருகில் கஞ்சிக்காரர்கள் கொட்டில் போட்டுக் கொண்டிருந்தனர். பூங்கொடி வந்ததில் இருந்து அந்தப் போராளிகளையே பார்த்தபடி இருந்தாள். அவர்களைப் பராமரிக்க எவரையும் காணவில்லை . நேரம் பத்துமணியைக் கடந்து விட்டது. அவர்களுக்கு தேநீரோ, சாப்பாடோ இன்னும் கொடுக்கப்படவில்லை. சாப்பாடு கொடுப்பவன் எங்கே போயிருப்பான்? போகும் வழியில் சன்னங்கள் பட்டு இறந்திருப்பானா? அல்லது முன்னேறும் படைகளை தடுத்து நிறுத்தும் இடத்துக்கு அழைக்கப்பட்டிருப்பானா? அவள் அவர்களையே பார்த்தபடி இருந்தாள். நிருபன் கிணறு தோண்டிக் கொண்டிருந்தான். மூன்று முழம் தோண்ட தண்ணி வரும். அந்த வெளிகளில் தண்ணீருக்குப் பஞ்சமில்லை. கடற்கரையென்றாலும் தண்ணீர் உப்பற்ற தண்ணியாகவே இருந்தது.

அநேகமானவர்கள் உலைகள் வைப்பதில்லை. உப்பற்ற கஞ்சிகளே மூன்று நேரச்சாப்பாடாகிவிட்டது. உப்பு இல்லை, புளி இல்லை. தேங்காய் இல்லை, தூளில்லை, மரக்கறிகள் இல்லை, தண்ணியும் அரிசியும் உயிர்களை வளர்த்துக் கொண்டிருந்தன. வெயிலுக்கு மலங்கள் காய்ந்து மணம் வீசியது. எவரும் மூக்குகளைப் பொத்தவில்லை. மலச்சுவாசம் வாழ்வாகிவிட்டது. மூன்று இலட்சம் சனங்களின் மலங்கள் ஒரு மைல் நிலப்பரப்புக்குள் பிசு பிசுத்தன.

பூங்கொடி வரிசையில் நின்றாள். கஞ்சிப்பானையை இப்பதான் அடுப்பில் வைத்தார்கள். கஞ்சி ஆக்கமுதல் சனங்கள் நிறைந்துவிட்டார்கள். வானத்தில் ஆட்கள் அற்ற வேவு விமானங்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. நடந்து வந்த போராளிகள் துப்பாக்கிகளுடன் வள்ளங்களுக்கு இடையில் மறைந்திருந்தார்கள். விமானம் சென்றதும் போனார்கள்.

ஆயுதங்களுடன் அல்லது சீருடைகளுடன் நடமாடுவதை விமானங்கள் கண்டால் அந்த இடத்துக்கு ஷெல் அடிப்பார்கள். அல்லது கிபிர் வந்து குண்டுகள் போடும். ஆட்களற்ற விமானங்கள் வட்டமிட்டுச் சென்று பத்து நிமிடங்களில் கஞ்சிப்பானைக்கருகில் மூன்று ஷெல்கள் வந்து வெடித்தன. வரிசையில் நின்றவர்களை புழுதி மூடியும் மூடாமலும் நார்களாய் கிழிந்து கிடந்தார்கள். சிலர் கும்மிய சீலையாய் குவிந்து கிடந்தார்கள். கஞ்சிப்பானை இருந்த இடம் கறுத்திருந்தது. மணல் குருதியால் பிசைந்திருந்தது. காயப்பட்டவர்கள் துடித்துக் கொண்டிருந்தார்கள். காயப்பட்டவர்களை கஞ்சி காய்ச்சியவர்கள் தூக்கிக்கொண்டு போனார்கள். செத்தவர்கள் அப்படியே கிடந்தார்கள். சிலர் பானைக்குள் அரை அவியலாய் எஞ்சியிருந்த கஞ்சியை கிண்ணங்களில் ஊற்றினார்கள். சரிந்திருந்த பானைக்குள் இருந்த சோற்றை பூங்கொடி அள்ளினாள்.

காயப்பட்டவர்களை தூக்கிக்கொண்டு போய் வள்ளங்களுக்குக் கீழே படுத்தினார்கள். குற்றுயிராய்த் துடிப்பவர்களை வள்ளத்துக்குள் கிடத்திவிட்டு அடுப்பில் கஞ்சிப் பானையை ஏற்றினார்கள்.

பூங்கொடி அள்ளிய சோற்றுடன் வந்தாள். நிருபன் தாயைக் கண்ட சந்தோஷத்தில் சோற்றுக்கிண்ணத்தை வாங்கினான். கொஞ்சத்தை கோப்பையில் எடுத்துவிட்டு, மிகுதியை தாய்க்குக் கொடுத்தான். அவள் வாங்கிக்கொண்டு போராளிகளைப் பார்த்தாள். படுத்திருந்தவர்களை ஷெல்கள் எழுப்பியிருந்தன. அவள் வாங்கிய சோற்றை அந்தப் போராளிகள் இருக்கும் இடத்துக்குக் கொண்டு போனாள்.

பூங்கொடி கொண்டுபோன சாப்பாடு எல்லோருக்கும் காணாது. அவள் கொடுக்கும்போது அவர்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. சோற்றை வாங்கியவனுக்கு கையில் மட்டும் காயம். முழங்கையில் மருந்து கட்டியிருந்தான். ஏனையவர்களுக்குப் பெருங்காயம். சாப்பாட்டை குழைத்துச் சாப்பிடமாட்டார்கள். வாங்கியவனே சோற்றை கவளமாக்கி கொடுத்தான். ஏலாதவர்களுக்கு ஊட்டிவிட்டான். பூங்கொடி அவர்களைக் கேட்டாள்

"உங்களுக்கு சாப்பாடுகளை கொண்டுவந்து தாறதுக்கு ஒருத்தருமில்லையே?"

"நேற்று சாப்பாடு தந்திட்டுப் போனவன் திரும்பிவரேலை" "உங்கடை மகனுக்கும் காயமே?" தலையில் கட்டுப்போட்ட வேறொருவன் கேட்டான். அவள் சிரித்தாள். வேறொன்றும் சொல்லவில்லை. நிருபனுக்கு மாத்தளனில் வெள்ளைத்துணியால் கையில் கட்டினாள். கையை மடித்து தோளில் நூல் போட்டு ஒருகையை தூக்கிப்பிடித்தபடிதான் நிருபன் வலைஞர்மடத்துக்கு வந்தான். மாத்தளனின் இயக்கம் பங்கர் வெட்டுவதற்கு ஆட்களைக் கூட்டிக்கொண்டு போக . இயக்கத்துக்கு பிடித்துக்கொண்டு போவதாக சனங்கள் கதைக்கத்தான் அந்த புத்திசாலித்தனத்தை அவள் பயன்படுத்தினாள். அந்த புத்திசாலித்தனம் அவளிடமிருந்து விலகாதவரைக்கும் அவள் பயமின்றி நிருபனோடு திரிந்தாள். அதை அவள் அவர்களுக்குச் சொல்லவில்லை.

முதல் கவளத்தை வாங்கிச் சாப்பிட்டவன் போத்தலுக்குள் இருந்த தண்ணியை ஒரு குவளையில் ஊற்றி மற்றவனுக்கு பருக்கினான். அவர்களுக்குச் சாப்பாடு காணாது. கஞ்சிக் கொட்டிலைப் பார்த்தாள். சனங்கள் வரிசையில் நின்றனர். அவள் கஞ்சிக் கொட்டிலுக்குப் போனாள். செத்தவர்களின் உடல்கள் அப்படியே புதைக்காது இருந்தன. புதைக்க மண்வெட்டியில்லை. பிணங்களைப் புதைக்கில் கஞ்சி காய்ச்சுபவர்கள்தான் புதைக்க வேணும். பிணங்களைக் கண்டு பழகிப்போனவர்கள் பிணம் கிடக்குது எனும் அச்சம் ஏதுமற்று பிணங்களைக் கடந்து கஞ்சியுடன் போனார்கள்.

நந்திக்கடற்கரையில் சனங்கள் குவிந்து நின்றனர். வற்றாப்பளை கண்ணகி அம்மனை பலர் வணங்கினார்கள். வற்றாப்பளையில் இருந்து இராணுவம் வெள்ளைக்கொடி காட்டுவதாக குழுமி நிற்பவர்கள் கதைத்தார்கள். சிலர் நந்திக்கடலில் கால்களை வைத்தார்கள். ஆழமுள்ள இடம் எது? ஆழமற்ற இடம் எது? என்று கடலில் கால்கள் வைப்பவர்களுக்குத் தெரியாது. கடலில் கால் வைத்தவர்கள் சிலர் நீரில் மூழ்குவதை குழுமி நிற்பவர்கள் பார்த்தார்கள். சில அபாயக் குரல்களும் கடலில் கேட்டன. வற்றாப்பளையில் இருந்து சன்னங்களும் வந்தபடியிருந்தன. சூரியன் இறங்க இருள் அப்பிக்கொண்டு வந்தது. பூங்கொடி இரவுக்கென்று வைத்திருந்த கஞ்சியை அளவாக எடுத்துக்கொண்டு மிகுதியை போராளிகளுக்குக் கொடுத்தாள். எந்தத் தறப்பாள்களுக்குளும் விளக்குகள் இல்லை. விளக்குகள் கொளுத்தி கனநாட்களாகிவிட்டன. நிலத்தை 'பரா' வெளிச்சம் பகலாக்கிக்கொண்டிருந்தது. ரவைகள் நெருப்புக்கோடுகளை வானத்தில் கீறிக்கொண்டிருந்தன. ஷெல்கள் இடைக்கிடை சத்தமிட்டுக்கொண்டிருந்தன.

பூங்கொடியின் சீலைக் கூடாரத்துக்கு முன்னால் போராளிகள் வரிசையில் போய்க்கொண்டிருந்தார்கள். அப்படிப் போராளிகள் வரிசையில் போய்க்கொண்டிருப்பதை எங்கும் அவள் காணவில்லை. நிருபன் ஒவ்வொருவராக எண்ணிக்கொண்டிருந்தான். அவர்களின் கைகளில் துப்பாக்கிகள் இருந்தன. தோள்களில் ஆர்.ஜி.பி இருந்தது. சிலர் பெட்டிகளை முதுகுகளில் சுமந்து கொண்டு சென்றார்கள். கரையில் இருந்த வள்ளங்கள் ஒலிகள் எழுப்பின.

அவர்கள் போய் ஒருமணித்தியாலம் வரும். பி.பி.சி செய்தி எங்கும் கேட்டது. செய்தி ஊடாகத்தான் எங்கே நிற்கிறோம்... படைகள் எங்கே நிற்கின்றன..... என்பதை அறிவாள். செய்தியில் யுத்தநிறுத்தம் எதுவும் சொல்லவில்லை. இந்தியா நடவடிக்கை எடுக்கும் என நினைத்தவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. திடீரென முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் பக்கமாக துப்பாக்கிகள் சடசடத்தன. ஷெல்கள் கூவின. கிபிர்கள் வந்தன. பராலைற்றுக்கள் நீந்தின.

இப்படியொரு சத்தத்தை அவள் எங்குமே கேட்கவில்லை. அருணா இசைக்குழுவில் ட்றம்செற் அடிப்பதைப் பார்த்திருக்கின்றாள். நிமிர்ந்து படுத்துக்கொண்டு வானத்தை பார்த்தாள். சீறுவாணங்கள் போவதுவாய் சிவப்பாகிக் கொண்டிருந்தது வானம். சத்தங்கள் கிட்ட வருவதாக இருந்தன. அவள் கடவுளை மன்றாடவில்லை . கடவுளுக்கு கண் இல்லை என்று மாத்தளனில் பரவிக்கிடந்த உடல்கள் மேல் மண்ணள்ளிப்போட்ட பிறகு அவள் கடவுளை வணங்குவதில்லை. ஒன்பது மணிக்கு தொடங்கிய சத்தங்கள் நான்கு மணிக்கு ஓயத் தொடங்கின. விடிந்தது. வழமைபோலவே சன்னங்கள் இடைக்கிடை வந்து கொண்டிருந்தன. அவள் எழும்பிப் பார்த்தாள். சில தறப்பாள்கள் சிதறிக்கிடந்தன. படகுகள் பாறியும் சிதைந்தும் இருந்தன. அங்குமிங்கும் பனைக்குற்றிகளாக மனிதர்கள் கிடந்தார்கள். சனங்கள் போய்க்கொண்டிருந்தனர். எவர் முகங்களிலும் சிரிப்பில்லை. கதைகள் இல்லை. இராணுவத்தொப்பிகள் தெரிந்தன. இயக்கப் பொடியளை நினைத்து அவள் பயந்தாள். அவள் இராணுவத்தை இன்றுதான் காண்கின்றாள். கடைசியாக இந்திய இராணுவத்தினரை சீருடைகளில் கண்டதுக்கு இன்றுதான் சீருடைகளைக் காண்கின்றாள். அந்நிய இராணுவத்தினர் அணிந்திருந்த அதே சீருடைகளில் அவர்கள் நின்றார்கள். நாடுகளுக்கு நாடு சீருடைகள் வித்தியாசமில்லையோ என நினைத்துக்கொண்டு நிருபன் கையில் கட்டியிருந்த வெள்ளைத்துணியை அவிழ்த்தாள்.

இராணுவத்தினர் எல்லோரையும் கைகளைக்காட்டி அழைத்தனர். அவள் நினைத்தமாதிரி அவர்களிடம் வன்மங்கள் எதையும் காணவில்லை. வீதிநாடகங்களில் பார்த்த விகார முகங்கள் எதுவும் அவர்களிடமில்லை . இராணுவம் என்றால் அகன்ற விழிகளும் கோரப் பார்வைகளும் குருதி வடிந்த துப்பாக்கிகளுமாக இருக்கும் என்ற அவள் பார்த்த வீதிநாடகங்கள் பொய்த்துப்போயின.

அவள் நிருபனை [illegible] பிடித்தபடியே நடந்தாள். போராளிகளை [illegible] போராளிகளை கைகளில் பிடித்து கூட்டிச் சென்றார்கள். பத்து நிமிடங்களாக நடந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வெளியில் நிறைய பஸ்கள் நின்றன. சிலசனங்கள் பஸ்களில் ஏறினர். சில சனங்கள் மரங்களுக்குக் கீழே குழுமியிருந்தனர். அவர்களுக்கு சாப்பாடு கொடுத்தார்கள். தண்ணிப் போத்தல்கள் கொடுத்தார்கள். பிஸ்கற்றுக்கள் கொடுத்தார்கள். குழந்தைகளுக்கு மைலோ யூஸ் கொடுத்தார்கள். சோடா கொடுத்தார்கள்.

நிருபன் ஒரு சோடாவைக் குடித்தான். பலநாட்களாக தண்ணயும் கஞ்சியும் குடித்தவர்கள் சோடாக்களையும் பிஸ்கற்றுக்களையும் சாப்பிட்டு ஏவறை விட்டார்கள். முகங்களில் களைகள் இல்லை. குழந்தைகள் சிரித்தார்கள். பூங்கொடி இரண்டு சோடாக்களையும் பிஸ்கற்றுக்களையும் பையொன்றில் வைத்தாள். இருந்த சனங்களை கொஞ்சம் கொஞ்சமாக அழைத்து மூடிய கூடாரங்களுக்குள் கொண்டு சென்றார்கள். கூடாரத்துக்குள் போனவர்களையே பஸ்களில் ஏற்றினார்கள். நிருபனை அழைக்கும்போது பூங்கொடியும் போனாள். பூங்கொடியை பெண்கள் பகுதிக்கும் நிருபனை ஆண்கள் பகுதிக்கும் கொண்டு சென்றனர். கூடாரத்தைச் சுற்றி முட்கம்பிகள் இருந்தன. முட்கம்பிகளுக்கு வெளியில் இரண்டு இராணுவத்தினர் நின்றனர். அவர்களில் வீதி நாடகங்களில் வந்த இராணுவத்தினரின் முகங்கள் தெரிந்தன. விகாரம் தெரிந்தது.

"பையுக்குள்ள இருக்கிறதை கீழ கொட்டு"

தமிழில் சொன்னான். வீதிநாடங்களில் வந்த இராணுவத்தினர் கொச்சைத் தமிழில் கதைப்பதுமாதிரி இருந்தது. நிருபன் பைகளில் உள்ள எல்லாவற்றையும் கொட்டினான்.

"உடுப்பைக் கழட்டு"

என்றான். அவன் எதிர்ப்பார்க்கவில்லை இப்படிக் கேட்பான் என்று. அவன் நின்றான்.

"அடோ உடுப்ப கழட்டுறது..."

வீதிநாடக சிப்பாயின் விகாரம். அதட்டல். அவன் பயந்து கொண்டு சாரத்தை கழற்றி கீழே விட்டான்.

"ஜட்டி... ஜட்டி கட்டுறதில்ல, அ..." அவன் பேசாமல் நின்றான். "சறி சறி எல்லாத்தயும் எடுத்துக்கொண்டு போறது"

இறுக்கிச் சாரத்தைக் கட்டிக்கொண்டு சாமான்களையும் பொறுக்கிக் கொண்டு வெளியில் போக, பூங்கொடி நிருபனைப் பார்த்துக் கொண்டு நின்றாள். நிருபன், பூங்கொடியின் சீலையைப் பார்த்தான். சட்டையைப் பார்த்தான். நிருபனைக்கண்ட சந்தோஷத்தில் அவள் வழிந்து தூங்கிய தொங்கலை எடுத்து இடுப்பைச் சுற்றி எக்குக்குள் சொருகினாள். நிருபன் பூங்கொடியின் பக்கத்தில் இருந்தான். பஸ்கள் சனங்களை இழுத்தபடி இருந்தன. காயப்பட்டவர்களை இராணுவ வாகனத்தில் ஏற்றினர். சீருடையில் நின்ற பெண் போராளிகளை ஜீப்பில் ஏற்றினார்கள். பெண்போராளிகளைப் பார்த்ததும் பூங்கொடி அச்சமடைந்தாள். வீதிநாடகத்தில் சரண்யா என்ற பெண் ஞாபகத்தில் வந்தாள். சரண்யா உடலில் குருதி வழிய ஓடிவந்து விழ நகங்கள் நீண்ட, பற்கள் நீண்ட, விகார முகங்கள். நீண்ட நகங்களால் சரண்யாவை கீறிக் குதறுவது... அவள் அவலக்குரல் எழுப்புவது..... பூங்கொடியின் மூச்சு அடைத்துக்கொண்டு வந்தது. ஒரு இருதய நோயாளியைப் போல சுருங்கினாள். முகம் வியர்த்தது.

"பேய்ப்பெட்டையள்... சட்டையளைப் போட்டுக்கொண்டு வந்திருக்கலாம்" என நினைத்தவளுக்கு கையில் எடுத்த சோடாவை குடிக்க மனம் வரவில்லை . பொதுச்சனங்கள் ஒரு இடமாகவும் பெண்போராளிகள் ஒரு இடமாகவும் ஆண்போராளிகள் வேறு இடமாகவும் காயப்பட்டவர்கள், நடக்கமாட்டாதவர்கள் வேறு இடமாகவும் பிரித்து வைத்திருந்தார்கள். வெள்ளை உடையில் நிற்கும் பாதருக்குப்பக்கத்தில் இராணுவத்தினரும் போராளிகளும் நின்றனர். பாதர் அந்தப் போராளிகளை அழைத்து இராணுவத்திடம் வந்திருந்தார். அவள் பாதரைப் பார்த்துக் கொண்டு இருக்க

"அக்கா ..."

திரும்பிப் பார்த்தாள். நக்கீரன் சிரித்தான். முகம் காய்ந்திருந்தது. முடி வெளிறி நுனிமுடி செம்படை பிடித்திருந்தது. கனநாட்கள் தோய்க்காத உடுப்பில் வெடுக்கு நாசியில் ஒட்டியது. கையில் இருந்த பையொன்றை அவளிடம் நீட்டினான். வாங்கியவுடன் கேட்டாள்

"கனக்குது பையுக்கை என்ன? "

"நகையள் இருக்கு"

அவனும் ஒரு பையை தோளில் போட்டிருந்தான். அந்த பொக்கணை வெளியில் பிணங்களைக் கடந்து போக, ஒரு கிடங்கில் இருந்து அவளைக்கண்டதும் சாரத்தால் முகத்தை மறைத்தவன் இவன்தான் என நினைத்தாள். அதே பழுப்பு நிறச்சேட்டைத்தான் இப்பவும் போட்டிருந்தான். இறந்தவர்களின் நகைகளை கழட்டி வலைஞர் மடத்தில் நகை வியாபாரம் செய்தவர்களில் இவனும் ஒருத்தன் என நினைத்தாள்.

நகைப்பையை வைத்திருக்கும்போது அருவருத்தாள். இறந்தவர்களின் உடலைச் சுமந்து செல்வது போன்ற உணர்வு அவளில். அவளுக்குப் பிணங்கள் என்றால் பயம். இவளவு வருடங்களில் இறந்தவர்களின் உடலை அவள் தொட்டுபார்க்கவில்லை. ஊரில் சாவீடுகளுக்குப் போனால் பிணத்துக்கு எட்டமாக இருப்பாள்.

பிணத்துக்குப் பக்கத்தில் கொளுத்தும் சாம்பிராணி வாசனையை சுவாசிக்கும்போது நினைப்பாள் பிணங்களில் இருந்து வரும் கிருமிகள் என்று.

அவன் இந்த நகைப்பையுடன் எப்படி சோதனையில் சிக்காது தப்பினான். அவர்கள் சிலரின் பைகளை பார்க்காமலே விட்டார்கள். சிலரின் பைகளை துருவித்துருவிப் பார்த்தார்கள். அவனின் அழுக்கு முகம் அவனை ஒரு பைத்தியம் மாதிரி நினைத்திருக்க வேண்டும். அவனிடம் பையை திருப்பிக்கொடுக்க நினைத்தாள். பையை அவனிடம் கொடுக்கும் போது அருகில் நிற்கும் சிப்பாய் பார்த்து பையை சோதனை செய்தான் என்றால் அவனை ஒரு நகைவியாபாரி என்று நினைக்கமாட்டான். அவனின் வயது, அவனின் தோற்றம், அவனின் அழுக்குப்படிந்த உடைகள்... அவன் பையைக் கொடுத்ததில் இருந்து அவளை விட்டு நகரவில்லை. அவள் நகைகளில் சிலதை எடுக்கக் கூடும் என அவன் நினைத்திருக்க வேண்டும். பஸ்கள் வர வர இருப்பவர்களை ஏற்றிக்கொண்டிருந்தார்கள். அவர்களை மஹரகம எனும் போர்ட் உள்ள பஸ்ஸில் ஏறும்படி அழைத்தார்கள். பஸ்ஸிலுள்ள சீற்றுக்கு அளவாகவே ஆட்களை ஏற்றினார்கள். தூரப்பயணம். நின்று பயணிக்க முடியாது. பஸ்ஸில் சனங்களை ஏற்றிக்கொண்டு பஸ் வெளிக்கிடும் போது முன்கதவில் இரண்டு சிப்பாய்களும் பின்கதவில் இரண்டு சிப்பாய்களும் நிற்பார்கள்.

"அக்கா ...' "ம்..." "என்னை ஆர் எண்டு கேட்டா உங்கடை மகன் எண்டு சொல்லுங்கோ"

அவன் பயந்துகொண்டு சொன்னான். அவளும் அப்படித்தான் நினைத்தாள். அவள் நினைத்ததைதான் அவனும் சொன்னான். அவள் தலையை அசைத்துக்கொண்டு கையில் இருந்த சோடாப் போத்தலை நிருபனுக்கு கொடுப்பதற்கு திரும்பி நிருபனைப் பார்த்தாள். நிருபனைக் காணவில்லை.

(வருவாள்)

# சொற்சிலம்பம் போட்டி

96

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| ■ | 9 | | 10 | | | ■ | |
| 11 | | ■ | 12 | | ■ | 13 | |
| | ■ | 14 | | | 15 | | |
| 16 | 17 | | | ■ | 18 | | ■ |
| 19 | | | ■ | 20 | | ■ | 21 |
| 22 | | ■ | 23 | | | | |

அனுப்புபவர் பெயர்:..................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................

கையொப்பம்:............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. மோக ஆசைமிக்கவன் 4. நீர்வெளியேறும் வழி 7. நலம் 8. திருமணத்தின்போது சிலர் இதனை அதிகமாகக் கேட்பார்கள். 9. மனைவியை இழந்தவன் 11. காய்களின் கொத்து 12. அதிக 13. தாண்டு 14. கெட்டு (கற்பிழந்து)போதல் 16. ஈகம் 18. தமது 19. நாடு 20. இணங்க 22. செய்த செயல் (பாவம்) 23. எல்லைப்படுத்தும் விதிகள்

## மேலிருந்து கீழ்

1.பணம் 2. புடைவையின் தலைப்பு 3. தடி 4. காமன் 5. செல்வ 6. கைகூப்புதல் 8. ஓர் உபதானியம் 10. செம்பு 11. பாண்டவரின் தாய் 13. அம்பு, வில், வாள் போன்ற ஆயுதம் 14. துக்கம் 15. உபதேசம் செய்பவன் 17. பிச்சை 20. பெருக்கல்குறி 21. புத்தகத்துக்கு இதைப் போடுவார்கள்.

### சொற்சிலம்பம் போட்டி 95 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.திருத்தந்தை 6. ரர்சி 7. கூற்றுவன் 8. தணிதல் 10. சைவர் 12. வசி 13. சமாத்தன் 15. 'கானம் 16. தருமதி 18. தம் 20. மம்மி 21. மன்னன்.

**மேலிருந்து கீழ்**

1.திராட்சை 2. ருசி 3. தரணி 4. தையல் 5. அன்னாசி 8. தர்மம் 9. தடித்த 11. வசனம் 12. வன்மம் 14. தருமன் 15. காதல் 17. திமில் 19. மீன்.

**சொற்சிலம்பம் போட்டி இல.96**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

உதயன் சஞ்சீவி

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு

19.08.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 95 இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
கபாஸ்கர் கயலவன்
ஆவரங்கால்,
புத்தூர்.

**2 ஆம் பரிசு**
த.மகேஸ்வரி
கனகபுரம், கிளிநொச்சி

**3 ஆம் பரிசு**
சி.பரிமளகாந்தன்
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
ந.பானுமதி
பிரதேச மருத்துவமனை,
மருதங்கேணி

**5 ஆம் பரிசு**
யோ. சங்கீதா
[illegible]

# மாம்பழப் புராணம்

13



○ கோகுலராகவன்

வாழ்க்கைப்பட்ட ஊரைப்பற்றியும் எழுதத்தானே வேண்டும். எழுத்தாளனுக்கு எல்லாம் தன் ஊர்தான். இப்போது என் வாழ்க்கைப்பட்ட ஊர் மீசாலை. 'மாசாலை என்பதுதான் மீசாலை ஆகியது' என்கிறாள் இந்த ஊர்க்காரி. 'இல்லையடி இந்த ஊர்க்காரர் பெரிய மீசை வைத்திருப்பார்கள் அதுதான் காரணம்' என்பேன் நான். ஆருக்கு தெரியும்?இருக்கட்டும். எழுதுவதைக் கவனிப்போமே. மாமரங்கள், பலாமரங்கள் நிறைந்த ஊர்தான் மீசாலை. மாமரம் ஆசியாவுக்கு உரித்தான பயிர், தமிழர்களின் சொந்தப் பயிர்.

தமிழ்நாட்டில் 15 ஆம் நாற்றாண்டில் தரையிறங்கிய போர்த்துக்கேயன் முதல்முதலாக மாம்பழத்தைத் தின்றுவிட்டு அதன் ருசியில் சொக்கிப்போனான்.

'இதற்கு என்ன பெயர்?" என்று கேட்டிருக்கிறான்.

"மாங்காய்" என்று பதில் வந்திருக்கிறது. அவ்வளவுதான், "மாங்கோ" தன்பாஷையில் உச்சரித்து விட்டு, தன் நாட்டுக்கு பழத்தினை எடுத்துச்சென்றான்.

மாங்காய் என்ற தூய தமிழில் உருவானதுதான் இதன் ஆங்கிலப் பதம். ஆங்கிலேயர் இந்தியாவில் இருந்து வந்த கப்பலை கைப்பற்றிய போது அதில் முழுவதும் மாம்பழங்கள் இருந்ததைக் கண்டனர். அப்போது ஆங்கிலேயர் பொன்னைக் கண்டதை விடவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கும்படி கேட்டபோது, அப்போதைய பிரிட்டன் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில்' மாம்பழம் சாப்பிட முடியாமல் போய்விடுமே?' என்று கவலைப்பட்டாராம். இருக்கும் , இந்தியாவைத் தின்றவர்கள்தானே. இந்தியாவில் நாற்றுக்கணக்கான மாவினங்கள் இருப்பதாகசொல்கிறார்கள். இலங்கையில் மாவினங்களின் இராணி 'கறுத்தக் கொழும்பான ' தான். இதன் சுவைக்கு இலங்கையர்கள் முழுப் பேரும் அடிமை.இந்த கறுத்தக் கொழும்பான் என்ற பெயர்க்காரணம் என்ன? இது கொழும்பு சார்ந்த மாமரம் அல்ல. கொழும்பான் என்ற பெயர் சரியுமல்ல . இன்னொரு மாமரம் உள்ளது வெள்ளைக் கொழும்பான். இதன் பழமும் தேன்சுவை கொண்டது. இந்த இரண்டு மா இனங்களும் வடக்கில் பிரபல்யமானவை .

இதில் கறுத்தக் கொழும்பானின் இலை .காய் இரண்டும் கரும்பச்சையாக இருந்ததால், அதைக்குறிக்கும் வகையில் 'கறுத்த' என உருவகிக்கப்பட்டது எனலாம்.

இதன் துளிர் (கொழுந்து) கூட கரும் பச்சையாகவே வெளிவரும் .எனவே 'கறுத்தக் கொழுந்தான்'என்பதே சரியாக வேண்டும். வெள்ளைக்கொழும்பானின் இலை காய் இளம்பச்சையாக இருக்கும். துளிர் (கொழுந்து) இளம்பச்சையாக வெள்ளையடிக்கும்.

இதனால் மாவினங்களின் துளிரின் வர்ணத்தை வைத்து இனத்தைச் சுட்டும் வகையில், 'கறுத்தக் கொழுந்தான், 'வெள்ளைக்கொழுந்தான்' என்றழைத்தது பின்னர் மருவி 'கறுத்தக் கொழும்பான்', 'வெள்ளைக்கொழும்பான்' என என வந்துவிட்டது போலும். இது எனது ஊகம்தான்.

இன்னுமொரு நண்பரிடம் விசாரித்தபோது "கொழும்பு மக்கள் அதிகம் விரும்பியதாலும், தொடர்ந்து கொழும்புக்கு அனுப்பப்பட்டதாலும் 'கறுத்தக் கொழும்பான்' என்பது காரணப் பெயராக வந்துவிட்டது"என்றார். எனக்கென்னவோ அது பொருத்தமானதாகத் தெரியவில்லை.

இன்னும் எம் பிரதேச மாம்பழங்களான விலாட்டு ,அம்பலவி அல்லது கிளிச்சொண்டன் ஆகியவையும் மிகவும் சுவையானவை. [illegible] பலவற்றை இழந்து [illegible] எனது அம்மப்பாவின் வளவில் 'மேளம் தூக்கி' என்று ஒருவகை மாமரம் நின்றது. ஒரு பழம் ஒருகிலோ வரும். மத்தியானச் சாப்பாட்டுக்கு ஒரு பழம் போதும்.

அந்த இனம் இப்போது வடக்கில் இருப்பதாகத் தெரியவில்லை, அழிந்து விட்டதா? இன்னமும் பல சுதேச மாவினங்கள் அழிவின் விளிம்பில் இருப்பதாகப் படுகிறது.

வைரக்கண்டு, பாண்டி, சேலம், பச்சைத் தண்ணி, அலரி, களைகட்டி, நீலம் , சங்கு, புளிமா போன்றவையே அவை. இவற்றை மீளவும் பண்ணையாளர்கள் உற்பத்தி செய்ய வேண்டும்.

இப்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள சில மாவினங்களான றொம்ஜேசி போன்றவற்றை, நானும் மாம்பழங்கள் உச்சம் என நினைத்து சாப்பிட்டேன்.

பெருஞ்சுவை இல்லை.கறுப்பிக்கு (கறுத்தக் கொழும்பானுக்கு) கீழேதான். இந்த இனம் இனிமேல் புதிய மருவிய இனங்கள் உருவாக காரணம் ஆகிவிடும்.

மாம்பழத்துக்கும் சைவசமயத்துக்கும் நிறையத் தொடர்பு உண்டு. ஞானப்பழக்கதை

## இருந்து சுதைப்பம்

மாம்பழத்தால முருகன் ஆண்டியான கதை. காரைக்கால அம்மையார் மாம்பழத்தால் துறவியான கதை. சைவசமயத்தில் வரும் முக்கனிகளில் மாம்பழமும் ஒன்று.

பாடல்களில் வர்ணிப்பதற்கும் மாம்பழமே எப்போதும் முன்னணி.

"மாம்பழத்து வண்டு
வாசமலர் செண்டு" இது கண்ணதாசன் பாடல், படம் "சுமைதாங்கி" .

பல்லவி இவ்வாறே தொடங்கும். மாம்பழத்தில் வண்டு இருந்தால், சாப்பிட அருவருக்கும். அதையே சிறப்பாக்கி விட்டார் கவிஞர். பூக்களை நாடியே வண்டு வரும்.மாறாக வண்டு நாடி வந்து அதனுள் வாழும் ஒரே பழம் மாம்பழம்தான்.

"கனிகளிலே அவள் மாங்கனி"
என்பார் கண்ணதாசன்.

"குண்டு மாங்காய் தோப்புக்குள்ளே"
என்கிறது இன்னொரு பாடல்

இன்னொரு பாடல்
"மாம்பழமாம் மாம்பழம்
சேலத்து மாம்பழம் நீதானடி."

பெண்களை பூவாகவே அதிகம் வர்ணிப்பர். பழத்தில் அதிகம் வர்ணிப்பது மாம்பழம் மட்டுமே.

"ஆப்பிள் பெண்ணே நீ யாரோ"
என்பது கொஞ்சம் செயற்கையாகத் தோன்றவில்லையா? சங்க இலக்கியத்தில் மாம்பழம் ,பலாப்பழம், தேன் ஆகியவற்றை ஊற வைத்து உருவாக்கிய மதுவை போர்வீரர்கள் அருந்தியதாக வருகிறது.

மாம்பழம், பழங்களின் அரசன்

(இன்னும் சுதைப்பம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org